Registered as a News Paper

# ஈழநாதம்

Eelanatham　　வெள்ளிநாதம்

பக்கங்கள்:16　　விலை:12.00

நாதம் 13　திருவள்ளுவர் ஆண்டு 2033　ஆவணி -14　30 - 08 - 2002　வெள்ளிக்கிழமை　ஓசை 193

லாலாவின் அதிஷ்ட லாபச் சீட்டு

ரிக்கெற் 5/= மட்டும்

25 பேருக்கு பரிசுகள் வழங்கப்படும்.எமது விளம்பர நோக்கத்துக்காக குறைந்த விலையில் இப்பரிசுத் திட்டத்தை மாதா மாதம் நடத்தவுள்ளோம்.
மிக விரைவில் எதிர் பாருங்கள்!

லாலா - அச்சுவேலி (சீ.7340)


சமாதானக் காரணிவெல் பக்கம் 05


தமிழரின் தாயகக்... பக்கம் 06


ரசிகன் - தொண்டன் பக்கம் 07


மனம் பொருந்தினால்... பக்கம் 08

## தாய்லாந்து பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கலந்து கோள்வார்



சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் கலந்து கொள்கின்றார்.

இவர் அரசின் பிரதிநிதியாக கலந்துகொள்கின்றாரா அல்லது முஸ்லிம்களின் பிரதிநிதியாக கலந்துகொள்கின்றாரா என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

இது குறித்து அமைச்சரும் கட்சியின் தலைவருமான ஹக்கீம் தெரிவிக்கையில்:

பேச்சுவார்த்தையில் முஸ்லிம் காங்கிரசும் ஒரு தரப்பாக கலந்து கொள்ளப் போகின்றதா ? முஸ்லிம் காங்கிரஸ் அரச தரப்பில் ஒரு அங்கமாக போகிறதா? என்பது ஒரு பிரச்சினையாக உருவாகிக்கொண்டு வருவதைப்போல் எங்களுக்குத் தெரிகிறது இதைத் தீர்ப்பதற்கும் விடுதலைப் புலிகளுடனான எங்களது உடன்பாட்டில் முஸ்லிம்களை பேச்சுவார்த்தையில் ஒரு தரப்பாக அங்கீகரிப்பதற்கும் என்ற முடிவும் காணப்பட்டது.

இது சம்மந்தமான சரியான விளக்கம் ஒன்றையும் தாங்கள் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் பேச்சு வார்த்தைக்கு முன்பாக எழுந்துள்ளதாக தாங்கள் உணர்வதாகவும் அந்த அடிப்படையில் புலிகளின் அரசியல் ஆலோசகருடன் லண்டனில் இது சம்மந்தமாகவும் பேச்சு வார்த்தைகளின் கட்டமைப்பு சம்பந்தமாகவும் முன்கூட்டி பேசுவது நல்லது எனத் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக ஒரு தரப்பாக போகவேண்டும் என்று கூறுவதிலும் பேச்சு வார்த்தையில் எவ்வாறு கலந்துகொள்கிறோம் என்பதை அடிப்படையாக வைத்து முஸ்லிம்களின் பிரதிநிதியாக நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதைத்தான் நாங்கள் விரும்புகின்றோம் என்றும் சற்று மயக்க நிலையில் சரிவர தெளிவில்லாத ஒரு நிலைப்பாடு இருந்து கொண்டிருப்பதாக எனக்குத் தெரிகிறது என தெரிவித்த ரவூப் ஹக்கீம் இதில் தெளிவு காணப்பட வேண்டும் இந்த பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுடைய நலன்களும் சரிவர உள்வாங்கப்பட்டு அனைத்து முஸ்லிம்களின் பிரச்சினைக்கும் ஒரு தீர்வு வருவதற்கான நிலைமையை உருவாக்க வேண்டும். இதை உருவாக்குவதற்கு அரசோடும் புலிகளோடும் நாங்கள் ஒரு உடன்பாட்டைக் காணவேண்டியுள்ளது என்றார் .

# தாய்லாந்தின் துறைமுக நகரான சத்தாகித்தில் அரசு – புலிகள் முதல் கட்டப் பேச்சு வார்த்தை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சு வார்த்தைகள் தாய்லாந்தின் கிழக்கில் உள்ள துறைமுக நகரான சத்தாகித்தின் கடற்படைத் தளத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களை ஆதாரம் காட்டி ரொய்ட்டர் செய்திஸ்தாபனம் இத்தகவலை தெரிவித்துள்ளது.

இரு தரப்புக்களும் பாதுகாப்பு கருதி தாய்லாந்தின் வளைகுடா பிரதேசத்தில் அமைந்திருக்கும் இந்த தளத்தை தெரிவு செய்துள்ளதாக அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எதிர்வரும் செப்டம்பர் 16ம் திகதி ஆரம்பமாகும் மூன்று நாள் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு மிகவும் நெருங்கிய நடுநிலையான ஸ்தாபனம் தாய்லாந்து எனக் கருதப்படுகின்றது.

இரு தரப்பில் இருந்தும் பிரதான பேச்சாளர்கள் ஊடகங்களுக்கு அறிக்கைகளை விடுவதை அடுத்து பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் இருதரப்பினரும் நோர்வே ஏற்பாட்டாளர்களுடன் மூடிய அறைக்குள் சந்திப்பார்கள் எனவும் அத்தகவல் மேலும் தெரிவிக்கின்றது.

## தொண்டமனாறு மீனவர்கள் மீன்பிடிக்க படையினர்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்குடா நாட்டில் வடமராட்சி-தொண்டமனாறு பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட சிறிலங்காப் படையினர் தடை விதித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மாலைமுதல் விதிக்கப்பட்டிருக்கும் இந்தத் தடை காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சமாசத்தினர் உடனடியாகபோர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.




## வடக்குக் கிழக்கு இடைக்கால சபை தாமதமின்றி நிறுவப்பட வேண்டும்

### சமாதானத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பு

அரசாங்கம் தாமதமின்றி வடக்கு கிழக்கிற்கான இடைக்கால சபை ஒன்றை நிறுவ வேண்டும் என்று சமாதானத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு அரசாங்கத்தை கேட்டுள்ளது.

எந்தவொரு நிபந்தனைகளும் இல்லாது விடுதலைப்புலிகள் மீதான தடைகளை நீக்குவதுடன் அடுத்தமாதம்தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக தடைநீக்கம் பற்றி அரசு உறுதியளித்ததை அது நினைவு கூர்ந்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் மீண்டும் தடைகள் விதிக்கப்படும் என்று தோன்றுகிறது என்று அந்த அமைப்பு மேலும் சுட்டிக் காட்டியள்ளது..

## வடமராட்சியில் படைநிலைகளை அகற்றக்கோரி மக்கள் போராட்டங்களை நடத்த ஏற்பாடு

யாழ் வடமராட்சிப் பகுதியில் மக்கள் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

பொதுக்கட்டடங்களில் தொடர்ந்தும் சிறிலங்கா படையினர் நிலை கொண்டுள்ளமையை கண்டித்தும், பிரதான வீதிகளை திறந்துவிடக் கோரியும் இந்தப் போராட்டங்கள் நடாத்தப்பட இருக்கின்றது.

வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியை அண்மித்த பகுதியில் உள்ள பொதுக்கட்டடங்களில் இருந்து படையினர் வெளியேறாததைக் கண்டித்தும் 524வது படையணி முகாம் அமைந்துள்ள பகுதியில் பிரதான வீதிகள் திறக்கப்படாமையைக் கண்டித்தும் இந்தப் போராட்டங்கள் நடாத்தப்பட வுள்ளன.

அடுத்த வாரப்பகுதியில் இப்போராட்டங்கள் நடாத்தப்படவுள்ளதாக யாழ் வெகுசன அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ். சாலை, கிளிநொச்சி. 30-08-2002

# இயலாமையின் வெளிப்பாடு

சிறிலங்கா அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும் அரசியல் தீர்வு என்று கூறிக்கொண்டு நாட்டை விடுதலைப் புலிகளிடம் தாரை வார்த்துக் கொடுக்கப் போவதாக ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளரான விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சிறிலங்காவில் மிகவும் பொறுப்பு மிக்க தேசபக்தர்களாக தம்மை இனங்காட்டப் பிரயத்தனம் செய்யும் ஜே.வி.பி.யினர் தமது ஆரம்பகால சமதர்மக் கோட்பாடுகளை அரசியல் இலாபம் கருதி ஒருபுறம் மெதுவாக ஒதுக்கி வைத்துவிட்டு அல்லது முழுமையாகக் குழிதோண்டிப் புதைத்து விட்டு சராசரி மூன்றாம்தரக் குணாம்சங்களைக் கொண்ட சந்தர்ப்பவாத அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கி பலவருடங்களாகி விட்ட நிலையில் இன்றைய அரசியல் சூழலில் சிங்கள பௌத்த பேரினவாதக் கோட்பாட்டினை ஏனைய பேரினவாதத் தலைமைகளை விடவும் பலமடங்கு பிரச்சாரம் செய்வதன் மூலம் தங்களின் பௌத்தமத பக்தியையும் சிங்கள பேரினவாத விசுவாசத்தையும் அப்பட்டமான வகுப்புவாதச் சித்தாந்தங்களின் அடியொற்றிச் செல்லும் பொ.ஐ.முன்னணியை முண்டு கொடுத்து ஆதரிக்க முயலும் மனப்பக்குவத்தையும் அப்பட்டமாகவே வெளிப் படுத்தியுள்ளனர்.

1970களின் ஆரம்பத்தில் சிறிலங்காவை ஒருமுறை குலுக்கியெடுத்த ஜே.வி.பியினரின் கிளர்ச்சி நடவடிக்கைகள் மக்களின் கவனத்தை குவிமையப் படுத்தியபோது அவர்கள் 'சேகுவேரா'க்கள் என அழைக்கப்பட்டு வரும் புரட்சிக்காரர்களாக வியப்புடனும் பயத்துடனும் அவதானிக்கப்பட்டனர்.

சிறிலங்காவில் ஒரு ஆயுதப்புரட்சியை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றுவது குறித்து எவருமே பெரிதும் அலட்டிக்கொள்ளாமல், அக்கறை கொள்ளாமல் இருந்தபோது திடீரென அந்தக் கிளர்ச்சி வெடித்தது. அப்போதைய சிறிமாவோ அரசு - அதுவும் இடதுசாரிக் கூட்டணி அரசு இன்னமும் கூறுவதானால் 'சோசலிஸ' தத்துவம் பேசிக் கொண்டு ஆட்சிபீடம் ஏறிய அரசு அவர்கள் ஆட்சிபீடம் ஏற பெருமளவில் ஆதரவு வழங்கிய ஜே.வி.பி.யினரின் கிளர்ச்சியை அயல்நாட்டு சக்தியொன்றின் இராணுவத் துணையைக் கொண்டு அடக்கி நிர்மூலமாக்கியது.

பாட்டாளி மக்களின் புரட்சி இளைய தலைமுறையினரின் அரசியல் எழுச்சி என்று கூறிக்கொண்டு ஜே.வி.பி.யினரின் பின்னால் அணிதிரண்ட மற்றும் அணிதிரள முயன்ற சிங்கள இளைஞர்கள் பல்லாயிரக் கணக்கில் ஆண்பெண் வேறுபாடின்றி கொன்றொழிக்கப்பட்டார்கள்.

அதன் பின்னர் 1987 முதல் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டாவது தடவை, இந்திய இராணுவத்தின் வருகையைத் தொடர்ந்து இந்திய எதிர்ப்பு அலையாக தொடங்கிய ஜே.வி.பியின் கிளர்ச்சியை அப்போதைய பிரேமதாச அரசு தலைமையுடன் துவம்சம் செய்தழித்தது.

மீண்டும் தென்பகுதியில் சிங்கள இளைஞரின் இரத்தம் பெருகியது. புனித கங்கைகளில் அன்றாடம் அவர்களின் சடலங்கள் மிதந்து சென்றன. சந்திகளின் பிரதான இடங்களில் டயர் போட்டு எரிக்கப்பட்ட சடலங்களின் கருகிய எச்சங்களைத் தரிசிக்க வேண்டிய அவலகாலைகளாக அந்த நாட்கள் விடிந்து கொண்டிருந்தன.

ஜே.வி.பியின் தொலைநோக்குச் சிந்தனையற்ற கொள்கைகளும் தீர்க்க தரிசனமற்ற நடவடிக்கைகளும் தென்பகுதி. சிங்கள இளைஞர்களை தவறான பாதையில் இட்டுச் சென்றதுடன் அவல அழிவுகளையும் சந்திக்க வைத்தது.

எனினும் வரலாற்று அனுபவங்களில் இருந்து அவர்கள் ஒருபோதும் பாடம் கற்றுக் கொண்டதே கிடையாது. ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், கண்டன அறிக்கை வெளியீடுகள், ஊர்வலங்கள் இவற்றை மட்டுமே நம்பி வரண்ட சித்தாந்தங்களின் அடிப்படையிலான அதேசமயம் ஆத்மார்த்தமான ஈடுபாடு எதுவுமற்ற கொள்கையற்ற அரசியல் தளமே ஜே.வி;பி.யின் இன்றைய தலைமையின் களமாகி விட்டது.

இப்போதைய அவர்களின் சமகால சிந்தனை பேரினவாதம் சார்ந்தது. விடுதலைப் புலிகளையும் சமாதான நடவடிக்கைகளையும் எதிர்ப்பதை இலக்காகக் கொண்டது. சிங்கள மக்களின் மத வெறியையும் சிறுபான்மை சமூகத்தவர்களுக்கு எதிரான உணர்வையும் தூண்டிய அரசியல் இலாபம் பெற நினைப்பதை அடிப்படையாகக் கொண்டது. சமாதான நகர்வுகளுக்கு எதிராக மக்களை தூண்டி குழப்பங்களை ஏற்படுத்தி அதன் மூலம் மட்டரகமான அரசியல் ஆதாயத்தை பெற நினைக்கும் மூலோபாயத்தைக் கொண்டது.

இதன் தளத்தில் நின்று கொண்டுதான் ஒரு காலத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாக தமது தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டவர்களான ஜே.வி.பி.யினர் இப்போது பச்சை இனவாதம் பேசி வருகின்றனர். இனவாத்தின் பிதாமகர்களான சிகல உறுமயக்காரர்களே வாயடைத்துப் போகும் அளவிற்கு பேரினவாத வெறியைத் தூண்டி சிங்கள மக்கள் மத்தியில் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

இன்றைய சிறிலங்க சனாதிபதியின் கணவரான விஜயகுமாரணதுங்கவை படுகொலை செய்தவர்கள் என்று சனாதிபதியாலேயே விரல் சுட்டிக் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அதே சனாதிபதிக்கு ஆதரவான நிலைப்பாட்டை சமாதான நகர்வுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒன்றாக எடுத்திருக்கிறார்கள்.

அவர்களின் செஞ்சட்டை வேஷம் கலையத் தொடங்கிவிட்ட காலம் இதுதான். ஒரு காலத்தய சமதர்ம கோஷ்டிகளின் இனவாத முகம், சுயரூபம் இப்போது வெளிப்படையாகவே தெரியத் தொடங்கியுள்ளது.

இவர்களின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகள் இயலாமையின் தமது ஒரு காலத்தய ஆயுதப் போராட்டத் தோல்வியின் காரணமாக எழுந்த தாழ்வுச் சிக்கலின் படுமோசமான வெளிப்பாடென்றே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

எது எப்படியோ விடுதலைப் புலிகளுக்கும் சமாதான நகர்வுகளுக்கும் எதிரான ஜே.வி.பி.யினரின் செயற்பாடுகளின் விளைவுகள் தென்பகுதி மக்களுக்கு மிகவும் மோசமான பாதிப்புக்களை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்பதை அந்த மக்கள் புரிந்து கொண்டால் போதும். ♦



# ஜே.வி.பி.யுடன் இணைந்து போட்டியிட பொ.ஐ.முன்னணி தயாராகிறது

-அனுரா பண்டாரநாயக்க



ஜே.வி.பியுடன் இணைந்து


பொதுத் தேர்தலில் போட்டியிட பொ.ஐ.முன்னணி தயாராகி வருவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிரணியில் உள்ள ஜே.வி.பியும் பொ.ஐ.முன்னனியும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருவதாகவும் இரு கட்சிகளும் இணைந்து தேர்தலில்போட்டியிடுவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 18வது சட்டத்திருத்தம் ஆளும் அரசினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் அது எதிர்க்கட்சிகளினால் தோற்கடிக்கப்படும் என்றும் அவர் சூளுரைத்துள்ளார்.

# சமதான பேச்சுக்கு முன்னர் லண்டனில் ஹக்கீம் பாலாவை சந்தித்து பேசுவார்





விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களை சந்திப்பதற்கென அடுத்த மாத முதல் வாரத்தில் லண்டன் பயணமாகவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 16ம் திகதி சிறிலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையில் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தொடர்பான விபரங்களை ஆராய்வதற்கு அவர் லண்டன் பயணமாகவுள்ளதாக தெரிவித்துள்ளா.

இதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல்பீடம் ஹக்கீம் தலைமையில் கூடி ஆராய்ந்துள்ளது. நேரடிப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அரசின் பிரதிநிதியாக கலந்து கொள்வதா? அல்லது முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக கலந்து கொள்வதா? என்பது குறித்து அங்கு ஆராயப்பட்டுள்ளது.

# பத்து வெளிநாட்டு பிரதிநிதிகள் இன்று வன்னிக்குவருகை

(அலுவலக நிருபர்)

கரித்தாஸ் நிறுவன வெளிநாட்டு பிரதிநிதிகள் பத்துப் பேர் கொண்ட குழுவினர் இன்று வன்னிக்கு வருகை தருகின்றனர்.

இவர்கள் வன்னியில் மேற்கொண்டு வரும் தங்கள் நிறுவனத்தின் செயற்பாடுகளை அறிவதுடன் மேலும் செயற்திட்டங்களை வன்னியில் மேற்கொள்வது தொடர்பாக ஆராயும் பொருட்டு இங்கு வருகை தந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இன்று காலை 10:00 மணிக்கு இக்குழுவினர் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் அவர்களை சந்தித்து அக்கராயன் ம.வி. மற்றும் பாடசாலைகளையும் பார்வையிடவுள்ளதாகவும், உரையாடவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கியூடெக் நிறுவன கிளி/முல்லை மாவட்ட இயக்குநர் அருட்தந்தை சூசைநாதன், இணைப்பாளர் கணேசபிள்ளை ஆகியோர் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பேச்சு வார்த்தைக்கு முன் தடை நீக்கம் திருச்சபையின் நிலைப்பாடு இதுவே

-மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு

(லண்டன்)

பேச்சுவார்த்தைக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதே கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாடு என மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவண இராஜயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு ஒன்று ஏற்படும் வரை விடுதலைப் புலிகள்மீதான தடை நீக்கப்படக்கூடாதென சமயத் தலைவர்கள் பேரவையின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டிருந்தனர். இது குறித்துக் கருத்துத்தெரிவித்த ஆயர் சமயத் தலைவர்கள் பேரவையில் கத்தோலிக்கத் திருச்சபை அங்கம் வகித்தாலும் இந்த அறிவிப்புக்கும் திருச் சபைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை எனக் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டு அவை வெற்றிபெற வேண்டும் என்பதே கத்தோலிகத் திருச்சபையின் எண்ணமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சமயத்தலைவர்களின் பேரவையின் கருத்து எனக் கூறி தமது சொந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.. இது பேரவையின் கருத்தல்ல எனவும் ஆயர் அதிவண இராயப்பு ஜோசப் ஆண்டகை மேலும் தெரிவித்துள்ளார்.

## ரத்வத்தை குடும்பத்தினரின் வங்கிப் பாதுகாப்பு பெட்டகம் சி.ஐ.டி யினரால் சோதனை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, அவரது மனைவி ஆகியோருக்குரிய பல பாதுகாப்பு வைப்பு பெட்டகங்களை சி.ஐ.டியினர் ஆராய்ந்துள்ளனர்.

கொழும்பில் உள்ள பிரபல தனியார் வங்கி ஒன்றில் இவர்கள் இருவரும் இந்த பாதுகாப்பு பெட்டகங்களை வாடகைக்குப் பெற்றிருந்தனர். இவற்றில் சிலவற்றை நேற்று முனதினம் பரிசீலித்த போது ஐம்பது லட்சம் ரூபாவும் பல ரகசிய ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனுருத்த ரத்வத்த இந்த விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## -வவுனியாவில் தங்கியுள்ள- 474 இடம்பெயர்ந்த குடும்பங்கள் முல்லையில் குடியமர விருப்பம்

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களிலும், நண்பர்கள். உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ள 474 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மீண்டும் வருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா-சுகுமார் தெரிவித் துள்ளார்.

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களில் 157 குடும்பங்களைச் சேர்ந்த 714 அங்கத்தவர்களும், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் உள்ளவர்களில் 317 குடும்பங்களைச் சேர்ந்த 1182 அங்கத்தவர்களும் முல்லை மாவட்டத்தில் மீளக்குடியமர சம்மதம் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான நிதியினை முல்லை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு புனர்வாழ்வு அமைச்சை வவுனியா அரசாங்க அதிபார் கே. கணேஷ கோரியுள்ளதாக, முல்லை அரச அதிபர் தெரிவித்தார். (08)

## இலங்கை வங்கியின் 63வது நிறைவு விழா

(அலுவலக நிருபர்)


இலங்கை வங்கியின் 63வது நிறைவு விழா இலங்கை வங்கி கிளைகள் அனைத்திலும் தற்போது கொண்டாடப்பட்டு வருகின்றது.

மேற்படி விழா இன்று பி.ப 4.00மணிக்கு கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையில் கொண்டாடப் படவுள்ளது.

இலங்கை வங்கி வன்னிப் பிராந்திய முகாமையாளர் வீ. ஐயம் பெருமாள் தலைமையில் இன்று நடைபெறவுள்ள இவ்விழாவில் வங்கிஊழியர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கிளி. இலங்கை வங்கி கிளை முகாமையாளர் வேண்டியுள்ளாா. (சோ)

காலங்கள் மாறுவதில்லை; மனிதர்கள்தான் மாறுகின்றனர். ● -திபெத் நாட்டுப் பழமொழி

# பிறமுக அறிமுகம்



## நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன

சிறிலங்காவில் இன்னமும் 'சாயம்' போகாத, இடதுசாரிக் கொள்கைகளை அதிகபட்ச அளவுக்கு கடைப்பிடித்து வரும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவின் அரசியல் அதிகம் கறைபடியாத ஒன்று என்று கூறலாம்.

ஆனால் அவர் கூறும் புரட்சிவாத அரசியல் சிங்களப் பெரும்பான்மை சமூகத்த வரிடையே வேரூன்றாது விலாசமற்று இருப்பதற்கான காரணம் அவரை விடவும் தீவிர புரட்சிவாதமும் வரட்டுச் சித்தாந்தமும் பேசிய சிறிலங்காவின் ஏனைய பல இடதுசாரிக் கட்சிகளின் குத்துக் கரணங்களேயாகும்.

இடதுசாரிகள் என தம்மை ஒருகாலத்தில் கம்பீரமாக இனம்காட்டிய கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும், லங்காசமசமாஜக் கட்சியினரும் 'வலதுசாரி'கள் விரித்த வலையின் மேல் இருந்த பதவிக் கதிரைகளின் சுகம் நாடிச்சென்று கொள்கைகளை கோட்டைவிட்டு 'சந்தர்ப்பவாத சோசலிசம்' பேசத் தொடங்கிய போதுதான் சிறிலங்காவின் சிங்கள இடதுசாரித் தலைமைகளின் 'இயலாமை' மக்களின் முன்னால் வெளிப்படத் தொடங்கியது.

இந்த நிலையில் கொண்ட கொள்கையில் தீவிர பற்றுக் கொண்டவராக, தன்னை வெளிப்படுத்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன நவசமசமாஜக் கட்சியை உருவாக்கினார்.

சிறிலங்காவின் அரசியலில் கொள்கைகள் விலைபோகாத சரக்கு எனத் தெரிந்தும் கூட அவர் இன்றுவரை தனது கருத்துக்களில் பல தடவைகளில் தடம்புரண்ட போதிலும்கூட, மீண்டும் சமாளித்து எழுந்து இன்றுவரை இடதுசாரித் தத்துவம் பேசிவருவதாக, இவர் சிறிலங்காவின் பெரும்பான்மை சமூகத்தவரால் இன்னமும் ஒரு தலைமைத்துவ சக்தியாக-பேரினவாதக் குரலாக இனங்காணப்படவில்லை.

எனினும் ஓரளவு கொள்கைப்பிடிப்புள்ள சோசலிசவாதியாக அறிவுஜீவிகளாலும் அடிக்கடி குத்துக்கரணம் அடிக்காத ஒரு அரசியல் கோட்பாட்டாளராக பொதுமக்களாலும் இவர் அடையாளமிடப்பட்டுள்ளார்.

ஒருபோதும் பேரினவாத சிந்தனையாளருடன் சமரசம் செய்து அரசியல் நடத்தவோ, பௌத்த மதபீடங்களின் ஆசிக்காக மதவாதம் பேசவோ இவர் முற்பட்டதில்லை என்பது இவர் பற்றிய ஒரு 'மாறுபட்ட அரசியல்வாதி' வடிவத்தை மனதில் உருவாக்க போதுமானதாகும்.

இடதுசாரிச் சக்திகளிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்த பலதடவை முயன்று தோல்வியடைந்த கசப்பான அனுபவம் இவருக்குண்டு. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சில நடவடிக்கைகளை அவ்வப்போது இவர் விமர்சித்து வந்தபோதிலும், விடுதலைப்புலிகள் அமைப்பு தமது பலத்தை இந்த அளவுக்கு கட்டியெழுப்பாதிருந்திருந்தால் தமிழ்மக்களின் உரிமைகள், மற்றும் தாயகப் பிரதேசம் பற்றிய கவனம் இந்த அளவுக்கு இவ்வளவு தூரம் சென்றிருக்காது எனவும் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் போராட்டத்தை தேசிய இனவிடுதலைப் போராட்டமென ஒப்புக்கொள்ளும் இவர், தென்பகுதி புரட்சிகர சக்திகளையும், உள்ளடக்கி அவர்களின் ஆதரவையும் வென்று போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும் என நடைமுறை யதார்த்தத்திற்கு சாத்தியமற்ற கருத்தையும் முன்வைக்கிறார்.

தமிழமக்களின் விடுதலையை வெள்ளைக்காரர்களோ ஏகாதிபத்திய சக்திகளோ நிர்ணயிக்கப் போவதில்லை என உரத்துப் பேசும் இவர். இந்த சக்திகள் இனப்பிரச்சினைக்கு பொய்யானதோர் தீர்வைத் திணித்து தமிழ்மக்களை மீண்டும் சிறைப்படுத்தும் இடத்திற்கு துரத்திவிடவே முயற்சிக்கின்றனர் என்றும் கூறியுள்ளார்.

இனவாதத்திற்கு எதிராக சலியாது குரல் கொடுத்துவரும் இவர் சிகலஉறுமய கட்சியினரை குருமான மனிதர்கள் என வர்ணித்துள்ளார். தற்போது சந்திரிகாவையும், ரணிலையும் கடுமையாக விமர்சிக்கும் இவர் இருவருமே இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய அடிப்படையில் நியாயமான தீர்வை தமிழர்களுக்கு வழங்கப் போவதில்லை என்றும் கூறுகிறார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஜே.வி.பி அங்கீகரித்தால் அதனுடன் இணைந்து செயற்படத்தயார் என்றும் ஒரு தடவை இவர் அறிக்கை விட்டிருந்தார்.

புரட்சிகர அரசியல் பற்றிய பேசினாலும், பாராளுமன்ற பதவியாசை அற்றவர் என்றோ, ஜனநாயக தேர்தல் முறைகளுக்கு விரோதமானவர் என்றோ கூறிவிட முடியாது.

ஐ.தே. கட்சியை எதிர்க்க வேண்டுமென்றதற்காக சந்திரிகா முன்பு மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின் போது 'அதனை ஒரு புரட்சிகரப் பயணத்தின் தொடக்கம்' என்றுகூறி சிவப்பு விளக்கம் கொடுத்து 'கோமாளித்தனமும் அதனை ஆதரித்து பிரச்சாரம் செய்த வரலாறும் இவருக்குண்டு, இவர் ஆரம்பித்த சந்திரிகா அரசுக்கு ஆதரவான 'இடதுசாரிச் சமாதான இயக்கம்' இவரது அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட தவறாகும், கறையுமாகும்.

தமிழர்கள் இந்த நாட்டில் வாழும் தணித்துவ அடையாளங்கள் மிக்கஇனம். அவர்களுக்கு பிரிந்து போவதற்கான உரிமையுண்டு. அவர்களின் உரிமைகள் காலம் காலமாக மறுக்கப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொண்டு அதனை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை மூலம் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று கூறும் கருணாரத்ன- சிறிலங்காவைப் பொறுத்தமட்டில் அரசும் எதிர்க்கட்சிகளும் இணக்கப்பாட்டிற்கு வரும் எனக் கூறமுடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

எப்படியானாலும்,

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக நீண்டகாலம் வலியுறுத்திக் கூறிவரும் சிங்கள இடதுசாரி குரலாக இவரது குரல் ஒலித்து வருவது குறிப்பிடப்படவேண்டியதேயாகும்.

ஆனாலும், அவ்வப்போது பதவியை இலக்குவைத்து பொ.ஐ.முன்னணிக்கு வக்காலத்து வாங்குவதும் பின் அதனை எதிர்ப்பதும் வேடிக்கையானதாகும்.



# ஜனாதிபதியின் வேட்டைப்பற்களைப் பிடுங்க சர்வசன வாக்கெடுப்புத் தேவையில்லை

மு.திருநாவுக்கரசு

"...ஜனாதிபதியினால் நாடாளுமன்றம் கலைக் கப்பட்டதன் விளைவாகப் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டுள்ள விடத்து, அத்தகைய பொதுத் தேர்தற் திகதியிலிருந்து ஓராண்டு காலம் முடியும்வரை, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் படி நாடாளுமன்றம் தீர்மானத்தின் மூலம் ஜனாதிபதியை வேண்டினாலொழிய, ஜனாதிபதி, இரண்டாந் தடவையாகவும் நாடாளுமன்றத்தைக் கலைத்தலாகாது."

நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பதற்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென பொதுசன ஐக்கிய முன்னணி கூறுகின்றது. நாடாளுமன்றத்தில் இதற்கான திருத்தம் $^3/_2$பங்கு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதுடன் சர்வசன வாக்கெடுப்பிலும் வெற்றிபெற வேண்டுமென மேற்படி முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பு நிபுணர்கள் கூறுகிறார்கள் என அமுனுகம கூறுவது வேண்டுமென்று மக்களையும், கட்சிமாறி வாக்களிக்கத்துடிக்கும் தமது கட்சி எம்.பிக்களையும் குழப்புவதற்கே. அரசியல் யாப்புரீதியாக இதில் ,எவ்வித உண்மையும் இல்லை. நாடாளுமன்றத்தில் $^3/_2$ பங்கு பெரும்பான்மையைப் பெறுவதுடன் மட்டுமே, சர்வசன வாக்கெடுப்பின்றி நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைக்கவோ, இரத்துச் செய்யவோ முடியும்.

நேரடியான அர்த்தத்தில் சர்வசன வாக்கெடுப்பிற்கு எனக் குறித்தொதுக்கப்பட்ட சரத்துகள் 1,2,3,6,7,8,9,10,11,30(2),62(2) என்பன மட்டுமே. அத்துடன் இச்சரத்திற்களுக்கு ஒவ்வாத வகையில் திருத்தங்களோ, புதிய சட்டங்களோ அமைய முடியாதென்பது.

முதலாவதாக நேரடியான அர்த்தத்திற் பார்க்கும் போது நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் சம்பந்தப்படும் சரத்து 70ஆவது சரத்தே. இங்கு 70ஆவது சரத்தில் 7பிரிவுகளும், 6உபபிரிவுகளும், 6உட்பிரிவுகளும் உள்ளன. இங்கு 70ஆவது சரத்தை முழுமையாக நீக்கவோ, திருத்தவோ $^3/_2$பங்கு பெரும்பான்மைப்பலம் மட்டுமே போதும். இதில் எந்தொரு பிரிவையோ, உபபிரிவையோ, உட்பிரிவையோ இவ்வாறே திருத்தலாம்.

70ஆவது சரத்தின் 1ஆம் பிரிவின் (அ) உபபிரிவே நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் சம்பந்தப்பட்ட சரத்தாம். இதிற் பின்வருமாறு கூறப்படுகின்றது-

"...ஜனாதிபதியினால் நாடாளுமன்றம் கலைக் கப்பட்டதன் விளைவாகப் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டுள்ள விடத்து, அத்தகைய பொதுத் தேர்தற் திகதியிலிருந்து ஓராண்டு காலம் முடியும்வரை, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் படி நாடாளுமன்றம் தீர்மானத் தின் மூலம் ஜனாதிபதியை வேண்டினாலொழிய, ஜனாதிபதி, இரண்டாந் தடவையாகவும் நாடாளுமன்றத்தைக் கலைத்தலாகாது."

இதன்படி தற்போது நடப்பிலுள்ள நாடாளுமன்றத்தை ஓராண்டுக்குப்பின் நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி ஜனாதிபதி தன்னிச்சையாகக் கலைக்க முடியும். இத்தன்னிச்சையான அதிகாரத்திற்குப் பதிலாக ரணில் கொண்டுவர விரும்பும் திருத்தத்தின்படி ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் மட்டுமேதான் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாமேதவிர, நாடாளுமன்றத்தின் அனுமதி பெறாமல் இவ்வாறான கட்டங்களில் நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியாது என்பதாகும்.

இங்கு நேரடியாக 70ஆவது சரத்தோ அதன் உபபிரிவுகளோ அன்றி உட்பிரிவுகளோ எதுவும் திருத்தத்திற்கு தடையானதாக இல்லை.

இனி இத்திருத்தம் குறித்தொதுக்கப்பட்ட ஒன்பது சரத்துக்களுடனும் இரண்டு சரத்துக்களின் பிரிவுகளுடனும் ஒவ்வாத தன்மைகள் எதையாவது கொண்டுள்ளதாக, அல்லது வேறுவிதமாக வியாக்கியானப்படுத்த அவை இடமளிக்கின்றனவா என்பதே ஆராயப்பட வேண்டிய விடயம். ஒவ்வாத் தன்மைக்கு விளக்கமளிக்கக் கூடிய அதிகம் கிட்டிய சரத்து 62ஆம் சரத்தின் 2ஆம் பிரிவாகும். அதாவது "நாடாளுமன்றமானது கலைக்க வேண்டிய காலத்திற்கு முன்னதாகக் கலைக்கப்பட்டாலொழிய, ஒவ்வொரு நாடாளுமன்றமும் அதன் முதலாவது கூட்டத்துக்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு ஆண்டுகள் கொண்ட காலத்துக்கு தொடர்ந்திருத்தல் வேண்டுமேயொழிய அதற்கு மேற்படவல்ல..."

இங்கு ஆறு ஆண்டுக்குமேல் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை அதிகரிப்பதற்கென்றாற்தான் சர்வசன வாக்கெடுப்பு நடாத் தப்பட வேண்டுமேயொழிய அந்த ஆறு ஆண்டுகால ஆயுளிற் கைவைக்காது விட்டால் சரத்திற் திருத்தம் செய்யலாம் என்பதாகும்.

இனி குறித்தொதுக்கப்பட்ட சரத்துக்களுடன் திருத்தச் சட்டங்களுக்கு ஒவ்வாத் தன்மையுண்டா என்ற வியாக்கியானப் பிரச்சினையே உள்ளது. வியாக்கியானம் எப்போ தேவையென்றால் ஒரு சரத்தோ, சட்டமோ கருகலாக இருக்கும் போதுதான். வியாக்கியானம் அளிக்கத் தேவையில்லாத அளவிற்கு இங்கு சம்பந்தப்படும் சரத்துக்கள் தெளிவாக உள்ளன. இந்த உண்மை சரத் அமுனுகமவிற்கு, சர்வசன வாக்கெடுப்பு வேண்டும் என்ற குழப்பத்தை அவிழ்த்து விடுபவர்களுக்கும் தெரியாத ஒன்றாய் இருக்க முடியாது. எனவே இவ்வாறு கூறுபவர்களின் பிரதான நோக்கம் இக்குறித்த திருத்தம் பற்றி மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும், கட்சிமாறி வாக்களிக்க நினைக்கும் எம்.பிக்களை குழப்புவதற்குமாகத்தான் என்று கருதலாம். □

## உள்ளத்தை உருக்குபவை

எங்கள் எல்லோரிற்குமே சந்தோசமாக இருக்க வேண்டும். எங்களது மகிழ்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆசை உண்டு தான்.

ஆனால் சில நேரங்களில் எமது விருப்பு வெறுப்புக்களை ஓரம்கட்டி வைக்க வேண்டிய அவசியமும் இருக்கின்றது.

நாங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றோமோ அந்தளவு மற்றவர்களும் இருக்க வேண்டும் என நினைப்பதோடு எம்மால் இயன்றளவு அவர்களிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறுதான் துன்பத்திலும் கூட மற்றவர்களின் துன்பங்களில் நாமும் பங்குகொள்ள பழகிக் கொள்ள வேண்டும். ஆறுதல் சொல்ல தெரிந்து கொள்ள வேண்டும்.

இதேநேரம் எமக்கு இன்பமும் மற்றவர்களிற்கு துன்பமுமாக இணைந்து வருகின்றபோது நாம் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறுதான் ஒருவருடைய பிள்ளையின் முதலாவது பிறந்ததினம். அவர்கள் மிகவும் கோலாகலமாக கொண்டாட முடிவு செய்தார்கள்.

ஆனால் துரதிஸ்டவசமாக அயல் வீட்டில் ஒரு சா வீடு ஒரு சிக்கலான நிலைமை. என்ன செய்திருக்க வேண்டும்...?

பிறந்தநாள் வீட்டுக்காரர் தங்களது பிறந்தநாள் விழாவில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. பாட்டும்... கூத்தும் ஒரே கல கலப்பு பாட்டோடு சேர்ந்து பிரேக்நடனம்...

எப்படியிருக்கிறது நிலைமை. அயல்வீட்டு ஒப்பாரிச் சத்தத்தோடு சேர்ந்து பிறந்தநாள் வீட்டு பாட்டும் கூத்தும் சேர்ந்து அந்த ஊரின் இயல்பையே நெருடியது.

உண்மையில் பிறந்தநாள் வீட்டுக்காரர் விழாவை கொண்டாடியிருந்தாலும் பாட்டையும் கூத்தையும் நிறுத்தியிருக்கலாமல்லோ...? ■



-வேழினி-

நம் எண்ணங்கள் அனைத்தையும் விட காலம், நமக்கு அதிகம் போதிக்கும் ● -பெஞ்சமின் டிஸ்ரேலி

# சனாதிபதி சந்திரிகா என்ன செய்யப் போகிறார்?

**-சிறி. இந்திரகுமார்-**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம். தாய்லாந்து சமாதான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரச பிரதிநிதிகளின் விபரங்கள் அறிவிப்பு என இலங்கை இனப்பிரச்சினை ஒரு தீர்க்கமான கட்டத்திற்கு நெருங்குவதற்கான முன்னறிவிப்புகளாக இவ்வாரம் பல செய்திகள் வெளிவந்து முள்ளன.




இதே நேரம் இலங்கையின் நாடாளுமன்றத்தில் ஆட்சிப் பலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசிடமும் நாட்டின் தலைமைப்பொறுப்புமிக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக எதிக்கட்சியாக இருந்துவரும் பொதுசன ஐக்கிய முன்னணியிடமும் என சமாதானத்தை ஐயத்தோடு நோக்க வேண்டிய நிலை இன்னொரு புறமும் என இலங்கையின் சமகாலம் நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கு மக்களின் போதிய ஆதரவு உண்டு எனவும் நாடாளுமன்றத்தை கலைக்கப் போவதில்லை எனவும் நாடாளுமன்றத்திற்கு கடித மூலம் அறிவித்து ஒருநம்பிக்கையூட்ட முயற்சித்துள்ளார்.

இது ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதான முயற்சியை வேகப்படுத்தி சிங்கள தமிழ் மக்களின் கவனத்தை தம்பக்கம் ஈர்த்து சனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரங்களை குறைக்கப்போவதாக விடுத்த எச்சரிக்கைகளைத் தணிக்கும் ஒரு நகர்வாகவும் இருக்கலாம்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமாயினும் சரி பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கமாயினும் சரி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு காலாகாலம் அவர்கள் எடுத்துக்கொண்ட ஆயுதம் சமாதானம் என்பதேயாகும்.

ஆரம்பத்தில் பிரேமதாசா காலத்தில் சமாதானத்தைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு தமது அரசியல் எதிர்காலத்தை வசப்படுத்திக்கொள்ள விடுதலைப் புலிகளைப் பயன்படுத்த முயற்சித்ததன் விளைவு இரண்டாம்கட்ட ஈழப்போராகும்.

மூன்றாம்கட்ட ஈழப்போர் தொடங்குவதற்கும் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்ற சமாதானமும் ஆட்சியைக்கொண்டு நடத்த போரும் என ஒரு குழப்ப அரசியல் நடத்த முனைந்ததன் விளைவாகும். போர் மூலம் சமாதானம் பெறப்படவில்லை. மாறாக போர் மூலம் நாட்டின் பொருளாதாரம் நலிவுற்றது.

இன்று சனாதிபதி சந்திரிகா மீது ஐக்கிய தேசிய முன்னணி அரசு சுமத்தும் பெருமளவு குற்றச்சாட்டுகள் இலங்கையின் பொருளாதாரத்தை நாசமாக்கியவர்கள் சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியினர் என்பதேயாகும்.

சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் பாதிக்கப்பட்ட சிறிலங்காவின் பொருளாதா ரத்தை தற்போது தான் ஐக்கிய தேசிய முன்னணி அரசு இலங்கையின் வர்த்தகத்துறைக்கு நம்பிக்கையூட்டியும் அரசுடன் ஏராளமான வெளிநாட்டு அரசுகள் மற்றும்வர்த்தக முயற்சிகளில் ஈடுபடும் நிறுவனங்களை பங்குகொள்ளச் செய்து தாழ்வுற்றுப்போன பொருளாதாரத்தை நிமிர்த்தி வருகின்றது. இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசை சனாதிபதி சந்திரிகா கலைத்து மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை நடத்த முயற்சி செய்வதாயின் அதற்கு இன்னும் நூறு கோடி ரூபா தேவையாகும். இன்றைய சிறிலங்காவின் பொருளாதாரத்தில் நூறு கோடியை இழப்பது என்பது சாதாரணமான விடயமல்ல. அது எந்தக் கட்சியையுமே சீரான முறையில் நாட்டை ஆட்சிபுரிய வழிவகுக்கப் போவதில்லை.

அத்தோடு பொதுசன ஐக்கிய முன்னணி இலங்கை மக்களுக்கு எப்பொழுதுமே சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கப் போவதில்லை. காரணம் சமாதானத்தின் மீதுகொண்ட நம்பிக்கையை விட போரின்மீதுகொண்ட நம்பிக்கையே அதிகம். இன்னொரு வகையில் சொல்வதானால் பொதுசன ஐக்கிய முன்னணி அரசிற்கு அரசியல் நடத்தவும்தெரியாது யுத்தம் நடத்தவும்தெரியாது.

பொ.ஐ முன்னணியின் அரசியல் தோல்வி ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளக் காரணமாகியது. யுத்தத்தின் தோல்வி மூலம் விடுதலைப் புலிகள் இயக்கம் தமது பூரண கட்டுப்பாட்டில் பெருமளவு நிலத்தையும் கைப்பற்றிக் கொண்டது.

இவ்வாறு பொதுசன ஐக்கிய முன்னணி அரசு தோல்விகளையே சந்தித்தது. தற்போது சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் பெருமளவு நடவடிக்கைகள் மறைமுகமாக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியைக் கவிழ்க்க எடுக்கின்ற நடவடிக்கையாகவும் அதன் மூலம் போரைத் தூண்டுவதாகவுமே இருக்கின்றது.

சனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியோடு கூட்டுச் சேர்ந்திருக்கும் ஜே.வி.பி போன்ற கட்சிகளும் எப்போதுமே சமாதானத்தை விரும்பியவர்கள் அல்ல. பச்சை இனவாதம்பேசி நாட்டில்போரைத் தூண்டி அரசியல் நடத்துமுனைபவர்கள்.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் சமாதானத்தைக் குழப்பி போரைத் தூண்டுவதாகவே இருக்கின்றது. மீண்டும் போர் தொடங்குமாயின் அது சிறிலங்காவின் பொருளாதாரத்தை வீழ்த்துவதாகவே இருக்கும். பொருளாதாரத்தை சந்திரிகா வீழ்த்த நினைப்பது தன்னைத்தானே அழித்துக கொள்வதற்கு சமமாக அமையும்.

அந்த வகையில் சனாதிபதி சந்திரிகா தற்போது ஈடுபட்டி ருப்பது தனது காலை தானே வாருகின்ற நடவடிக்கையாகும்.

சனாதிபதி சந்திரிகாவின் இன்றைய அரசியல் செல்வாக்கென்பது பட்டும் படாமலும் நடந்து கொள்ளவேண்டிய நிலையிலேயே இருக்கின்றது.

ஏற்கெனவே மூன்றாண்டு காலத்தில் சனாதிபதித் தேர்தலையும் இரண்டு பொதுத்தேர்தலையும் சந்தித்து நிற்கும் சிறிலங்காவை மீண்டும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளி தன்னையும் தனது கட்சிக்குமான எதிர்கால அரசியலை கேள்விக்குறியாக்கவே சந்திரிகா முயல்கிறார்.

★★★★★★



## மதவடி மயிலர்

செய்தி: விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க முன்னர் பிரதான எதிர்க்கட்சியின் அரசு பேசவேண்டும் என பௌத்த மதத் தலைவர்கள் வலியுறுத்து........

மயிலா: பிரதான எதிர்க்கட்சி என்றால் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் பேசவேண்டும் என்று அர்த்தம் கொள்ள முடியாது..... அது ஒரு கூட்டமைப்பு....பல கட்சிகளின் ... முரண்பாடுகளின் கூட்டணியுடன் பேசுவது கலங்கிய குட்டையை மேலும் குழப்பிச் சேறாக்குவதாகவே முடியும்... அதுதான் பௌத்தமதத் தலைவர்களின் விருப்பமென்றால் நமக்கென்ன.... பேசிக்கொள்ளட்டும்.

இப்போது பெரும்பாலும் அரசியல் ஆலோசகர்களாகவே மாறிவிட்ட இந்த ஆன்மீக ஆலோசகர்கள் சிகல உறுமய போன்ற, பௌத்த சிங்களத் தலைவர்கள் எனக் கூறிக்கொள்வோரின் கட்சிகளை ஒரேயடியாகத் தூக்கியெறிந்து விட்டார்களே... அதுதான் அதிசயம். பாருங்கோ... விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டுமெண்டு மட்டுமல்ல முற்றாக அழிக்க வேண்டுமெண்டும் சொன்ன ஆட்கள் பௌத்த மதத்தலைவர்களால் பிரதானமில்லாதவர்களாக்கப்பட்டுவிட்டார்கள் பாருங்கோ.

கேள்வி: சொந்தப் பணப்பெட்டியை நிரப்ப அரசியல்வாதிகள் முயலக்கூடாது என்கிறார் பேராசிரியர் சாந்த ஹென்நாயக்க.....

மயிலர்: அரசியல்வாதிகளின் மூலநோக்கத்தையே பேராசிரியர் தடுக்கிறார் பாருங்கோ... சொந்தப் பணப்பெட்டியை நிரப்பாது அரசாங்க திறைசேரியை நிரப்ப நினைக்கும் அரசியல்வாதியை எங்கை தேடுவது.... கொஞ்சக்காலம் பேராசிரியரை அரசியல்வாதியாக்கி பார்த்தால் ... எல்லாம் தெரியும் பாருங்கோ...

செய்தி: அரசியல் உறுதிப்பாடு அரசின் ஐக்கியத்திலேயே தங்கியுள்ளது....-ஜனாதிபதி செயலகம் கூறுகிறது.

மயிலா: ஜனாதிபதி செயலகத்திற்கும் திடீரென்று ஞானம் பிறந்திட்டுது பாருங்கோ.... அரசியல் ஸ்திரத்தன்மை அரசின் ஐக்கியத்திலேயே தங்கியுள்ளதே தவிர கட்சியொன்று பலத்தைப் பெற்றுக்கொள்வதில்லையெண்டு தத்துவமாய் கொட்டியிருக்கினம் பாருங்கோ.... ஆனால் செயலகத்தின் செயற்பாடு அரசாங்கத்தை கலைப்பதிலும், குழப்புவதிலும் மிரட்டுவதிலும் அக்கறையாக இருக்கேக்கை உந்தத் தத்துவம் வெறும் ஊழல் தத்துவம்தான்.... ஐக்கியம் "என்பது சனாதிபதியின் கட்சிக்குள்ளையே இல்லை.... பொதுசன ஐக்கிய முன்னணி எண்டு பெயரைப்போட்டா மட்டும் காணுமே.... எல்லாம் பேச்சு பல்லக்கிலை தங்கச்சி கால்நடையிலை... என்ற பழமொழி போலத்தான் பாருங்கோ கிடக்கு.

செய்தி:அரசியல் ஸ்திரத்தன்மைக்காக மக்களின் வாக்கு மூலம் தெரிவான சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை குறைக்க வேண்டும் என்று ஐ.தே.கட்சி சொல்வது சரியல்ல....-சனாதிபதியின் ஊடகப்பணிப்பாளர் தெரிவிப்பு.

மயிலர்: நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பேன் எண்டல்லே அம்மணி மக்களுக்கு வாக்குறுதி அழித்து வாக்குபெற்றவ.... மக்களின் நம்பிக்கைக்கு துரோகம் செய்து இன்னும் அந்த அதிகாரத்தை இறுக்கிப் பிடிச்சுக்கொண்டு பதவியிலை ஒட்டியிருக்கிற சனாதிபதியின்ரை கூத்துப் பணிப்பாளருக்கு தெரியாது போலும். பாருங்கோ..... கண்ணை மூடிக்கொண்டு உலகமெல்லாம் ஒண்டும் தெரியாத ஆட்களை கொண்டுள்ளது எண்டு நினைக்கக் கூடாதுபாருங்கோ.

செய்தி:தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து பொ.ஐ.முன்னணி உறுப்பினர்களுடன் சந்திரிகா ஆராய்வார்.....

மயிலா: தற்போது மட்டுமே அரசியல் நெருக்கடி .... அம்மணி ஆட்சிக்கு வந்த காலம் தொட்டே நெருக்கடிதானே ... அப்ப தொடக்கம் ஆராயுறா. ஆராயுறா. ஆனால் ஒரு முடிவும் எடுத்ததாத்தான் தெரியேல்லை..... வீடெரிக்கிற ராணி நெருப்பெடுத்துக்குடுக்குற அவவின் சகாக்களுடன் எதைப்பற்றி ஆராய்ந்தாலும் ஆக்கபூர்வமா எதுவும் நடக்காது பாருங்கோ.....

செய்தி: களுத்துறைச் சிறைக் கைதிகள் மீண்டும் போராட்டம் நடத்த முடிவு.....

மயிலா: அரசியல்வாதிகள் வாக்குறுதிகளைத்தான் பெற்றுத்தருவார்கள். விடுதலையையல்ல... கைதிகளின் பிரச்சினையை ஒரு பிரச்சினையாத்தான்அவை நினைக்கினம் பாருங்கோ. போராட்டத்தை வாக்குறுதியைக்கொடுத்து கைவிடப்பண்ணுறது அவைக்கு சாதனையாத்தான் தெரியுது.... இதையும் ஒரு அரசியல் விளையாட்டாத்தான் நினைக்கினம் பாருங்கோ.

## கருத்துப் பகிர்வு

அன்புடன் வெள்ளிநாதமே!

நவீனமயப்படுத்தப்பட்ட கல்வி முறையில் கற்றலை ஒரு சுமையாகக் கருதும் மாணவ சமுதாயத்திற்கு கற்றலின் இலகுத்தன்மையையும், "பரீட்சையில் வெல்லும் வழிமுறைகளையும் எடுத்துக் கூறிய பரீட்சையில் வெல்லவது எப்படி" என்னும் வி.தேவபாணுவின் ஆக்கம் கற்கும் மாணவ நெஞ்சங்களுக்கான ஒரு நெறிப்படுத்தலே: நாதமே இதுபோன்ற பல கற்றல் வழிகாட்டிகளை மென்மேலும் சுமந்துவருவாயாக!

.பிரதீபா,மல்லாவி,வைத்தியசாலை

---

கடந்த 16.08.02 வெள்ளிநாதத்தில் வெளியான எரிசரன் என்பவர் எழுதிய 'ஒரு பயண அனுபவக்குறிப்பு' (புளியங்குளத்திலிருந்து புதுக்குடியிருப்பு வரை ) என்பதானது, எந்தவித கற்பனையோடு கூடியதான, வெறும் பொழுதுபோக்குக்காக எழுதப்பட்டதல்ல என்பதும், அந்நிகழ்வுக்கு இன்றைய சமூக அவல யதார்த்தத்தை மிக வெட்ட வெளிச்சமாக படம்பிடித்துக் காட்டுவதானதும் மிக மிக வரவேற்கக் கூடியதான விடயமாக இருக்கின்றது. மக்கள் படும் அவலங்கள் எந்தவிதத்திலும் 'அமுக்கப்படாது' இனிவரும் காலங்களிலும் வெள்ளிநாத்தில் வெளிவரட்டும். வெளிச்சத்துக்கு வரும் உண்மைகள் மூலம் 'சம்பந்தப்பட்டவர்கள்'தங்கள் தவறுகளை உணர்ந்து திருந்தி நடப்பதற்கு வெள்ளி நாதம் வழிசமைத்துக்கொடுக்கட்டும்.

இதுதவிர நாதத்தின் உள்பக்கங்களில் கீழே இருக்கும் அறிஞர்களின் கருத்துக்கள் நல்ல கருத்துக்களாக இருப்பதோடு, இளையநாதத்தில் வரும்வாரமொரு குறல் நமது 'சின்னனுகளுக்கு' நல்ல பயனுள்ளதாகவே அமையும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. தங்கள் பணி தொடர எனது வாழ்த்துக்கள்

அம்மான் ,புதுக்குடியிருப்பு

---

மதிப்பிற்குரிய ஈழநாதம் குடம்பத்தினருக்கு,

யாழ்குடாநாட்டில் ஈழநாதம் பத்திரிகையின் வார வெளியீடான வெள்ளிநாதம் பத்திரிகை கிடைக்கத் தொடங்கியது முதல் அதை கிரமமாக வாசித்து வருகின்றோம். இன்னொரு போர்முகம் தொடர் அருமையாக உள்ளது.

தங்கள் உண்மையுள்ள பலகோடி வாழ்த்துக்களை பத்திரிகைக்கு வழங்கும்

விக்னேஸ்வரவாசா,புலோலி தெற்கு

---

வெள்ளி நாதத்தில் பிரசுரிக்கப்பட்ட "இன்னொரு போர்முகம்" என்ற தொடரினை நான் தொடர்ந்து வாசித்து வந்தேன். மிக அருமை, எல்லாவற்றையும் நேரிலேயே கண்டது போன்ற அனுபவத்தை ஏற்படுத்தியது. எழுத்தாளர் தனது நோக்கத்தினை நிச்சயமாக அடைவார் என்றே எண்ணுகின்றேன். இதே போல் ஏனைய போராளிகளும் தமது அனுபவங்களை வரலாற்றுப் பதிவுகளாக மாற்றினால் நன்றாக அமையுமென எண்ணுகின்றேன். ஏனெனில் எமது போராளிகளின் கஸ்ரங்களை அர்ப்பணிப்புக்களை இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கின்ற மக்களும் உணர்ந்துகொள்ள அது வழிவகுக்கும்..."இன்னொருபோர்முகம்" என்ற தொடரினை எழுதிய போராளிக்கு எனது வாழ்தினைத் தெரிவிப்பதோடு இவ்வாறான ஆக்கங்களினைத் தொடர்ந்து ஈழநாதத்தில் எதிர்பார்க்கின்றேன்.

வினோ,யாழ். பல்கலைக்கழகம்.

நேரத்தைத் தேர்ந்தெடுப்பது நேரத்தை மிச்சப்படுத்துவதாகும் ~பிரான்ஸிஸ் பேக்கன்

# சமாதானக் கார்ணிவெல்

யாழ்ப்பாணத்துக்குவரும் சிங்களப் பிரமுகர்கள் வர்த்தகர்கள் மற்றும் அதிகாரிகள் எல்லாரும் முன்னரைவிட இயல்பாகத் தமிழர்களுடன் கலந்து பழகுகிறார்கள். கதைக்கும் போதெல்லாம் அவர்கள் ஒன்றைச் சொல்லுகிறார்கள். "நாங்கள் இப்பொழுது இருப்பது போல இயல்பாகச் சந்தோசமாகப் பழகலாம். நொறுங்கிப்போன உங்கள் வாழ்வைக் கட்டியெழுப்பலாம். ஏன் வீணாகச் சண்டை செய்ய வேண்டும்....?" என்று. ஆனால் அவர்களில் யாரிடமாவது "நல்லது இந்த நிம்மதி நீடித்திருக்க தமிழர்களுக்கு நீங்கள் தரும் தீர்வு என்ன?" என்று கேட்டால்தான் அவர்களுடைய முகம் கறுத்துப் போகிறது. "அது அரசியல்வாதிகளுடைய வேலை" என்று கூறிச் சிலர் நழுவி விடுகிறார்கள். பலரால்தமது முகம் கறுப்பதை மறைக்க முடிவதில்லை.







தீர்வைப் பற்றி விவாதிப்பதைத் தவிர்த்துவிட்டு நகரத்தை புனரமைப்பது பற்றியும் வீதிகளைத் திருத்துவது பற்றியும் வியாபாரத்தைப் பெருக்குவது பற்றியும் அவர்கள் கதைக்க முயல்கிறார்கள்.

இது - இப்பொழுதிருப்பது போல இராணுவத்தின் பிடிக்குள் இருக்கும் யாழ்ப்பாணத்தில் அதாவது " வெல்லப் பட்ட யாழ்ப்பாணத்தில்" தமிழரும் சிங்களவரும் சந்தோசமாக இருக்கலாம் என்று அவர்கள் நினைப்பதைக் காட்டுகிறதா என்று படித்த யாழ்ப்பாணத்தவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

குறிப்பாகத் தமிழ் வர்த்தகர்கள் கண்டிவீதி திறக்கப்பட்ட பின் வந்து பெருகிக்கொண்டிருக்கும் தென்னிலங்கை வர்த்தகர்களை ஒருவித அச்சத்துடனேயே பார்க்கிறார்கள்.

தென்னிலங்கையில் விற்றுத் தீராத பொருட்களை யாழ்ப்பாணத்துச் சந்தையில் எப்படியாவது விற்றுத் தீர்த்துவிட முயலும் அவசரம் தென்னிலங்கை வர்த்தகர்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படுவதாக ஒரு யாழ்ப்பாணத்தவர் கூறுகிறார்.

இப்பொழுதுள்ள இராணுவ-சிவில்-பொலிஸ் கூட்டு நிர்வாகத்தின் கீழ் தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்களும் குறிப்பாக ஒப்பந்தகாரரும் அதிகம் லாபமடைய முயற்சிப்பதாக படித்த யாழ்ப்பாணத்தவர் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இந்நிலைமாறி ஒரு தீர்வு என்று வந்துவிட்டால் அல்லது குறைந்த பட்சம் இடைக்கால தீர்வு என்று வந்தாலேயே தமது வியாபாரம் கெட்டுவிடும் என்று தென்னிலங்கை வர்த்தகர்களுக்குத்தெரியும் என்றும் இதுவும் தான் அவர்கள் தீர்வைப் பற்றிக் கதைத்ததால் முகம் கறுக்க ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

இதை சமீபத்தில் ஒரு யப்பானிய பேராசிரியர் செய்த ஆய்வின் முடிவுகள் உறுதி செய்கின்றன. கொழும்புப் பல்கலைக்கழகத்துடனும் தேசிய சமாதான பேரவையுடனும் சேர்ந்து செய்யப்புட்ட இவ்வாய்வு முடிவுகளின் படி மாத்தறையில் 60 வீதம் சிங்களவரும் திருகோணமலையில் 82 வீதம் சிங்களவரும் இடைக்கால நிர்வாக அமைப்பை எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் கண்டிவீதி திறக்கப்பட்ட பின் யாழ்ப்பாணத்துச் சந்தையைப் பிடிக்க படையெடுத்துவரும் தென்னிலங்கை வர்த்தகர்களின் தொகை படிப்படியாக அதிகரித்துச் செல்கிறது.

இப்பொழுது யாழ்ப்பாணம் அதன் பொருளாதார அர்த்தத்தில் மேல்மாகாணத்தின் ஒரு நீட்சி.

யுத்தத்தால் நொந்தும், நொறுங்கியும் போயிருக்கும் தமிழ் வர்த்தகர்கள் படையெடுத்துவரும் தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்களிடம் ஒன்றில் சரணடைய வேண்டும் அல்லது மடிந்துபோக வேண்டும்.

பாவம் யாழ்ப்பாணம்.

அதற்கு எப்பொழுதும் படையெடுப்புத்தான்.

முன்பு சேனைகளும் ராங்கிகளும் படையெடுத்து வந்தன. இப்பொழுது வர்த்தகர்கள் படையெடுத்து வருகிறார்கள்.

சந்திரிகா யாழ்ப்பாணத்தை ஒரு உயிருள்ள ஷோகேஸ் ஆக மாற்றினார்.

ரணில் அதை ஒரு கவர்ச்சியான சமாதானச் சந்தையாக்கியிருக்கிறார்.

பொதுவாக யு.என்.பி என்றாலே முதலாளிகளின் கட்சிதான். அவர்கள் ஆட்சிக்கு வந்தால் முதலாளிகளின் மத்தியில் திடீரென்று ஒரு புத்துணர்ச்சி பரவும். இம்முறை யுத்தநிறுத்தமோ சேர்ந்து வந்திருக்கிறது. எனவே இனி முதலாளிகளின் காலம்தான்.

யாழ்ப்பாணத்தில் யு.என்.பி.யின் அமைச்சராயிருக்கும் தமிழரும் ஒரு வர்த்தகர் என்பதை இங்கே கவனிக்க வேண்டும்.

பொதுவாக தமிழ்மிதவாத அரசியலில் வழக்கறிஞர்கள்தான் ஈடுபடுவது வழமை. ஆனால் விதிவிலக்காக ஒரு வர்த்தக அரங்கினுள் பிரவேசித்திருப்பதை ஏற்கனவே அவதானிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

இது ரிவிரசவின் பின் யாழ்ப்பாணத்திலுண்டாகிய அரசியல் தலைமைத்துவ வெற்றிடத்திலேயே சாத்தியமாகியது.

ஆனால் எதுவோ இப்பொழுது யாழ்ப்பாணம் எதுவித கட்டுப்பாடுகளுமின்றி தென்னிலங்கையின் சந்தைகளுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

தமிழ் புலப்பெயர்வினால் வரும் வெளிநாட்டுக்காசு யாழ்ப்பாணத்தின் நுகர்வு சக்தியைக் கூட்டக் கூட்ட அதன் சந்தையும் கவர்ச்சிமிக்கதாக மாறி வருகிறது.

இம்மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடந்த வர்த்தகச் சந்தையை இத்தகைய ஒரு விளக்கத்தின் பின்னணியில் வைத்தே பார்க்கவேண்டும்.

யாழ் வணிகர் கழகத்தால் அனேகமாகப் பகிஷ்கரிக்கப்பட்ட மேற்படி வர்த்தக சந்தையும் கூட சமாதானத்தை வியாபாரமாக்கும் ஒரு சமாதானக் கார்ணிவெல் தான்.

> பாவம் யாழ்ப்பாணம்.
> அதற்கு எப்பொழுதும் படையெடுப்புத்தான்.
> முன்பு சேனைகளும் ராங்கிகளும் படையெடுத்து வந்தன. இப்பொழுது வர்த்தகர்கள் படையெடுத்து வருகிறார்கள்.
> சந்திரிகா யாழ்ப்பாணத்தை ஒரு உயிருள்ள ஷோகேஸ் ஆக மாற்றினார்.
> ரணில் அதை ஒரு கவர்ச்சியான சமாதானச் சந்தையாக்கியிருக்கிறார்.

கடந்தவாரத்திற்கு முதல்வாரம் திருகோணமலையில் நடந்த "யுகதக்ம" கைத்தொழில் காட்சியும் இப்படியொரு சமாதானக் கார்ணிவெல்தான்.

ஆம் சமாதானம் வியாபாரமாகி விட்டது.

எல்லாமும் வர்த்தக மயப்பட்டு வரும் இப்பூகோள க்கிராமத்தில் யுத்தத்தைப் போலவே சமாதானத்தாலும் லாபமடையும் வியாபாரிகள் உருவாகிவிட்டார்கள்.

5நாட்கள் நடந்த யுகதக்ம கைத்தொழிற்காட்சி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கான ஒரு ஷோகேஸ் என்று வர்ணிக்கப்பட்டது.

திரும்பவும் ஒரு ஷோகேஸ். அதுவும் தமிழர் நிலத்தில், முன்பு சந்திரிகாவின் ஷோகேஸ் யுத்தகாலத்தில். இப்பொழுது ரணிலின் ஷோகேஸ் சமாதானகாலத்தில்.

திரும்பவும் திரும்பவும் தமது ஷோகேஸ்களை வைப்பதற்கு அவர்களுக்கு தமிழர் நிலம்தான் தேவைப்படுகிறது.

மேலும் யுகதக்மவின் போதும் அதையொட்டி நிகழ்ந்த வேறு வைபவங்களின் போதும் அரசாங்கத்தின் பொருளாதார இலக்குகள் மட்டும் வெளிதெரியவில்லை.அதோடு கூட சமாதானத்தைப்பற்றிய அவர்களுடைய இரண்டக நிலையும் சேர்ந்து வெளித்தெரிந்தது.

முதலாவதாக யுகதக்ம என்ற

**—நிலாந்தன்—**

பெயரில் இந்தச் சிங்கள வார்த்தையை அவர்கள் தமிழாக்கம் செய்யவில்லை. சமாதான காலத்திலாவது அப்படிச் செய்யவேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. அதாவது இப்பொழுதும்அவர்கள் தமது வர்த்தைகளுக்கூடாகவே சிந்திக்கிறார்கள் என்று அர்த்தம்.

மற்றது இக்கைத்தொழில் காட்சியை ஒட்டி நிகழ்ந்த மற்றொரு வைபவத்தில் ரணில் அஷ்ரப் இறங்குதுறையைத் திறந்து வைத்தார். அதில் அவருடன் மேடையில் நின்றவர் இந்தியாவின் மிகப்பிரபலமான தகவல் தொழில் நுட்ப வர்த்தகரான நாராயண மூர்த்தி.

ஆசியாவின் பில்கேற் என்றழைக்கப்படும் நாராயண மூர்த்தி ரணிலின் விசேட அழைப்பின் பேரில் அங்கு வந்திருந்தார். மேடையில் ரணிலுடன் அருகே நின்றார். இனி அவர் தான் ரணிலின் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் என்றும் கூறப்படுகிறது. ஏற்கனவே எண்ணெய்க் கிணறுகளை இந்தியாவுக்கு விற்றாயிற்று. இப்பொழுது ஒரு இந்தியர் பிரதமருக்குத் தொழில்நுட்ப ஆலோசகராக வரப்போவதாக கூறப்படுகிறது.

மூன்றாவது யுகதக்மவின் முடிவில் நிகழ்ந்த கலவரம். யுகதக்மவின் இறுதிநாளில் நடந்த ஒரு இசைநிகழ்வில் அதிகம் சிங்களப் பாடல்களே பாடப்பட்டன. இதை எதிர்த்துச் சில தமிழ்ப்பாடல்களையும் பாடக்கேட்ட தமிழர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் தமிழர்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் தாக்கி அழிக்கப்பட்டன. அருகேயிருந்த ராமகிஷணர் சிலையின் தலையும் உடைக்கப்பட்டுள்ளது. 1979ல் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் நடந்த கார்ணிவெல்லின் முடிவிலும் இப்படித்தான் கலவரம் வெடித்ததை இங்கே நினைவு கூரவேண்டும்.

இப்படி யாழ்ப்பாணத்தில் வர்த்தக சந்தை திருமலையில் யுகதக்ம என்று வர்த்தக நடவடிக்கைகளை முடுக்கி விடுவதன் மூலம் ரணில் எதைப்பெற முயல்கிறார்? யு.என்.பி.க்கு ஆதரவான முதலாளிகளுக்கு உழைத்துக் கொடுக்க முயல்கிறாரா அல்லது இலங்கைத்தீவு முழுவதையும் ஒரே வர்த்தக அலகாக்கிவிட முயல்கிறாரா?

இதில் இரண்டாவது காரணம்தான் இங்கு முக்கியம். அதாவது- முழு இலங்கைத் தீவையும் ஒரு வர்த்தக அலகாக்கி விடுவது. இதற்கு பாதைகளைத் திறந்துவிட்டதன் மூலம் ஒரு பலமான உட்கட்டுமானத்தை அவர் போட்டிருப்பதாக விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இந்நிலையில் யுத்தத்தால் பிளவுண்டு கிடந்த தமிழ்ச் சந்தைகளை இந்த முழு இலங்கை வர்த்தக அலகிற்குள் கொண்டு வருவதன் மூலம் பிரிந்துபோக முடியாத ஒரு வர்த்தக வலைப்பின்னலை அவர் உருவாக்க முயல்கிறார். இந்த வர்த்தக வலைப்பின்னல் பூகோளகிராமத்தின் பிரிக்கப்பட வியலாத உலகளாவிய வர்த்தக வலைப்பின்னலின் ஒரு பகுதியாக இருக்கும்.

ரணிலைப் பொறுத்தவரை இது தவிர்க்க முடியாதது. அவருக்குச் சமாதானம் எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு பொருளாதாரமும் முக்கியம்.

இப்பொழுது அவரிடத்தில் மிகவும் செல்வாக்குடையவரும் சமாதான முயற்சிகளில் அரசதரப்பு நெம்புகோலாக இயங்குபவருமாகிய அமைச்சர் மிலிந்தமொறகொட பொருளாதார மறுசீரமைப்புக்குப் பொறுப்பான அமைச்சராயுமிருக்கிறார் என்பதை இங்கே கவனிக்க வேண்டும்.

ஒரு அமெரிக்கப் பெண்ணை திருமணம் செய்தவரும் அமெரிக்க-சிறிலங்கா கூட்டு முயற்சியான தெமோர்க்கன்ரை வங்கியின் தலைவரும் கொழும்ஸ்ரொக் எக்ஸ்சேஞ்சின் நிறுவனங்களில் ஒருவருமாகிய மொறகொட கொழும்புத் தமிழ் வர்த்தகர் மத்தியில்மிகவும் செல்வாக்குடையவராக வளர்ந்து வருகிறார்.

38 வயதான செயற்திறன் மிக்க மொறகொடவை தனது சமாதான முயற்சிகளின் நெம்புகோலாக வைத்திருப்பதன் மூலம் கட்சிக்குள் தனக்குப் போட்டியாக எழுச்சிபெறக்கூடிய கெட்டிக்காரரான கரு ஜெயசூரியவை ரணில் பின்தள்ள முடிகிறது.மொறகொடவின் அமைச்சுக்கு அமெரிக்காவிலிருக்கும் ஒரு சிங்களவர் ஆலோசகராக வர இருப்பதாகக் கூறப்படுகிறது. இவருக்கு மாதச் சம்பளம் 12 இலட்சம். உலகவங்கியின் தனியார் மயமாக்கல் பெருந்திட்டத் திற்கமைய இவருக்குரிய சம்பளத்தை உலகவங்கியே வழங்கப்போகிறது என்பதை இங்கே உற்றுக் கவனிக்க வேண்டும்.

உலகவங்கியே சம்பளம் கொடுத்து ஊக்குவிக்கும் அளவுக்கு தனியார் மயமாக்கல் யு.என்.பி.யின் நிகழ்ச்சி நிரலில் பெறும் முக்கியத்துவத்தை இது காட்டுகிறது.

தவிர மேலுமொன்றை இங்கே பார்க்க வேண்டும். உதவி வழங்கும் நாடுகள் சமாதானத்தையும் நிதியுதவிகளையும் பிரிக்கப்படவியலாதபடி இணைத்து விட்டுள்ளன.

அதன்படி சமாதான முயற்சிகளின் வளர்ச்சியே தரப்படும் நிதியின் அளவையும் வேகத்தையும் தீர்மானிக்கும்.

எனவே சமாதானம் ஒரு வியாபாரம் ஆவது தவிர்க்க முடியாததே.


கவர்ச்சி கருதி அதை வைத்துக் கார்ணிவெல் செய்வதும் தவிர்க்க முடியாததே.

நாட்டில் பொருளாதாரம் மறுசீரமைக்கப்படும் வரையிலுமாவது அவர்களுக்குச் சமாதானம் வேண்டும் இல்லையென்றால் வெளிநாட்டு உதவி இல்லை. பொருளாதார மீட்சியும் இல்லை.

இந்தக் கட்டத்தில் தமிழர்கள் இத்தகைய கார்ணிவெல்களில் தம்மை இழந்து விடாதிருக்கும் அதே சமயம் கிடைத்துள்ள கால அவகாசத்துள் தமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே உடனடியாகச் சாத்தியமான வழியாகத் தெரிகிறது.

சமாதானத்தின் சம பங்காளிகளாகிய தமிழர்கள் சமாதான வியாபாரத்திலும் தமது லாபப் பங்கை பெறவேண்டும். பெற்றால் தான் அடுத்த கட்டம் எதுவானாலும் தொடர்ந்து போக வசதியாயிருக்கும்.

அரிய சாதனைகள் செய்யப்படுவது வலிமையினால் அல்ல: விடாமுயற்சியினால்- ● ~ ஸேம்யஸ் ஜான்ஸன




# தமிழரின் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பது போலமையும் அரசின் முன்னுதாரணங்கள்.

திருகோணமலையில் கடந்த வாரம் இரண்டு முக்கியமான நிகழ்வுகள் நடந்தேறியதாக செய்தி ஊடகங்கள் பிரஸ்தாபித்தன. ஒன்று இலங்கையை நவீன கைத்தொழில் திட்டத்தின் களனாக்கும் நோக்கில் அமைந்த 'யுகதக்கம' என்னும் கைத்தொழில் கண்காட்சி இத்தற்கென கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டு திருகோணமலை முற்றவெளியில் 15 பிரதான மண்டபங்களில் 240 காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்த நிகழ்வு இந்த காலகட்டத்தில் நிகழ்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் மாநாடு. இதற்கென நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கூடியிருந்தனர். இதற்காக திருகோணமலைப் பகுதியின் உல்லாசப் பயண விடுதிகள் அனைத்தும் ஒரு மாதத்திற்கு முன்பே பதிவு செய்யப்பட்டுவிட்டதாக திருகோணமலையின் செய்தியாளர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

திருகோணமலை மாவட்ட அரசுசாரா நிறுவனங்களின் ஒன்றியத்தினால் 56,740 குடும்பங்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங் களிலும், அகதி முகாம்களிலும், வேறு மாவட்டங்களிலும் வதிவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களில் அதிகமானோர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதாகவே தெரிவிக்கப் பட்டுள்ளது. 1984இற்கும், 1990இற்கும் இடையில் பெரும் இடப்பெயர்வுகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் திருமலை வட பகுதியில் தென்னைமரவடி, திரியாய், கல்லம்பற்று, கட்டுக்குளம், குச்சவெளி, பன்குளம், பன்மதவாச்சி, நொச்சிக்குளம், வேப்பங் குளம், வெல்வெரி, முதலியார்குளம் ஆகிய 14 தமிழ் கிராமங்கள் மக்களை இழந்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னான புதிய சூழ்நிலையில் மக்கள் மீளக்குடியமரும் முயற்சியில் இறங்கியுள்ள போதும் இதற்கான உதவிகள் எதுவும் போதுமானதாக இல்லையென்பது திருமலை இடம்பெயர்ந்த மக்கள் முகம் கொடுக்கும் முக்கிய பிரச்சினையாக உள்ளது. திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி நிறுவனம் கிழக்கு மனிதவள பொருளாதார அபிவிருத்தி நிறுவனம், மெதடிஸ்த் திருச்சபை போன்றவை மிகச் சிறியளவிலான உதவிகளைச் செய்கின்ற போதும், பிரதம மந்திரியின் அலுவலகத்துடன் இயங்கும் சமாதானச் செயலகத் தின் புனர்வாழ்வு, புனரமைப்புப்பிரிவு, இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு நிரந்தர சமாதானம் எட்டப்பட்டதன் பின்பே இவர்களின் மீள்குடியமர்வுக்கான நிதி வழங்கப்படுமெனத் தெரிவித்ததுடன், அரசுசாரா நிறுவனங்களின் உதவிகளையும் மட்டுப்படுத்தவும் முயல்கிறது. இப்போ மீளக்குடியமரும் மக்களுக்கு அரசுசாரா நிறுவனங்களின் உதவிகள் மட்டுமே ஊன்று கோலாய் உள்ளது.

தற்போதைய பதிவுகளின்படி திருகோணமலை மாவட்டத்தில் 78ஆயிரம் தமிழ்க்குடும்பங்களும், 65ஆயிரம் சிங்களக் குடும்பங்களும் 59 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களும் வசிக்கின்றபோதும் தமிழர்களின் குறுகிய மனோபாவங்களினால் இரண்டு தமிழ் பாராளுமன்ற பிரதி நிதிகளை தெரிவுசெய்ய முடிய வில்லையென திரு கனகசபாபதி எனும் பிரமுகர் ஒருவர் தெரிவித் திருந்தார். 1980களில் 24ஆயிரம் தமிழ்க்குடும்பங்களும், 6ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களும் 7ஆயிரம் சிங்களக் குடும்பங்களும் என இருந்த திருமலையில் இப்போது அதிகரித்த குடிசனமாற்றீட்டுக்கு இனமுரண்பாட்டு அரசியலே காரணமாய் அமைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

மூதூர்பகுதியில் 90 வீதமான தமிழ்க்குடும்பங்கள் ஆண்களை இழந்துள்ளன. இவர்களின் மறுவாழ்வுக்கான உதவிகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஈச்சந்தீவு, இறால் குழிப்பகுதிகளில் மக்களின் வாழ்நிலை மிக மோசமாக உள்ளது. இறால்குழிப்பகுதியில் சில குடும்பங்கள் வறுமை காரணமாக முஸ்லிம்களாக மாறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. லிங்க நகரின் பின்புறமாக உள்ள 'பிளாண்டற் பொயின்ற்' பகுதியில் 60 தமிழ்க் குடும்பங்கள் குடியிருப்பதற்கான எந்தஉதவியுமற்ற நிலையில் இராணுவத்தினராலும் அச்சுறுத் தலுக்குள்ளாக் கப்பட்டுள்ளனர். திருமலையில் தற்போது தமிழ் மக்களுடைய வாழ்வு அச்சுறுத் தலுக்கும், ஆதரவற்ற நிலைக்கும் உள்ளாக்கப்பட்டு கேள்விக் குள்ளாக்கப்பட்டுள்ளது.

●●●

கிராமிய மக்களின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு செயற்படும் கிராமமட்ட கூட்டுறவு அமைப்பு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமாகும். யாழ்ப்பாணத்தில் சிறப்பாக இயங்கிவந்த இந்த கூட்டுறவு அமைப்புக்கள் யுத்த சூழ்நிலையில் சிதைந்து போய் விட்டது. கடந்த 87-89 காலப் பகுதியில் உலக நாணய சம்மேளனம் (Wocu) கிவோஸ் (Hivos) போன்ற நிறுவனங்கள் வடகிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு போன்றவற்றுக்கு வழங்கிய நிதியின் பெரும்பகுதி சிறிலங்கா சி.க.கூ. சம்மேளனத்தால் சுரண்டப்பட்டுவிட்டது.

யுத்த நெருக்கடியில் சிக்கிய மக்களுக்கு தற்போது உதவுவதற்கு கூட சிறிலங்கா சி.க.கூ சம்மேளனம் முன்வராத நிலையில் வடகிழக்கின் ஒன்பது சி.க.கூ. சங்கங்களின் சமாசங்கள் இணைந்து வடகிழக்கு சி.க.கூ.ச. சமாசங்களின் இணையம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. இதன் தலைவராக கிளிநொச்சி சமாசத் தலைவர் தி.க. செல்வராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். வடகிழக்கு கூட்டுறவு வரலாற்றில் இவ்வொன்றியத்தின் தோற்றம் குறிப்பிடும்படியான ஒருசெயற்பாடு எனவும் யுத்தத்தால் நலிவுற்ற வடகிழக்கு மக்களின் பொருளாதார மேம்பாட்டையே இவ்வொன்றியம் குறிக்கோளாக கொண்டு செயற்பட வேண்டும் எனவும் ஸ்கன்டினேவிய நாடுகளைப் போன்று வடகிழக்கின் கூட்டுறவின் மீதான பொருளாதார கட்டுமானத்தைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் கூட்டுறவு ஆணையாளரும் பதிவாளருமான சுப்பிரமணியசர்மா தெரிவித்துள்ளார்.

**அன்ரன் அன்பழகன்**

இந்நிகழ்விற்கு யூ.என். டி.பி. பிரதிநிதி கிளேயர்மக்கனொத்தி உட்பட அமைச்சின் செயலாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். திருமலையில் இதன் தலைமையகம் அமைந்துள்ளது.

வடகிழக்கின் மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாவட்ட அரசாங்க அதிபர்கள் பலரும் இப்போது "கனவான் அரசியலில்" (Jentle Man Politics) கைதேர்ந்தவர்களாகி விட்டனர். வடகிழக்கில் சிங்களவர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்களுடைய உரிமைகளை, உணர்வுகளை மதித்து தமிழ் மொழியில் பேசும் அவ்வளவு விடயங்களையும் சிங்கள மொழியிலும் பேசுகின்றனர். இதனைக் கடந்தமாதம் வவுனியாவில்நடந்த மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியிலும் திருமலையில் நடந்த சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்க சமாசங்களின் இணைய அங்குரார்ப்பண நிகழ்விலும் அவதானிக்க முடிந்தது. தமது சொந்த மக்களின் துயரங்களை தேவைகளைப் புரிந்துகெள்ளா விட்டாலும், கனவான்களாகத் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்ளும் தகைமை பெற்றமைக்கு பாராட்டுக்கள்.

பேச்சுவார்த்தை, இடைக்கால நிர்வாக அலகு என்பவற்றை உருவாக்கு முன்பே, தற்போதைய புரிந்துணர்வு நிலைமையினை தமக்கு சாதகமாக்கிக் கொள்வதற்காகவே 'யுகதக்ம' வர்த்தக கண்காட்சி, துறைமுக இறங்குதுறைத் திறப்பு விழா என்பன அவசர அவசரமாக நிகழ்த்தப்பட்டது சந்தேகிக்கத் தோன்றுகிறது என சொல்கிறார்கள்.

திருமலையில் பல தசாப்தங்களாக தமிழர்பாரபட்சமாக நடத்தப்பட்டதை மக்கள் இன்னும் மறக்கவில்லை. திருமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாய, கைத்தொழில், மீன்பிடிஅபிவிருத்திப் பணிகளில் பயன்பெற்றவர்கள் திருமலை மாவட்ட மக்களாக இல்லாமல் தென்னிலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்டவர்களாக இருந்ததை எப்படி மறக்க முடியும்.

சீனன்குடா விமானத்தளம், திருமலைத்துறைமுக கடற்படைத்தளம் என்பன அடுத்தடுத்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதன் பின் திருகோணமலையின் தளமுக்கியத்துவம் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. யுத்தநிறுத்தத்தைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசு கைத்தொழில் மயமாக்கலின் நன்மைகளைப் பக்கச் சார்பாகப் பெற்றுக்கொள்ள முயல்கிறதோ என எண்ணத்தோன்றுகிறது.

●●●

திருகோணமலையில் பிரித்தானியரால் இரண்டாம் உலக யுத்தத்தின் போது நிர்மாணிக்கப்பட்ட எண்ணெத்தொட்டிகளின் பண்ணை (Oil Tank Farm) தற்போது இந்திய எண்ணெய் கம்பனிக்கு குத்தகைக்கு விடப்படுவதற்கான ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 15,000 தொண் எண்ணெய்களைக் கொள்ளக் கூடியதான நூற்று ஒரு எண்ணெக் குதங்கள் இப்பண்ணையில் காணப்படுகிறது. தற்போது 17 தொடக்கம் 25 வரையான எண்ணெக் குதங்களே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் உபயோகிக் கப்படுகிறது. இவற்றில் விமான எரிபொருள், பெற்றோல், கைத்தொழில் மண்ணெய் சல்பர் டீசல் ,ஆட்டோ டீசல், பாரடீசல், சுப்பர் மண்ணெய், 500 செக்கன்கள் எரியும் எண்ணெய், என வகைப்படுத்தப்பட்ட எண்ணெய்கள் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளன. இதில் 1000 செக்கன்கள் எரியும் எண்ணெய்,800 செக்கன்கள் எரியும் எண்ணெய்,1000 செக்கன்கள் எரியும் எண்ணெய் கப்பல்களுக்கும், பாரிய இயந்திரங்களுக்கும் பயன்படுத் தப்படும் தடிப்பான எண்ணெய்யாகும்.

ஒன்று தொடக்கம் நூற்றொன்று வரை இலக்கமிடப்பட்ட எண்ணெய்குதங்களில் 91 இலக்க குதம் பழுது பார்க்க முடியாத அளவுக்கு சேதமாக்கப்பட்டுள்ளது. 1945ல் இரண்டாம் உலக யுத்தத்தில் யப்பானிய விமானங்களின் தாக்குதலுக்கு இலக்கானது. இப்பண்ணை, விமான எதிர்ப்புப் பிரங்கியின் தாக்குதலுக்கு உள்ளான விமானமொன்றின் விமானி 91 இலக்க எண்ணெக் குதத்தின் மீதே தனது விமானத்தை வீழ்த்தினான். இதனால் தீப்பிடித்து இக்குதம் இரண்டு நாட்கள் தொடர்ந்து எரிந்துள்ளன. இவ்விமானத்தின் சிதைவுகளும், இக்குதமும் உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக மாற்றப்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. இதேபோன்று 1958ல் இலங்கை விமானப் படைவிமானம் ஒன்றும் 6 பேருடன் இப்பண்ணையுள் வீழ்ந்து நொருங்கியுள்ளது.


இப்பண்ணை அபிவிருத்தி செய்யப்படும் எனில் இலங்கைக்கு ஐந்து வருடங்களுக் குத்தேவையான எண்ணெயைக் களஞ்சியப்படுத்த முடிவதுடன் எரிபொருள் நிரப்பு வதற்கான கப்பல்களின் வருகையையும் அதிகரிக்க வைக்கமுடியும். சீனன் குடாவில் அமைந்துள்ள இவ் எண்ணெக் குதப் பண்ணைக்கு அருகாக பல கைத்தொழில் பேட்டைகளையும் ஆரம்பிக்க முடியும். ஏறக்குறைய 5000 ஏக்கர் நிலம்துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பில் உள்ளது. இவற்றிற்கான எண்ணெய் விநியோகம் இப்பண்ணையில் இருந்தே நடத்தப்பட முடியும் என்பதுடன் மூலப்பொருட்களை எடுத்து வருவதற்கும், உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்வதற்குமான ஜெற்றிகளையும் , இவ்வாழ் கடற்கரைப் பிராந்தியத்தில் அமைக்க முடியும். இதன்மூலம் இலகுவானதும், மலிவானதுமான ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக துறைமூலம் இலங்கை அன்னிய செலாவணியை எட்டுவதுடன், கைத் தொழிலுடன்உல்லாசப் பயணத் துறை, வீடமைப்பு வைத்திய வசதி மேம்பாடு என வளமிகு பூமியாக திருகோணமலை மாற்றப்படும். விமானப்படை,கடற்படை, இராணுவ பாதுகாப்பு அமைப்புக்களுடன் ஆசியாவிலேயே பாரிய கைத் தொழில் பேட்டையாக திருகோணமலை மாற்றப்பட முடியும் என ஓய்வுபெற்ற படையதிகாரி லெப்..கேணல் சான் பல்தசார் தெரிவிக்கின்றார்.

திருமலையில் ஏற்கனவே யப்பானிய பிரிமா கோதுமை அரைக்கும் ஆலை, மிற்சுஜி சிமெந்து அரைக்கும் ஆலை, என்பன இயங்கிக் கொண்டிருக்கின்றன. தற்போது ஒப்பந்தம் முடிக்கப்பட்ட இந்தியன் எண்ணெக் கம்பனியைவிட வெங்கடேஸ்வரா கோக் அன் பவர் நிறுவனம் எனும் மற்றொரு இந்தியக் கம்பனி உருக்காலைகளுக்குப் பயன்படும் நிலக்கரியைப் பதப்படுத்தும் ஆலை ஒன்றை திருமலையில் நிறுவ முயல்கிறது. இதன்மூலம் பெரும் சூழல் மாசுப் பிரச்சினை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஏற்படுத்தப் படுகின்ற ஒப்பந்தங்கள் நடைமுறைகள், பற்றி தமிழர் தம் பிரதிநிதிகளோடும்பேசி முடிவுகளை எட்டுவதில் அரசு ஏன் அலட்சியம் காட்டுகிறது என்பது கேள்விக்குறியாகி எம்முன் எழுகிறது.

❑

வாழ்வில் நமக்குச் சொந்தம் என்று சொல்லக்கூடிய சொத்து நம் செயல்களே- -சார்ல்ஸ் கோல்ட்டன்



# ரசிகன் - தொண்டன்

ரசிகன் - தொண்டன் ஆகிய இருவருமே ஒரு மனிதனிடமோ கருத்ததுடனோ நெருங்கிய உறவு கொண்டவர்கள். இந்த உறவின் சிறப்பு இவர்கள் எந்த லாபமும், பிரதிபலனும் எதிர்பார்க்காமல் எதற்கும் உறவுமுறை தான். காதலிலும் நட்பிலும் கூட நெருக்கத்தையும் அக்கறையையும் அனிச்சையாய் எதிர்பார்த்தே உறவு அமைகிறது. ஆனால் ரசிகனும் தொண்டனும் எதையும் எதிர்பார்க்காமல் அன்பு கொள்கிறார்கள். காட்டுகிறார்கள். பலன்கருதா கர்மயோகம் போல உயர்வாக இது தோன்றும். ஆனால் அடிப்படையில் இது ஒருவனின் சுயவளர்ச்சியை தேக்கமுறச் செய்யக்கூடிய உறவு. உறவுகள் வளர்ச்சிக்காகத்தான, வளரவுமம, வளரஉதவவும்தான, தேக்கநிலையுமம, நிலைமறந்த லயிப்பும் ஆரோக்கியமான உறவுகளின் வெளிப்பாடுகளாகாது.

பொதுவுடமைக் கருத்திலும். அந்தக் கொள்கை சார்ந்தகட்சிகளிலுள்ள தோழர்களும் கூட பிற தொண்டர்களிடமிருந்து பெரிதாக மாறுபடுவதில்லை. சந்திக்கவும். விவாதிக்கவும் இவர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகம் தரப்பட்டாலும். இந்தத் தோழர்களும் தலைமையின் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டவர்கள். தலைமை ஒரு தனிமனிதனின் ஆற்றலையும் மீறிஅவனிடமுள்ள கவரும் சக்தியாலேயே ஒருவனுக்குக் கிடைக்கிறது. பொதுக்குழுவோ செயற்குழுவோ கூடி முடிவெடுத்தாலும் தலைவனின் குரலும் கருத்தும் முடிவைத் திசை செலுத்தும். தோழர்கள் பிறகட்சித் தொண்டர்களை விடவும் சிந்திக்க விவாதிக்கப் பழகுவதால் அவர்கள் விலகவும் எளிதாக முடியும். விலகல் ஓர் உறவின் முறிவு. எந்தமுறிவும் வலிக்கும். சிந்தனை செய்து சேர்ந்தவர்களே வருத்தப்பட்டால், பிறரைப் பற்றி விவரிப்பது தேவையில்லை.

பிறகட்சிகளில் பல வகைகள். முறைகள் உண்டு. எல்லோர்க்கும் தொண்டர்கள் தேவை. தலைமையின் ஆணைக்கேற்ப, ஊர்வலம, சுவரொட்டி என்று உழைக்கும் இவர்களில் சிலர் இதை ஒரு விலைக்காகவும் சம்பளத்திற்காகவும் செய்வதுண்டு. அவர்கள் பணியாளர்கள். தொண்டர்கள் தீவிரமானவர்கள். தலைமையின் குறைகளை யார் சுட்டிக்காட்டினாலும் கண்களை மூடி ஆராதிப்பவர்கள். இத்தகைய தொண்டர்கள் கருத்திற்காக என்று சொல்லிக் கொண்டாலும் ஆழத்தில் தலைமை வகிக்கும் அந்த நபரிடம் கொண்டுள்ள இனம்புரியாத ஈர்ப்பிலிருந்து விலகமுடியாதவர்கள். கொள்கை குறிக்கோள் என்றுள்ள கட்சிகளை அடையாளம் காண என்னால் முடியவில்லை. ஆரம்ப ஆதர்சங்களின் அடையாளங்களை கழற்றிவிட்டு பதவியே குறிக்கோளாக இயங்கும் கட்சிகளே மிக அதிகம். இவற்றின் தொண்டர்களைத் தெரிந்துகொள்வதன் மூலம் நாம் ஒரு தொண்டனாய் மாறாமல் தற்காத்துக் கொள்ளலாம். தொண்டு உயர்வான செய்கை. தொண்டன்தற்போது தன்னையே தானம் செய்துவிட்ட அடிமை. அவன் ஒருபக்க கண்ணாடி பூட்டப்பட்ட குதிரை.

பிறதிசைகளும் அவனுக்கு மறைக்கப்பட்டுள்ளன. செல்லும் வழியும் அவன் தானாய் நிர்ணயிப்பதில்லை. தலைமையின் கட்டளை அவனுக்கு வேதம். அதன் எதிரிகள் அவனுக்கு விரோதிகள். உயிர்கூட அவனுக்கு முக்கியமில்லை. அந்தத் தலைமைக்குத் தொண்டாற்றுவதே அவன் வாழ்க்கையின் அர்த்தம். இந்த வினோத விபரீத உறவு ஏன் ஏற்படுகிறது?. அனைத்து மனிதர்களுக்கும் அறிவும் ஆற்றலும் இருக்கிறது. அதை வளர்த்துக்கொள்வதும் . வாய்ப்புக் கிடைக்கும் போது வெளிப்படுத்துவதிலும் தான் சிலர் மேடையில்



இருக்கிறார்கள். பிறர் கீழிருந்து கைதட்டுகிறார்கள். கைதட்டும் ஒவ்வொருவருக்கும் கைதட்டல் சமாதானமும்தான் பலரை முயலவிடாமல் தடுக்கும் பெரிய இடர். அதிஷ்டம் என்பது வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வதுதான். வாய்ப்பு கிடைப்பதல்ல! வாய்ப்புகள் சிலர் கண்களுக்குத்தெளிவாகத் தெரிகின்றன. உடனே பயன்படுத்துகிறார்கள். பலருக்கு முயலவே பயம் அச்சத்தையும் அசதியையும் அதிஷ்டம் இல்லை என்று எண்ணி வாய்ப்பை தவறவிடுகிறார்கள். தகுதியில்லாமலேயே எப்படிச் சிலர் வெற்றி பெறுகிறார்கள். என்று கேட்கலாம். தகுதியைவிட உழைப்பும் முனைப்பும் தான் வெற்றியைத் தருகிறது. வெற்றி குலுக்களில் விழும் பரிசல்ல. விலைகொடுத்து வாங்கவேண்டிய விசயம். வெற்றி பெற்றவரின் புகழும் பிரபல்யமும் கண்ணுக்குத் தெரியும். அந்த மகுடத்தைச் சூட்டிக்கொள்ளுமுன் மண்டையில் விழுந்த அடிகள் தெரிவதில்லை. எதையும் தாங்கும் இதையமும். தன்னம்பிக்கையும். தொலைநோக்கும் உள்ளவர்களே வெற்றிபெற்ற தலைவர்களாகிறார்கள். எந்தத்தலைவனும் (மிகச் சிலர் தலைமையை வாரிசாக நினைத்தாலும்) சுலபமாக அந்த இடத்தை அடைவதில்லை. வைராக்கியம, வீரம், வலிதாங்கும் வலிமை, முனைப்பு, ஓரே குறிக்கோளை நோக்கிய நேர் கொண்டபார்வை. நிலம் பிளந்தாலும் நிமிர்ந்த நன்னடை இவையே தலைவனை உருவாக்கும். இப்படித் தலைவனானவனுக்குத் தானாக ஒரு தனிக்கவர்ச்சி உருவாகும்.

அந்தக் கவர்ச்சியை எல்லோராலும் காண முடியும். அந்த நிலையைஅடைய மனதார விழைந்து, முடியாது என்று முடிவெடுப்பவனே முழுமையான தொண்டனாகின்றான். தொண்டனுக்குத் தலைவனாகும் எண்ணம் கிடையாது. தூரஇருந்து பார்க்கும் பலருக்கும் இருவரையும் புரியாது. இதற்குக் காரணம் இவர்களது வாழ்க்கையின் இறுக்கங்களும் தேவைகளுமே முழுநேரத்தை எடுத்துக்கொள்வதால் - சக மனிதர்களின் தலைமை அவர்களுக்குத் தேவையில்லாத கனவு. தேவையில்லாத எதுவுமே கனவில் கூட வருவதில்லை.

தன்னால் முடியாததை இன்னொருவன்

கூட வருவதில்லை.

தன்னால் முடியாததை இன்னொருவன் செய்வதைப் பாராட்டி மகிழ்வது ரசிப்பு. தான் எட்ட முடியாத உயரத்தை அடைந்தவனிடம் தன்னையே இழந்து.வன் நெற்றியில் தன் நெற்றியைக் கானலாய்க் காணும் நிலைமையே தொண்டனின் செயல்பாடு.. தன்னையும் தலைவனையும் உள்ளுக்குள் ஒன்றாக்கி. வெளியில் வேறாக்கி. அதில்தன்னைக் கீழாக்கிக் கொள்பவனே தொண்டன். அவனது மகிழ்ச்சி அவன் தலைவனின் வெற்றி மட்டுமே. அவனது வாழ்க்கை அந்த தலைவனின் உயர்வு தாழ்வுகளை ஒட்டியே. அவனது உழைப்பு தலைவனுக்காகவே. சில மிக முட்டாள்களுக்கு உயிரும் தலைவனுக்காகவே. இத்தகைய தொண்டர்கள் ஒரு தலைவனுக்குத்தேவை தொண்டர்களைத் தலைவர்கள் ஊக்குவித்து வளர்க்கிறார்கள். பலியாவதும் மோட்சம் என்ற மூடநம்பிக்கையுள்ளவர்களைப் போலவே தொண்டர்களும் இப்படி வளர்க்கப்படுவதை விரும்புகிறார்கள்.

ஆழமாய்ப் பதிந்துவிட்ட தன்னைப் பற்றிய அவநம்பிக்கையும்.தலைவன் மீதுள்ளஅதீத நம்பிக்கையும் எந்த நியாயவாதத்திற்கும் தெளிவான விவாதத்திற்கும் உட்படாது. இவர்களை மாற்றுவது அனேகமாக முடியாது. இவர்களிலும் சிலர் ஒருநாள் உண்மைநிலையை, தன்னிலையை, தன் குடும்பநிலையை தன்வாழ்வின் திசையை உணரும்போது தொண்டனாக இருந்த சுயஅடிமைச் சாசனத்தை கிழித்து வெளிவருவார்கள். அப்போதும் சமூகம் அவர்களை தொண்டனாகவே தொடர்ந்து-பார்ப்பதால் வெட்கமும் குற்ற உணர்வும் வேதனையும் பொங்கும் மனநிலையை காலப்போக்கில் கடக்க முடியும். - என்ற நம்பிக்கை இல்லாதவர்கள் தொடர்ந்து தொண்டனாக மீண்டும் அரிதாரம் பூசிக்கொண்டு உள்ளுக்குள் அழுவார்கள்.

தொண்டர்கள் ஓரே ரகம். ரசிகர்கள் பலவிதம். ரசனை மானிட அறிவின் முக்கியம்சம். ரசனை ஓர் வெளிப்பாட்டின் மீதிருந்தால் அது உள்ளுள்ள அழகுணர்வின் அங்கீகாரம். அதுவே வெளிப்படுபவர் மீதிருந்தால் அபாயமான அறிகுறி. ரசிகர்களுக்கும் கலைஞர்களுக்கும் உள்ள உறவு இருவருக்குமே தேவைப்படுகிறது.

கலைவளர- கைதட்டல் தேவையில்லை. கலைஞன் வளர கைதட்டும் ரசிகன் தேவை. அந்தப் பாராட்டு உற்சாகம் தரும். அந்த உற்சாகம் தன்னம்பிக்கையைவளர்க்கும் அந்த தன்னம்பிக்கை திறமையைப் பரிசோதனைகள் மூலமும்மெருகேற்றும். மெருகேறிஉச்சநிலையை அடையும்கலை-ரசிகனை மகிழ்விக்கும். மகிழ்ச்சி கைதட்டும். கைதட்டலும் மகிழ்ச்சியும் சங்கிலி வளையமாகித் தொடரும்.

கலையை ரசிப்பவர்கள் பலர் உண்டு. சிலர் கலையோடு கலைஞனையும் ஒருசேர ரசிப்பவர்கள். இப்படி கலையை மீறி ஒரு தனிப்பட்ட காந்த சக்தி உடைய கலைஞர்களின் ரசிகர்கள். தலைவனின் தொண்டர்கள் போலவே மாறிவிடுவார்கள்.

கலைஞர்களின் ரசிகர்கள். தலைவனின் தொண்டர்கள் போலவே மாறிவிடுவார்கள். திரைப்படக் கலைஞர்களிடம் இத்தகைய ரசிகர்களை அதிகம் காணலாம்.

திரைக்கலைஞர்களின் ரசிகர்களையும் இரண்டு விதமாகப் பிரிக்கலாம். நடிகைகளின் ரசிகர்கள் மாறுவதுபோல நடிகர்களின் ரசிகர்கள் விரைவிலும் எளிதிலும் மாறுவதில்லை. இதற்குக் காரணம் நடிகைகளிடம் அழகையே எதிர்பார்க்கும் ரசிகர்கள் காலத்தின் கட்டாயத்தால் அந்த இளமை அடுத்த நடிகையிடம் தென்படும்போது மாறுகிறார்கள். கவர்ச்சி என்பது உடலைக் காட்டுவது மட்டுமல்ல. கண்களிலும் அசைவுகளிலும், பார்வையிலும் இருப்பது. அன்று சரோஜாதேவிக்கு ரசிகனாக இருந்தவன் இன்றும் சிம்ரானின் ரசிகனாக மாறியிருப்பான். ஆனால் எம்.ஜீ.ஆரின் ரசிகன் அவரைவிட அல்லது அவர் அளவுக்கு என்று யாரையும்

கூறமாட்டான். நடிகர்களுக்கு மட்டுமே இந்தக்கால நீடிப்பு கிடைக்கிறது. அதற்குக் காரணம் அவர்களது சமூக நோக்கு. எதை

இங்கேயும் ரசிகர்களின் இரண்டு வகைகளை இனம்கண்டு கொள்ள வேண்டும். சிலர்பாராட்டி, புன்னகைத்து கைதட்டி அடுத்த நாள் தங்கள் சொந்தவேலையே முக்கியம் என்று போய்விடுவார்கள். இவர்களது ரசனை-மன்றம் அமைத்து. போட்டியாய் கிளர்ந்தெழுந்த ரசிகனின் ரசனைக்கு எந்தவிதத்திலும் குறைவானதில்லை. ஆனால் உண்மையான ரசனையின் வெளிப்பாடு கலையின் காட்சியின்போதுதான். அதன்பின் இருப்பது கலைஞனின் மீதுள்ள மதிப்பும். வியப்பும் இதையும் மீறி கலைஞனை வழிபடுமளவு போகும் வெறி சில ரசிகர்களுக்குத்தான் உண்டு. இவர்கள் இரண்டாம்வகை. தங்கள் ரசனையை ஏன்என்று கேட்கவோ விளக்கவோ முடியாது. கண்மூடித்தனமான தனிமனித வழிபாட்டில் சுய அடையாளம் தொலையுமளவு கலைஞனிடம் தன்னையே தந்துவிடுபவர்கள்.

தனிமனித வழிபாடு பல நிலைகளில் உண்டு. தன் அபிமான நடிகைக்கும் நடிகருக்கும் 'கோயில்' கட்டும் 'ரசிகர்கள்' செய்வது வழிபாடு அல்ல. வெறும் கவன ஈர்ப்புதான். கலைஞனிடமே முழுக் கவனமும் உள்ள ரசிகன் இதைச் செய்வதில்லை. தனக்கும் ரசிகர்களை உருவாக்க விரும்பும் ரசிகனே இப்படிச் செய்வான். இவன் தான் மன்றம் ஆரம்பித்து 'குட்டித்தலைவன்' என்றாகவும் முயல்வான்.

தன் அபிமான கலைஞனின் நடை உடை.பேச்சு. எல்லாவற்றையும் சில ரசிகர்க்ள் நகல் எடுத்து தமதாக்கிக் கொள்வதையும்பார்க்கலாம். இதுவும் கவன ஈர்ப்புக்காகத்தான்.

கவன ஈர்ப்பும் மனிதனின் இயல்பான குணங்களில் ஒன்று. கலைஞனாய் ஆற்றலை வெளிப்படுத்தும்போது அவன் மீது பலரின் கவனம் பாய்கிறது. அவன் மனம் நிறைகிறது. ரசிகனாக இருப்பவனும் ஒருநாள் இதேபோல் கலைஞனாய் கவனத்தைக் கவர விரும்புபவன்தான். அந்த நிலையை அடைய முடியாதவன்-தலைவனாக முடியாத தொண்டனைப் போல- ரசிகனாகவே காலத்தைக் கழித்துவிடுகின்றான். தொண்டன்

போல- ரசிகனாகவே காலத்தைக் கழித்துவிடுகின்றான். தொண்டன் வாழ்நாள் முழுவதும் அப்படியே இருந்துவிடுவான். ரசிகன் ஒருநாள் தன் சொந்த வாழ்க்கையின் மீது கவனத்தைத் திருப்புவான். வெறி-விருப்பம் என்ற மிதமான நிலைக்கும் வரும். தொண்டனைச் சமூகம் ஏன் மாறினாய் என்று கேட்கும் விதத்தில் ரசிகனைக்கேட்பதில்லை. ரசிகன்தன் அபிமான கலைஞனை உயர்த்திப்பேசி வியந்து மகிழ்ந்துவெறியில் ஆடியவன். ஆனால் தொண்டன் தன் தலைமையின் வெற்றிக்காகத் தெருத்தெருவாய் அலைந்து தெரியாதவர்களிடம் கூட கெஞ்சி நின்றவன். இதனால்தான் தொண்டன் நெடுங்காலம் அப்படி இருக்க வேண்டிவருகிறது. ரசிகர்கள் அந்தவெறி தணிந்து. தன்வாழ்வை வளர்க்க முயலும்போது சமூகம் அவனைப் பாராட்டுகிறது. அவன் முதிர்ச்சி அடைந்ததாகக் கருதுகிறது. நெடுங்காலம் ரசிகர்களை ஈர்த்துவைக்க அன்று எம்.ஜீ.ஆருக்கு இருந்ததைப்போன்ற கவர்ச்சியும். திட்டமும். கவனமும் இதற்குரிய பிரத்யேக ஆற்றலும் உள்ள கலைஞர்கள்தான் வருடந்தோறும் புதிய ரசிகர்களை உருவாக்குவார்கள். ரசிப்பும் ஒரு 'கூட்ட மனப்பான்மைதான்' எல்லாரும்கைதட்டும்போது தனக்குள்ளும் கைதட்ட ஓர் உற்சாகம் பிறப்பதைத்தான் இந்தக்கூட்ட மனப்பாண்மை ஏற்படுத்தும். இப்படித்தான் ரசிகர்கள் ஆதரிக்கிறார்கள். ஓரே கலைஞனை ரசிக்கும் ரசிகர்கள் ஒருவொருக்கொருவர் இந்தக்காரணத்தை வைத்தே நெடுங்காலம் . இது நட்பு அல்ல பயண உறவுபோலத்தான். பயணம் செய்யும் காலத்தைப் பொறுத்தே உறவின் காலமும் இருக்கும்.

ரசிகன்-தொண்டன் என்ற இரு நிலைகளில் இருப்பவர்களுக்கும் தனிமனித வழிபாடு உண்டு. தங்கள் தலைவனோ கலைஞனோ- இப்படிக் கண்மூடித்தனமாக ஒருவரைப் பின்பற்றுவதும். குறைநிறை சமூகத்திற்கும் இவனால் பயன்கிடைக்காது. மூடநம்பிக்கை வளர்க்கும் சில போலி பக்தர்களைப் போலில்லாமல். மூளையைப் பயன்படுத்தாமல் நம்பிக்கையும் நேசமும் வைத்திருப்பவர்களே தீவிர ரசிகர்கள் தொண்டர்கள்.

ரசிப்பும்.மதிப்பும் கொள்கைப்பிடிப்பும் வாழ்க்கைக்கு உதவும். ஓய்வெடுக்கும் போதுமட்டுமல்ல.சோர்ந்திருக்கும்போதும் நம் ரசனைக்கேற்ற கலைஞனின் கலை நம்மனதை ஆசுவாசப்படுத்தும், சுகப்படுத்தும். அமைதியும்உற்சாகமும். கூட்டும் கலையின் மீதுள்ள மதிப்பு நம் பார்வையை விரிவடையச் செய்யும். கொள்கைப்பிடிப்பு உள்ளுக்குள் சமுதாயப் பார்வையைச் செழுமையாக்கும். இவற்றை நாமே உருவாக்க முடியாத போது - கலைஞர்களும் தலைர்களும் இதைத் தருகிறார்கள். தருவதும் பெறுவதுமான உறவில்- தன்னையிழத்தல்தேவையில்லை. தரத்திற்கேற்ற விலை கொடுப்பது போல. தகுதிக்கேற்றபாராட்டை கைதட்டலாகவோ. தேர்தல்நேரத்தில் வாக்காகவோ அளிப்பது மட்டுமே அவசியம். அதை மீறிய மனதின் செயல்கள் தெளிவின்மையால் வெளிப்படுபவை.

ரசிகனும்- தொண்டனும் எப்படித் தன்னை இழந்து. தன்வாழ்வின் வளர்ச்சியைக் கெடுத்துக் கொள்கிறானோ அதபோல் 'பக்தனுக்கும்' இந்த அபாயம் உள்ளது. வெளியே இவர்கள் சமூகத்திற்காகத் தன்னையே- தன் வாழ்வையே தியாகம் செய்வதாக சித்திரித்தாலும். உண்மையில் இவர்கள் தங்கள் மேலுள்ள அவ நம்பிக்கையை தங்களுக்குத்தாங்களே மறைத்தக்கொள்கிறார்கள். சமூகத்திற்குத் தொண்டாற்ற அக்கறையும் அறிவும் தான் அவசியம். ரசிகர்-தொண்டர்கொள்ளும் வெறி உதவாது. அது அவர்களது- அந்தக் காலகட்டத்தின் பசிக்குக் கிடைக்கும் நொறுக்குத்தீனி.அவ்வளவுதான்.

நன்றி:-டொக்டர் ருத்ரனின், உறவுகள்




# மனம்பொருந்தினால்

**தனபாலசிங்கம்**



நீண்ட கூந்தல். அவள் சைக்கிள் ஓடுகையில் கரியருக்குள் சிக்கி எத்தனையோ தடவைகள் அவஸ்தைப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். கூர்முகம். பொதுநிறம். கிளியோப்பற்றா போல இல்லத்தான். ஆனாலும் அழகிதான்.

அவளை நெருங்கி அறியாதவர்கள் கடுமையானவள் எண்டு சொல்லுவதைக் கண்டிருக்கிறன். ஆனா... நான் கடுமைய அவளிடம் உணர்ந்ததில்லை. நண்பி என்பதாலோ என்று நான் பல தடவைகள் எண்ணிப் பார்த்திருக்கிறேன். ஆனா அப்பிடியில்ல.

பள்ளிக்கூடத்தில படிக்கேக்க அவள்தான் எல்லாத்திலையும் பெஸ்ட். அவளைக் கண்டாலே எங்கட பள்ளிக்கூடத்தில எல்லோருக்கும் மரியாதை. ஆசிரியர்களுக்கும் அவளில மரியாதை. எங்கட வகுப்புப் பெடியன்கள் கூட அவளைக் கண்டா தனி மரியாதை.

ஆனா அவளுக்கு இதுகளெல்லாம் தெரியாது. படிக்கோணும். சாதிக்கோணும். அதைத்தான் அவள் அடிக்கடி சொல்லுவாள். ஒரு நிமிசத்தையும் வீணடிக்கமாட்டாள். எப்பவும் ஏதோ எழுதிக் கொண்டோ, படிச்சுக் கொண்டோ இருப்பாள். எல்லோருக்கும் தெரியும், அவள் தான் நினைச்சபடியே ஆசிரியரா வருவாளென்று.

அவள் இப்ப ஆசிரியர். எனக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன்கூட ஆண்டு-1 இல படிக்கிறான். அவள் இன்னும் செய்யேல. கௌரவமான தொழில். வசதி வாய்ப்புக்கள் உள்ளவள். அழகானவளும் கூட. அவள் தான் ஒரே பெண்பிள்ளை வேறு. தம்பிமார் வெளிநாட்டில.

நான் அறிய அவளிட்ட பலர் விருப்பம் கேட்டு அவள் விருப்பற்றிருக்க படிச்ச திமிரென்று சொல்லியிருக்கினம். அழகெண்ட ஆணவம் எண்டு சொல்லியிருக்கினம்.

ஆனால், எனக்குத் தெரியும் அவள் அப்பிடியானவள் இல்ல. பள்ளிக்கூடக் காலத்தில அவளைச் சுத்தாத பெடியள் இல்ல. நான்கூட சொல்லியிருக்கிறன் 'நான் பெடியனாப் பிறக்காம விட்டுட்டன்' எண்டு. அவள் அமைதியாய்ச் சிரிப்பாளே ஒழிய ஒண்டும் சொல்ல மாட்டாள். எங்களுக்குப் படிப்பிச்ச வாத்திகூடக் கேட்டது.

எங்கட பெடியள் கேட்டுக் கேட்டுக் பார்த்திட்டு சவால்கூட விட்டவங்கள். "பாப்பம் உவள் எந்த மன்மதக் குஞ்சக் கட்டப் போறாள் எண்டு"

அவள் யாரையும் இன்னும் கட்டேல. இப்ப அவளுக்கு 30 வயது. இப்பவும் என்னோட படிக்கேக்க இருந்தமாதிரியே இருக்கிறாள். கம்பசிலகூட கேட்டுட்டு மரமோ எண்டு கேட்டவங்கள் எண்டு என்ர அக்காவோட படிச்ச பிள்ள சொன்னவா.

என்ர பிள்ளேண்ட பேத்தேக்கு வந்தாள். உரிமையோட கேட்டன். அமைதியாய்ச் சிரித்தாள். அவளின் பிரின்சிப்பல் என்ர அவரோட நல்ல சினேகிதம். இவரும் இவள் படிப்பிக்கிற இடத்திலதான் படிப்பிக்கிறவர். இவளுக்கும் பிரின்சிப்பலுக்கும் சரிப்பட்டு வராது எண்டு சொன்னவர். இவள பள்ளிக்கூட ஸ்ராபில சில பேருக் குப் பிடிக்கிறதில்லையெண்டும் சொன்னவர். ஏனெண்டு கேட்டன். அவளுக்கு இங்கிதமா நடக்கத் தெரியாதாம். எதையும் சமாளித்து அனுசரித்துப் போகமாட்டாளாம் எண்டு ஸ்ராப் சொல்லுறவை எண்டு சொன்னார். நான் நீங்கள் என்ன சொல்லுறியள் எண்டு கேட்டன். அவர் தனக்கு அப்பிடித் தெரியேல எண்டு சொன்னார்.

அவளுக்குப் படிக்கிற காலத்திலேயே நளினம் தெரியாது. நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, ஆரையும் அவள் கண்ணுக்குள்ள ஊடுருவிப் பார்ப்பாள். பிசிறில்லாமல் கதைப்பாள். நெளிஞ்சு வளையிறது. வெட்கப்படுவது அவளுக்குப் பிடிக்காது. எதண்டாலும் தட்டிக் கேட்பாள். அவளுக்கு ஆரெண்டு இல்லை. ஆசிரியர்கள் எண்டாலும் கூட அவள் அப்படித்தான். எந்த டிப்பாட்மெண்டுக்குள்ளையும் தயக்கமின்றி நுழைவாள். நான் அதிபர் வரச்சொன்னால் கூட என்ன ஏதோ என்று இவளைக் கூப்பிடுவன். தனியப்போவெண்டு விரட்டுவாள். தயக்கமும் கூட அவளுக்குப் பிடிக்காது.

உயர் மாணவர் மன்றக்கூட்டங்களில பெண்களை இழிவுபடுத்திற தன்மைகளைச் சாடி அவள் உரையாற்றுவாள். பட்டி மன்றங்களில அவள் தெரிவு செய்யிற தலைப்பு பெண்கள் விழிப்புணர்வு பெறும் வகையினதாகத்தான் இருக்கும்.

வாழ்க்கையை புரிஞ்சு கொண்டு வாழோணும். ஒவ்வொரு பெண்ணும் சுயமா, தன்ர காலில நிற்கோணும் எண்டு கர்ச்சிப்பாள். எனக்கும் அவளமாதிரி இருக்கோணும் எண்டு தோன்றும். ஆனா வராது.

அவள் சொல்லுறது எல்லாம் சரிதான் என்று தோன்றும். ஆனா நடைமுறைக்குச் சாத்தியம் இல்லையெண்டு சொல்லுவன். அவள் சிரிப்பாள். பெண்கள் பெற்றோர உறிஞ்சிற குருதி உறுஞ்சிற அட்டையள் எண்டுவாள். சீதனம் சீதனம் எண்டு அதுகட வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி வாழுற வாழ்க்கை... அவளிட முகத்தில அருவருப்புத் தெரியும்.

நாங்கள் என்ன செய்யிறதடி சீதனம் எண்டால் தானே செய்யிறாங்கள் எண்டு சொன்னன்.

அவள் பார்த்த பார்வை... இப்பவும் என்னால மறக்க முடியாமல் இருக்கு. பிராணியப் பார்த்தது போல பார்த்தாள்.

எனக்கு அவளின்ர பழக்க வழக்கங்கள் எல்லாம் வினோதமாத் தோன்றும். அவளுக்கு எங்களை விடவும் நல்ல நண்பர்கள் அவளின்ர பெற்றோர் தான். அவள் சிறிய வயதிலிருந்தே சுயமாய்த்தான், தன் விடயங்களில் எல்லாம் முடிவெடுப்பாளாம். அவள் எடுக்கும் முடிவுகள மாற்றி அமைக்க வேண்டி இருக்காது எண்டு அவளிட அம்மா சொல்லுவா. அவளுக்கு நிகழ்ச்சிகளில விவாதங்கள் கருத்துரைகள் தான் பிடிக்கும்.

நாங்கள் நித்திரைகொள்ளுற நிகழ்ச்சிகள் தான் அவளுக்கு விருப்பம். அவள் வாய் திறக்கிறது எண்டால் நாங்கள் விளக்கமில்லாமல் கதைக்கிற போதும், சாப்பிடவுமாத்தான் இருக்கும். மற்றையபடி அமைதி. அவளின்ர அம்மா சொல்லுவா அவையின்ர உறவுகளில பலருக்கு ஆச்சரியமாம் எண்ணெண்டு கதைக்காமல் இருக்கிறவள் எண்டு.

வாழ்க்கையில ஒவ்வொன்றையும் அனுபவிக்கோணும் எண்டுவாள். சாப்பிடுவதில் கூட அவளுக்கு ரசனை. அவள் சாப்பிடுவதைப் பார்த்தால் எனக்கும் அப்பிடிச் சாப்பிட வேணும் எண்டு தோன்றும்.

திருமணம் எண்டுறது வாழ்க்கையில ஆகக் குறைந்த கடைசிப்படிநிலை. அதுக்கு முதலில செய்ய வேண்டியவை நிறைய இருக்கு எண்டுவாள்.

வாழ்க்கை வாழுறதுக்கு எண்டுவாள். அவள் எதைத் தான் வாழ்க்கையெண்டு சொல்லுறாள் எண்டு பலருக்குப் புரியிறதே இல்ல. எனக்கும் கூட அவள் விளக்கிச் சொல்லும் வரைக்கும் விளங்கேல.

வாழ்க்கை இயல்பா அமையோணும். வயது வந்திட்டுது எண்டோ, சம்பிரதாயத்திற்கோ, மனப் பொருத்தமற்ற பணப்பொருத்தத்தையோ கொண்டு தீர்மானிக்கப்படுகிற பொருத்தங்கள அவள் வெறுக்கிறவள். 'பிரபஞ்சம் சொல்லுறது போல 90 வீத மான குழந்தைகள் கற்பழிப்பில பிறக்கிறதுகள்தான் எண்டுவாள்.

ஒரு பெண்ணோ, ஆணோ பரஸ்பர விருப்பமின்றி சம்பிரதாயத்திற்காக பெற்றோர் சகோதரருக்காக, பணத்துக்காக, சபலத்தில கூடி வாழ்கிற வாழ்க்கையில பிறக்கிற குழந்தைகள பின்ன எப்படிச் சொல்லுறது எண்டு தர்க்கிப்பாள். சுய விருப்பமின்றி வாழ்க்கையில பிறக்கின்ற குழந்தைகள்... அந்தக் குழந்தைகளிட்ட எப்படி மனவளர்ச்சியை எதிர்பார்க்கிறது எண்டு கடுமையாவாள்.

அவள் சொல்லுறது ஞாயம்தான் எண்டு நான் உணர்ந்திருக்கிறன். பக்கத்து வீட்டுப் பரமேஸ்வரி அக்காவுக்கு எட்டுப் பிள்ளையள். மனுசன்காரன் பொல்லாத குடிகாரன். கண்மண் தெரியாமல் பெத்துப் போட்டான் எண்டு அவ மனுசன எப்பவும் திட்டிக் கொண்டுதான் இருப்பா.

முன் வீட்டிலையும் அப்படித்தான். நந்தினியின்ர மனுசன் குடிக்கிறேல. ஆனா பரமேஸ்வரிஅக்கா மனுசனுக்கும் நந்தினியின்ர மனுசனுக்கும் நடத்தையில அவ்வளவு வேறுபாடு இல்ல. வருத்தமெண்டுகூட பாக்கமாட்டுது இந்த மனுசன் எண்டு நந்தினி எத்தனை தடவை சொல்லி அழுதிருக்கிறாள்.

பின் வீட்டிலையும்கூட இதே நிலைதான். விரும்பித்தான் செய்தவையெண்டு சொன்னவையள். ஆனால் அவையும் மனப் பொருத்தத்த கவனிக்கத் தவறிட்டினம். 'எனக்கு அப்ப ஒண்டும் புரியேல. அப்ப என்னசெய்தாலும் பாராட்டுவார்.

இப்ப எது செய்தாலும் குற்றம், தர்க்கம், அங்க போகாத இங்க போகாத அவனோட கதைக்காத இவனோட கதைக்காத, ஆம்பிள மாதிரித் திரியிற! பாவம் கீதா. கீதாவை எனக்கு நல்லாத் தெரியும் அந்தாள் ஒண்டும் செய்தும் குடுக்காது. செய்யிறதையும் குற்றம் சொல்லும்.

என்னவோ நான் நானாய்ச் செய்யேலத்தான். இருவது லட்சம் குடுத்துத்தான் செய்துவைச்சவையள். ஆனால் என்ர மனுசன் நல்லகாலம் நல்லவராய்ப் போட்டார்.

சரியான புரிதல்இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை. ஜெனி சொல்லுறது நியாயம் தான். ஆனா ஆர்தான் மனப்பொருத்தம் பார்த்துச் செய்து வைக்கினம்; செய்யினம்.

'மிஸ் நீங்கள் மிஸ்பண்ணி விட்டபடியாலோ, மிஸ் எண்டு கூப்பிடுறதெண்டு' ஒரு மாணவன் கேட்டதாய் ஜெனி ஒரு நாள் சொல்லிச் சிரித்தாள். நீ என்ன சொன்னனி எண்டன். 'வாழ்க்கையில மிஸ் நடக்கக் கூடாது எண்டதில மிஸ் சில நிதானமாய் இருக்கிறன். திருமணம்தான் வாழ்க்கையெண்டு நினைக்கிறதால பலருக்கு வாற குழப்பம் தான். திருமணம் வாழ்க்கையின்ர ஒரு பகுதியாய் இருக்கலாம். ஆனால் திருமணமே வாழ்க்கையாகிவிடாது' எண்டு விளக்கம் சொன்னன் எண்டாள்.

இரு மனங்கள் சேருவதுதான் திருமணம் எண்டாள். 'பிரபஞ்சனின்ர தீயிலே வளர்சோதி' சிறுகதை பாத்தனியோ எண்டாள். நான் பார்க்கேல. அவள்தான் சொன்னாள். அவள், அவனிட்ட தோழமையுடனான உறவைத் தேட, அவன் அவளைத்தேட மட்டுமே அவசரப்படுகிறான். ரயில் பயணங்கள்தான் எண்டாள்.

அப்ப நீ செய்யப்போறதே இல்லையோ எண்டன். நீயும் பலரைப்போலத்தான் விளங்கிக் கொள்ளுறாய் எண்டாள். என்ர உணர்வுகளோட பொருந்தினால் செய்வன் எண்டாள். வாழ்க்கையில நல்ல ஒரு நண்பன் துணைவனாய்ப் பொருந்தினால் மகிழ்ச்சிகரமானதுதான். அதுக்காக திருமணம் செய்யாட்ட வாழ்க்கையில மகிழ்ச்சியே இல்லையெண்டோ, பயனற்றது எண்டோ கருதுகிறது அறியாமை எண்டாள்.

எப்படித்தான் அவளால எப்பவும் அமைதியாய், மகிழ்ச்சியாய் இருக்க முடியிதெண்டு எனக்கு ஆச்சரியமாத்தான் இருக்கும். அவளிட தம்பி கனடாவில இருந்து கடிதம் அனுப்பியிருந்தான். கனடாவுக்கு வாவெண்டு. அவள் எழுதின பதில், 'இந்தக் கிராமத்துப் பாடசாலை பிள்ளைகளுக்காக வாழுற வாழ்க்கையில நிறைவு இருக்கு. நிறைவுதான் வாழ்க்கை' எண்டு எழுதியிருந்தாள். என்ன பிறவியோ!

உத்தமச் செயல்களைச் செய்ய நினைத்தால் உடனடியாகச் செய்வதே சிறந்தது. — ஸ்ரீஅரவிந்தர்



## வேண்டப்படாதவர்கள் வருகை பற்றியது

-சத்தியமலரவன்-

நாற்றமெடுக்கும் பார்வையால்
என்னைத் தீண்டாதே
சிரசில் முடிதரித்து
நித்தியமாய் என் தேசமுற்றமெல்லாம்
கணப்பொழுதொன்றில் சிதைத்தழிக்கிறாய்
உன் பேச்சின் ஒலி தீ மூச்சாக
என் முற்றத்து பூஞ்சிறகுகள்
கருகிப்போகின்றன—பெருஞ்சருகாக
நீ ஒவ்வொரு கனத்திருக்கும் காலமாக
என் மனவெளியெங்கும் அனல் பதிக்கிறாய்
உன்னில் நான் தங்கியிருக்கவில்லை
என்னில் நானே தங்கியிருக்கிறேன்
என்னை நீ மறுபடியும் மறுபடியும்
தீண்டாதே—ரத்தக்கரங்களால்
நீ ஒவ்வொரு முறையும் நிசமான பிடிமானங்களற்று
காற்றிலேறி வரும் போதெல்லாம்
என் சுயத்தை கைவிடச் சொல்கிறாய்
என் மனிதர் மூச்சையாகிப் போகின்றனர்
நீ மீளவும் மீளவும்
பேச எத்தனிக்கும் போதெல்லாம்
உன் நிழலின் கொடூரமும்,
ரத்தவாடையும் வீசுகிறது
எனவே,
அன்பான கொடியவனே!
என் பூஞ்சிறகுகளை முகராதே
என் குழந்தைகளைப் பார்க்காதே
என் முற்றம் வராதே
என் மனிதர்களை வாழவிடு
என் மனிதர்களை வாழவிடு

❖

## முற்றுப் பெறவில்லை



-சிவலிங்கம்-தராசு-

இடைக்கால
வசந்தம் வீசுவதையிட்டு
மனம் மகிழ்வதால்
அர்த்தமில்லை!

முழுமையான விடியல்
புலரும் வரை
பலரும் விழிப்போடு
இருத்தல் அவசியம்.

பல இழப்போடு
பலப்பட்ட—எமது
சுதந்திரப் பயணம் இன்னும்
முற்றுப் பெறவில்லை......

திறந்திருக்கும் வழிகளால்
நிறைந்து வரும் பொருள் கண்டு—
சுதந்திரம் இதுவென மனம்
நிறைதல் ஆகாது.

பல உயிர் விதைகள்
மண்ணுள் புதைந்திருப்பதை—சில
சலுகைகள் கண்டு
மறத்தல் கூடாது.

விடியல் பெறும் நேரம்
தலைமை அறியும்—அதன்
செயலுக்கு துணையானால்
துயரம் மறையும்!

## இரண்டு கேள்விகள்

என் கண்கள்
உறங்கி விட்டன.
நினைவுகள் மட்டும் உறங்காமல்
கனவுருவில் தெரிகின்றன.
வயற்காட்டை நாசம் செய்த
யானைக் கூட்டங்கள்
வயற் காவலுக்கு
வருவதைக் காண்கிறேன்.

இனி...
எந்தன் வயலில்
நல்லதொரு காவல் நடக்குமா?
இல்லை,
வயல் முழுவதுமே
நாசமாகி விடுமோ என
இரண்டு கேள்விகள்
என் மனதில் உலவுகின்றன.

-யோ.புரட்சி-

# உருவகக் கதைகள் இரண்டு

## தாய்மை



குயில் அழகாகப் பாடிக் கொண்டிருந்தது.

அந்தக் கோலக் குரலில் ஓர் இளம்காகம் தன்னுடைய மனதினைப் பறிகொடுத்தது. கீதத்தின் ரசனை. வேலையை மறந்தது, சுயத்தை இழந்தது.

"என்ன, இப்படி ஒரேயடியாக உட்கார்ந்து விட்டாய்? கூடு கட்டுவதற்கு அழகான சுள்ளிகள் கிடைக்கின்றன. குடும்பச் சுமையைத் தாங்குவதற்கு உழைப்பு. வா, வா..." என்று அதனை அதன் சுற்றங்களான காகங்கள் அழைத்தன.

அவற்றின் உழைப்பு அதற்குச் சினத்தை மூட்டியது.

"உங்களுடைய உழைப்பும், வாழ்க்கையும்... நான் காகமாகப் பிறந்ததற்காக ஏங்கி ஏங்கிச் சாகின்றேன்... அதோ, பாருங்கள். அந்தக் குயிலும் நானும் ஒரே நிறந்தான். நான் கரைகின்றேன், அது கூவுகின்றது. அதன் குரலைப் பிரதிபண்ணிப்பாட மனிதன் ஆண்டாண்டு காலமாகப் பாடுபட்டு வருகின்றான்..."

"அதற்கு குடும்பமா? பொறுப்பா? தனக்காக மட்டுமே வாழுஞ் சுயநலச் சிறுக்கி."

"உங்களுடைய விளக்கம் எனக்குத் தேவையில்லை. நான் அந்தக் குயிலிடஞ் சங்கீதங் கற்று வரப் போகின்றேன். கரைந்து, எத்தித் திரியும் நமது இனத்திற்கு ஏற்பட்டுள்ள கறையை எனது இசை வெள்ளத்தாற் போக்குவேன்."

"பைத்தியக்காரத்தனம்."

சுற்றத்தவரின் ஆலோசனைகளுக்குச் செவி சாய்க்காது அஃது எங்கேயோ பறந்து சென்றது.

எவ்வளவோ முயன்றும் காகத்திற்குச் சங்கீதம் வரவில்லை.

அதைக் கண்டவுடனேயே குயில்கள் தமது குரல் இனிமையின் இரகசியத்தைச் சொல்லாது பறந்து சென்றன.

ஏகலைவன் பாணியில் வித்தை கற்றும் பயனில்லை.

முயற்சி திருவினையாக்கும் என்கிற நம்பிக்கை பாழாகியது

தனது சொந்த ஊருக்கே திரும்பி வந்தது.

வழியில், ஒரு வேப்பமரத்தின் கீழ் ஒரு குயிற்குஞ்சு குற்றியிராக இருப்பதைக் கண்டது.

அதற்குச் சமீபமாகச் சென்றது.

"உன்னைக் கும்பிட்டேன். என்னை ஒன்றுஞ் செய்யாதே. என் தாய் செய்த குற்றத்திற்காக என்னைப் பழி வாங்க வேண்டாம்'' என்று அழாக் குறையாகச் சொல்லிற்று.

"நீ ஏன் அழவேண்டும், என்னைக் கும்பிட வேண்டும்? நான் ஒரு தீங்குஞ் செய்ய மாட்டேன்... நாங்களிருவருஞ் சகோதரர்களாக வாழ்வோம். நீ அழகாகப் பாடுவாயே... அந்தக் கலையை எனக்கும் கற்றுத் தா" என விநயமுடன் கேட்டது.

"நாங்கள் பாடுகின்றோமா? நாங்கள் பாடுகின்றோம் என்பது வீங்கு கற்பனை."

"நீ குஞ்சாக இருப்பதனால் விஷயந் தெரியாது சொல்லுகின்றாய் போலும்... நீ சங்கீதங் கற்பதற்கு யாரிடம் சிட்சை பெறுவதாக இருக்கின்றாய்?"

"குஞ்சாக இருப்பதனாலேதான் உண்மையைச் சொல்லுகின்றேன்... நான் ஏன் குயிலாகப் பிறந்தேன் என்று வாழ் நாளெல்லாம் அழுது கொண்டேயிருப்பேன்... எங்கள் வர்க்கத்தாருக்குக் கூடு கட்டத் தெரியாது. திருட்டுத்தனமாக உங்கள் வர்க்கத்தாருடைய கூடுகளில் முட்டை இடுகின்றனர். ஆகையினால், குயிற் குஞ்சுகளில் பல செத்து ஒரு சிலவே தப்புகின்றன. தப்புங் குஞ்சுகளும் என்னைப் போல கொத்து வாங்கி, என்னைப் போல குற்றியிராகவே பிழைக்கின்றன. இந்நிகழ்ச்சியினால் ஏற்படுந் தாழ்வுச் சிக்கலிலிருந்து நாங்கள் என்றுமே மீளுவதில்லை... இதனை நினைத்து நினைத்து வாழ்நாள் பூராகவும் அழுது கொண்டேயிருக்கிறோம்... தனிமையின் அழுகுரலைச் சங்கீதம் - இனிமை என்று மற்றவர்கள் நினைத்து விடுகின்றார்கள்... உண்மையைச் சொன்னால், உங்கள் வர்க்கத்தாரைப் போன்று இனம் பெருக்கி வாழத் தெரியாத பாவி நான்..."

வேதனைப் பொருமல்.

இதனைச் சொல்லிக் கொண்டிருப்பதற்கிடையில் ஒரு காகம் பறந்து வந்து அந்தக் குயிலைக் கொத்தத் தொடங்கிற்று.

"அது குஞ்சு. அதன் உயிரை ஏன் பறிக்கின்றாய்...? தாய் செய்த குற்றத்திற்கு இதற்கா தண்டனை?"

"ஓகோ, நீதான் சங்கீதப் பைத்தியம் கொண்டலையுங் காகமா? எனது கூட்டில் வாழ்ந்து என் கணப்பினை இது சுகித்துள்ளது. நான் அரும்பாடு பட்டு என் குஞ்சுகளுக்காகச் சேகரித்த உணவுகளை இது பகிர்ந்துள்ளது. இது உயிர் வாழ்வதால், என் சந்ததியின் வருங்காலத் தாய்மார்கள் ஏமாறுவார்கள், மேலும், வருங்காலக் குஞ்சுகளின் உணவு வஞ்சிக்கப்படும்...'' என்று ஆவேசமாகக் கூறி, ஆத்திரந் தீரும் வரை அக்குயிற் குஞ்சைக் கொத்திச் சென்றது.


தூரத்தில் ஒரு குயில் அழகாகப் பாடிக் கொண்டிருந்தது.

"அதோ, அதுகூட எனது அம்மாவாக இருக்கலாம். பெற்ற தாயையே அறியாது வாழும் அநாதைகள் நாங்கள்" என்று ஈனக் குரலில், உயிர் பிரிந்தும் பிரியாத நிலையிற் குஞ்சு சொல்லிற்று.

"நீ இங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றாய்... உன் அம்மா, எங்கேயோ இருந்து பாடிக் கொண்டிருக்கின்றாளா...? என் வர்க்கம் எவ்வளவோ மேல்..."

"கா...கா...கா..." என்று கரைந்தபடி தனது சுற்றத்தைத் தேடி அந்தக் காகம் பறந்தது. ❑

## சின்னம்



பூலோகத்திலிருந்து வரும் மனிதக் குரல்களைக் கேட்பதற்காகக் கர்த்தர் தமது காதைக் கூர்மையாக வைத்திருந்தார்.

அப்பொழுது, அவருக்குச் சினம் ஊட்டும் வகையிலே சாத்தான் சிரித்தான். ஊழி இரைச்சலாக அட்டதிக்கும் ஒலித்தது.

கர்த்தர் முறுவலித்தார்.

சாத்தான் அவர் முன் தோன்றினான். "கர்த்தரே! நீர் ஏன் உமது சாயலில் மனிதரைப் படைத்தீர்?"

"எம்மைச் சேவிக்க..."

"கீழே குனிந்து பாருங்கள். நீங்கள் படைத்த மனிதப் புழுக்கள் பசியுடன் துடிப்பதை... ஞானப் பழத்தைச் சாப்பிட்டதினாலே அவனுக்குப் பசியுணர்வு ஏற்பட்டதாக யான் அறியேன்."

"மனிதனுக்கு என்னுடைய ஞாபக சக்தியை யாம் படைக்கவில்லை."

"அதற்காக...?"

"பசி வேளையிலாவது கர்த்தரின் ஞாபகம் ஏற்படுமல்லவா?"

மீண்டுஞ் சாத்தான் சிரிக்கத் தொடங்கினான்.

"சாத்தானே! என் பின்னாலே போ!'' எனக் கண்டித்தார். சாத்தான் பின்னால் மறைந்தான்.

மௌனம் நிலவியது. அதனை ஊடுருவிக்கொண்டு, மனிதனின் மெல்லிய குரல் அவர் செவிகளில் விழுந்தது.

'பரமண்டலங்களிலேயுள்ள எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக...! அன்றன்றுள்ள எங்களப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்...' ❑

நன்றி:- இளம்பிறை எம்.ஏ. றஹ்மான் மரபிலிருந்து

ஒரு திட்டத்தோடு தொடங்காதே- ஒரு செயலோடு தொடங்கு- ● -ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேள்




# நன்றிக்கடன்



அன்றையதினம் அரியணையில் வந்து அமர்ந்த வுடன் அக்பர் கேள்வி ஒன்றைக் கேட்டார்.

'இந்த உலகில் நன்றி உள்ளவர் யார், நன்றி கெட்டவர் யார்? என்று உங்களில் யாரேனும் கூறமுடியுமா?'

சபையோர் மௌனம் சாதித்தனர்.

'பீர்பால், உங்களாலாவது சொல்ல முடிந்தால் சொல்லலாமே' என்று கேட்டார் அக்பர்.

'இதற்குப் பதிலை நாளை கூறுகிறேன்' என்று கூறினார் பீர்பால்.

அடுத்தநாள், பீர்பால் அரண்மனைக்கு வரும்போது நாய் ஒன்றைத் தன்னுடன் அழைத்து வந்தார்.

அக்பர் அரசசபையில் நுழைந்தவுடன், பீர்பாலையும் நாயையும் பார்த்து விட்டு அமைதியாக அரியணையில் அமர்ந்தார்.

'பேரரசே'! நேற்றுத் தாங்கள் கேட்ட கேள்விக்கான பதிலை இப்போது கூறுகிறேன்; இந்த நாய்க்கு கடந்த ஒன்றிரண்டு நாட்களாக மட்டுமே நான் உணவு கொடுத்தேன். அது என்னிடம் மிகவும் விசுவாசமாக நடந்து கொள்கிறது.

நான் தூரத்திலிருந்து வரும்போதே அது தன்வாலை ஆட்டித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. என்னிடம் பகைமை கொண்டவர்களைப் பார்த்துப் புரிந்து கொள்கிறது. எனவே அவர்களைப் பார்த்துக் குலைக்கிறது.

எனவே உலகில் நன்றி உள்ளவர் என்று கூறினால் அது நாயையே குறிப்பிடக் கூடிய ஒன்றாகும்.

நன்றி இல்லாதவர் யார் என்று கூறுகிறேன். இந்த அவையில் அமர்ந்திருக்கும் தங்கள் உறவினர் யாசீனை எடுத்துக் கொள்ளுவோம். தாங்கள் அவர் பொருட்டு எவ்வளவோ சலுகைகளைச் செய்கிறீர்கள்! சம்பள உயர்வுகளைத் தருகிறீர்கள். பதவி உயர்வையும் தந்து ள்ளீர்கள்.

தங்கள் உணவைச் சாப்பிட்டு வளர்ந்த உடல் அது. தங்கள் சலுகையினால்பெற்ற உயர்ந்த பதவி அது. ஆயினும் நமக்குப் பகைவர்கள் என்று நாம் யாரைக் கருதுகிறோமோ அவர்களுடன் நெருங்கிய உறவை அவர் வைத்திருக்கிறார். அவர்களுக்குத் தேவையான நம்முடைய அரண்மனை இரகசியங்களை அவ்வப் போது தந்து உதவுகிறார்.

சுருக்கமாகச் சொல்லப் போனால் நம்மிடையே இருந்து கொண்டு, நம்முடைய பாதுகாப்பிலே வாழ்ந்து கொண்டு, நம்முள்ளே இருக்கும் பலம், பலவீனங்களை எதிரிகளுக்கு காட்டித் தந்து கொண்டு சுகபோகமான வாழ்க்கை நடத்தும் இவரை நன்றி கெட்டவர் என்று கூறலாமே!' என்றார் பீர்பால். ❑

# வாரம் ஒரு குறல் அறிவோம்



நாம் அடுத்தவரைப் புறங்கூறக்கூடாது.

அதாவது பிறருக்கு தீயவார்த்தைகள் பிரயோகித்தல் தீயசெயல்களைச் செய்வது தீயபழக்கமாகும்.

நாம் எப்பொழுதும் ஒருவருக்கு நன்மையையே
செய்ய நினைக்க வேண்டும்.

அதுவே எமக்கு இன்பத்தையும், திருப்தியையும், நன்மையையும் எமக்குத் தரும்.

நாம் நல்லதைச் செய்தால் தான் நமக்கு என்றும் இன்பம் கிடைக்கும்.

நாம் அவ்வாறு நன்மை செய்யாவிட்டாலும் பறவாயில்லை, நாம் மற்றவர்களுக்கு தீமையாவது செய்யாமல் இருப்பது நன்மையாகும்.

அதாவது மற்றவர்களை புறங்கூறாமல் இருப்பது மிகச்சிறந்தது.

இதனையே வள்ளுவர் புறங்கூறாமை என்ற அதிகாரத்தில் கூறியுள்ளார்.

'அறங்கூறான் அல்ல செய்யினும் ஒருவன்
புறங்கூறான் என்றால் இனிது.'

என்ற குறளின் மூலம் விளக்கியுள்ளார்.

# ரதனும் சுதனும்




ரதன் :- திண்பண்டங்களில் பூஞ்சனம் எப்படி உருவாகின்றன?

சுதன் :- நாள்பட்ட ரொட்டி, பழையவடை போன்ற திண்பண்டங்களிலெல்லாம் நூலிழை போன்று காணப்படுவது ஒருவகை பூஞ்சை ஆகும். இந்த நூலிழை போன்ற தொகுதி "மைசீலியம்" என்ற பூஞ்சை இழைகளாகும். இதன் ஒவ்வொரு இழையும் ஹபே (Hyphae) எனப்படும்.

இந்தப் பூஞ்சைகள் கண்ணுக்கு தெரியாத ஸ்போர்கள் எனப்படும் நுண் விதைகள் மூலம் பரவுகின்றன. ஈரம், காற்று, புரதம், கனிமப் பொருட்கள் முதலிய வளர் ஊடகம் கிடைத்தால் ஸ்போர்கள் வளர்ச்சி பெற்று பூஞ்சை இழைகள் உண்டாகின்றன.


# தாய்ப்பாசம்



கங்காரு தன் எதிரிகளிடமிருந்து தப்ப எப்படித் தாவி ஓடும் என்பது தெரியும். அவற்றுள் தாய் கங்காரு தப்பி ஓடும்பொழுது எதிரியிடம் அகப்பட்டுக் கொள்வோம் என்று தெரிந்தால் என்ன செய்யும் தெரியுமா? தன் வயிற்றுப் பையிலுள்ள குட்டியை எடுத்துப் புதருக்குள் வீசிவிட்டு ஓடிவிடும். தான் அகப்பட்டு இறக்க நேரிட்டாலும் தன் குட்டியாவது பிழைத்துக் கொள்ளட்டுமே என்ற தாய்ப்பாசத்தின் விளைவுதான் அது தாய்ப்பாசம் என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானது தான் என்று புரிகிறதல்லவா?

தெ. மோகனதாசன்
கிளி/புன்னைநீராவி
வித்தியாலயம்.

# கெட்டிக்கார ஃபிளமிங்



"எடிமோனை உந்த சந்தியிலை இருக்கிற ஆசுப்பத்திரியிலை பிள்ளையைக் கொண்டு போய் ஒரு பென்சிலின் ஊசி போடு கெதியா மாறிவிடும்." இதை நான் சொல்லயில்லை பக்கத்து வீட்டு 'கஸ்தூரிப்பாட்டி தான் ஒருநாள் சொன்னவா அம்மாக்கு! இப்பிடியான சில 'மிலேனிய அட்வைஸ்' உங்களுக்கும் கிடைச்சிருக்கும் என்ன!

அதுசரி இந்த 'பென்சிலினை' 1928ஆம் ஆண்டு 'அலெக்சாண்டர் ஃபிளமிங்' என்பவர்தான் கண்டுபிடிச்சார் எண்டது உங்களுக்கு தெரிஞ்சிருக்கும் தானே. ஆனா இதை எப்படி கண்டுபிடிச்சவர் எண்டது தெரிஞ்சிருக்காது தானே அதைத் தான் நான் சொல்லுறன் கேளுங்கோவன்.

முதலிலை 'லைசோசைம்' (Lysozyme) எண்ட எங்கட உடம்பிலை உற்பத்தி செய்யப்படுகிற சில நோய்க் கிருமிகளை அழிக்கிற ஒரு பொருளைத்தான் கண்டுபிடிச்சாராம் இவர். ஆனா இது எல்லா நோய்க் கிருமிகளையும் அழிக்கேல்லையாம். கவலையடைந்த இவர் ஒருநாள் ஆராய்ச்சிக்காக வளர்த்த நோய்க் கிருமிகளை எடுத்துப் பார்க்க காற்றுப்பட்டு அதில் ஒருவித 'பூஞ்சக்காளான்'கள் வளர்ந்திருந்த தையும் நோய்க்கிருமிகள் எல்லாம் செத்துக் கிடந்ததையும் கண்டாராம். இந்தக் காளானிலை ஏதோ ஒருவித கிருமியைக் கொல்லக்கூடிய நச்சுப்பொருள் இருக்குது எண்டதை கண்டறிஞ்ச இவர் காளானிலை இருந்து கிடைச்ச அந்த மருந்துக்கு பூஞ்சக் காளானின் (Penicillium notatum) பெயரிலேயே 'பென்சிலின்' (Penicillin) எண்டு பெயரையும் வைச்சாராம். இதுதான் 'பென்சிலின்' உருவான கதை சரிதானே.

இந்தபென்சிலின், இருக்குதெல்லோ இது மேகநோய் (Syphilis) மேகவெட்டை நோய் (Gonorrhea) செம்புள்ளி நச்சுக் காய்ச்சல் (Scarlet Fever) தொண்டை அழற்சி நோய் (Diphtheria), சிலவகை மூட்டு வீக்கம் (Arthritis), மார்புச் சளி நோய் (Bronchitis), தண்டு மூளைக் கவிகைச் சவ்வு அழற்சி (Mennigitis), இரத்தம் நஞ்சாதல், கொப்புளங்கள் எலும்பு நோய்கள், சீதசன்னி (Pneumonia) தசையழுகல் நோய் போன்ற நோய்களுக்கு மிகத் திறமான மருந்தாம்.

பின்னை என்ன இப்பத்தைய 'பாட்டிமார்' கூட 'பச்சிலை மருந்தை அரைச்சுப் பூசினா பத்து நிமிஷத்திலை ஆறிப்போடும்' எண்ட பழமொழியை எல்லாத்தையும் விட்டுப்போட்டு 'பக்கத்து ரோட்டிலை இருக்கிற டாக்குத்தரிட்டை போய் 'பென்சிலின்' ஊசி ஒண்டு போடு சரியாப் போடும்' எண்டிற 'புதுமொழி'யைச் சொல்லுற அளவுக்கு வளர்ந்திட்டின மெண்டா, இந்த 'பென் சிலினை' கண்டுபிடிச் சாரே '.:பிளமிங்' சரியான 'கெட்டிக்கார பொடியன்'

கண்டுபிடிச்சது தான் கண்டு பிடிச்சான் ஊசியால போடுறதா இல்லாமல் வாயால குடிக்கிறதா என்று கண்டு பிடிச்சிருந்தா எவ்வளவு சந்தோசமான சமாச்சாரமா இருந்திருக்கும். நீங்கள் என்ன நினைக்கிறியள்.

-கல்யாணி-



# நாடுகளின் தலை நகரங்களும், பேசும் மொழியும்

01) ஆப்கானிஸ்தானின் தலை நகரம் எது? மொழிஎது?
காபூல், (பாக்டோ)

02) பங்களாதேஷின் தலை நகரம் எது? மொழி எது?
டாக்கா, (வங்காளி,பீகாரி)

03) பிரேசிலின் தலை நகரம் எது? மொழி எது?
பிரேசில்லா, (போர்ச்சுகீஸ்)

04) கனடாவின் தலை நகரம் எது? மொழி எது?
ஏட்டாவா, (ஆங்கிலம், பிரெஞ்ச்)

05) கியூபாவின் தலை நகரம் எது? மொழி எது?
ஹவானா, (ஸ்பானி)



அன்பிற்குரிய!
தம்பி தங்கைகளே உங்கள் இளையநாதம் பகுதியில் பேனா நண்பர்கள் என்ற புதிய பகுதியை ஆரம்பிக்கவுள்ளோம்.
நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

உங்கள் புகைப்படம் ஒன்றும், தெளிவாக உங்கள் முகவரி, உங்கள் பொழுது போக்கு, உங்களைப் பற்றிய முழுவிபரம் என்பவற்றை எமக்கு அனுப்பி வையுங்கள்.



❖ ❖ ❖ ❖



# நகைச்சுவை

வீதியால் சென்றவர்- வீதியில் கண்டவரை நோக்கி- ஐயா இவ் வழியால் சென்றால் எவ்வழிக்குச் செல்லலாம் எனக் கேட்டார்.

வீதியில் கண்டவர்- ஐயா தாங்கள் எங்கிருந்து வந்தீர்கள் எனக் கேட்டார்.

வீதியால் சென்றவர்- தான் ஆலய வழவடி எனப்பதிலளித்தார்.

வீதியில் கண்டவர்- ஐயா தங்கள் பெயர் யாதெனக் கேட்டார்.

வீதியால் சென்றவர்- தனது பெயர் ராகு எனக் கூறினார்.

வீதியால் சென்றவர்- வீதியில் கண்டவரை நோக்கி- ஐயா தாங்கள் எங்கு வசித்து வருகின்றீர்கள் எனக் கேட்டார்.

வீதியில் கண்டவர்- தாமும் தங்கள் அருகிலேயே வசித்து வருவதாக பதிலளித்தார்.

வீதியால் சென்றவர்- ஐயா அப்படியானால் தங்கள் பெயர் யாதெனக் கேட்டார்.

வீதியில் கண்டவர்- தனது பெயர் கேது எனப் பதிலளித்தார்.

இருவரும்- ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டதோடு நாமும் அவர்களை அறிந்து கொண்டோமல்லவா. ●



# ஓயாத அலைகள் -01

வரவு -எட்டு

ராகவன் எழுதுகிறார்






## குதூகலம்

முல்லா நசிருதீன் ஒரு நாள் இரவு ஒரு சத்திரத்தில் தங்கினார். சத்திரத்தின் முதலாளிக்கு, முல்லா அங்கு தங்குவது பற்றி மகிழ்ச்சி. இரவில் ஏதேனும் வேண்டுமானால், தயங்காமல் குரல் கொடுங்கள். என்று கூறிவிட்டுப் படுக்கச் சென்று விட்டார்.

நடு இரவில் நசிருதீனுக்குத் தாங்கமுடியாத தாகம் ஏற்பட்டது. 'தண்ணீர், தண்ணீர்' என்று பல தடவை கத்தியும் பலனில்லை. தொண்டை வறண்டு விட்டது. உடனே, நெருப்பு, நெருப்பு என்று கூச்சல் போட்டார். முதலாளி உள்ளிட்ட அனைவரும், பாத்திரங்களில் தண்ணீர் மொண்டு கொண்டு வந்து, நெருப்பு எங்கே? என்று கேட்டபொழுது, அவர் அமைதியாக தனது வாயைத் திறந்து கொண்டே, இங்கே ஊற்றுங்கள் என்று சைகை செய்தாராம்.





ஆங்கில தத்துவஞானி பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் பிரபுவிடம் ஒருவர் 'இரு மனைவியரை மணந்து கொண்டால் அதிகபட்ச தண்டனை என்ன கிடைக்கும்?' என்று கேட்டார். சற்றும் தயங்காமல் ரஸ்ஸல் கூறினார். 'இரண்டு மாமியார்கள்!'



காந்தீஜி ஒரு தடவை கப்பலில் பயணித்துக் கொண்டிருந்தபோது வெள்ளைக்காரர் ஒருவர் காந்தீஜியைப் பற்றி ஒரு கவிதை எழுதி அவரிடம் கொடுத்து படித்துப் பார்க்கச் சொன்னார். காந்தீஜியைப் பற்றி நிறையக் குறைகூறி எழுதப்பட்ட கவிதை அது. காகிதத்தைக் கையில் வாங்கிய காந்தீஜி அதில் சொருகப்பட்டிருந்த குண்டூசியை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டார். 'ஏன் சும்மா இருக்கிறீர்கள்? கவிதையைப் படியுங்கள்' என்று வற்புறுத்திய ஆங்கிலேயருக்கு காந்தீஜி அமைதியாகக் கூறிய பதில் 'முக்கியமான விஷயத்தை (குண்டூசி) நான் முன்பே எடுத்து பத்திரப்படுத்தி விட்டேனே!' ஆங்கிலேயர் முகத்தில் ஈயாடவில்லை!



ஒரு சமயம் நேரு இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். தத்துவ மேதையான பெட்ரண்டு ரஸல், "சைஃபர் நாட்டிலிருந்து வருகின்ற உங்களை வரவேற்கிறேன்" என்றார்.

என்ன இது ஒன்றுமில்லாத நாட்டிலிருந்து வருகின்றவர் என்று சொல்லுவது போல் இருக்கிறதே என்று நேரு ஒரு கணம் திகைத்தார்.

"கணித சாஸ்திரத்தில் பெரிய மேதைகளைப் பெற்ற நாடு உங்கள் நாடு, "சைஃபர்" என்கிற எண்ணைக் கண்டு பிடித்து உலகத்துக்கு கொடுத்ததே இந்தியாதான். அந்தப் பெருமையை நினைவுபடுத்தும் நோக்கத்துடன் தான் அப்படிச் சொன்னேன்" என்று விளக்கினார் ரஸல்.

# பேருந்துப்பணிகளின் புதிய நேர விரிப்பு

## 02.09.2002 ஆம் நாளில் இருந்து தொடங்கும்
## ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்

### புதுக்குடியிருப்பு - முகமாலை

காலை 06.00
காலை 06.30
காலை 07.00
காலை 07.30
காலை 08.00
காலை 08.30
காலை 09.00
காலை 09.30
காலை 10.00
காலை 10.30
பகல் 11.00
பகல் 11.30
பகல் 12.00
பகல் 12.30
பகல் 01.00 ஆகிய இந்நேர ஒழுங்கில் புதுக்குடியிருப்பு பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் புறப்படும்.

எடுத்துக்காட்டு

| | | |
|---|---|---|
| புதுக்குடியிருப்பு | | 06.00 |
| விசுவமடு | 06.45 | 06.45 |
| பரந்தன் | 07.45 | 07.45 |
| இயக்கச்சி | 08.20 | 08.20 |
| புதுக்காட்டுச்சந்தி | 08.30 | 08.30 |
| முகமாலை | 08.45 | |

### முகமாலை - புதுக்குடியிருப்பு

காலை 08.30
காலை 09.00
காலை 09.30
காலை 10.00
காலை 10.30
பகல் 11.00
பகல் 11.30
பகல் 12.00
பகல் 12.30
பகல் 01.00
பகல் 01.30
பகல் 02.00
மாலை 03.00
மாலை 04.00
மாலை 05.15 ஆகிய இந்நேர ஒழுங்கில் பளை பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் புறப்படும்.

குறிப்பு :- புதுக்குடியிருப்பு - முகமாலைக்கு 02.45 மணி நேரத்தில் பேருந்து சென்றடையும்.

### புதுக்குடியிருப்பு - புளியங்குளம்

காலை 04.30
காலை 05.00
காலை 06.00
காலை 07.00
காலை 08.00
காலை 09.00 ஆகிய இந்நேர ஒழுங்கில் புதுக்குடியிருப்பு பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் புறப்படும்.

எடுத்துக்காட்டு

| | | |
|---|---|---|
| புதுக்குடியிருப்பு | | 05.00 |
| கற்சிலைமடு | 05.45 | 05.45 |
| மாங்குளம் | 07.15 | 07.30 |
| புளியங்குளம் | 08.00 | |

### புளியங்குளம் - புதுக்குடியிருப்பு

பகல் 10.30
பகல் 11.30
பகல் 12.30
பகல் 01.30
மாலை 02.30
மாலை 05.30 ஆகிய இந்நேர ஒழுங்கில் புளியங்குளம் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் புறப்படும்.

குறிப்பு:- புதுக்குடியிருப்பு - புளியங்குளத்திற்கு 03.00 மணி நேரத்தில் பேருந்து சென்றடையும்.

### கிளிநொச்சி - புளியங்குளம்

காலை 05.00
காலை 06.00
காலை 06.30
காலை 07.00
காலை 07.30
காலை 10.00 ஆகிய இந்நேர ஒழுங்கில் கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் புறப்படும்.

எடுத்துக்காட்டு

| | | |
|---|---|---|
| கிளிநொச்சி | | 06.00 |
| முறிகண்டி | 06.30 | 06.50 |
| மாங்குளம் | 07.30 | 07.30 |
| புளியங்குளம் | 08.00 | |

### புளியங்குளம் - கிளிநொச்சி

காலை 10.00
பகல் 11.30
பகல் 01.00
மாலை 03.00
மாலை 05.30
மாலை 05.30 ஆகிய இந்நேர ஒழுங்கில் புளியங்குளம் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் புறப்படும்.

குறிப்பு- கிளிநொச்சி - புளியங்குளத்திற்கு 02.00 மணி நேரத்தில் பேருந்து சென்றடையும்.

குறிப்பு:- ஏனைய இடங்களுக்கான பேருந்துப்பணிகளின் நேர விரிப்பு இவ் நாளேட்டில் தொடர்ந்தும் வரும்.

தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-7333)

# நறுக்கென...



## பாதுகாப்பு ஏற்பாடுகள்

ஒரு புறம் சமாதான நகர்வுகள் நடந்து கொண்டிருக்கும் அதே சமயம் அரசாங்கம் பாதுகாப்பு படையினருக்கு வளம் சேர்க்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதும் தெளிவான விடயமாகிவருகிறது.

அண்மைக்காலங்களில் பிரிட்டன், சீனா, பாகிஸ்தான், இந்தியா என சிறிலங்கா பிரதமரும், அமைச்சர்களும் தாம் விஜயம் மேற்கொள்ளும் நாடுகள் ஒவ்வொன்றுடனும் மேற்கொள்ளும் ஒப்பந்தங்களில் பாதுகாப்பு தொடர்புடைய ஏதோ ஒரு வகையிலான உடன்படிக்கைகளும் அடங்கியுள்ளது என்ற விடயம் ரகசியமான விடயமல்ல.

அமெரிக்கா நேரடியாக சிறிலங்காப் படைகளுக்கு பயிற்சிகளையும் ஏனைய பாதுகாப்பு தொடர்பான ஆலோசனை களையும் தொடர்ச்சியாக வழங்கிவருவதும் தெரிந்த விடயம்தான். குறிப்பாக அமெரிக்க இலங்கைப் படையினர் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப்பயிற்சி நடவடிக்கைகள் ஆண்டுதோறும் வெவ்வேறு பெயர்களிலும், துறைகளிலும் நடைபெற்றே வருகின்றன.

அமெரிக்க படையினரும் இலங்கைப் படையினரும் இணைந்து கடந்த மூன்று வாரங்களாக நடாத்திய கூட்டு இராணுவப் பயிற்சி இப்போது முடிவடைந்துள்ளது.

சிறிலங்காவின் விசேட படையணியினரும் (specialeorce) கடற்படையினரின் விசேட படகுப்பிரிவினரும் இணைந்தே அமெரிக்கப் படையினருடன் இந்த பயிற்சி நெறியை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்காப்படையினரின் போர் வலு ஆற்றலை மேம்படுத்தவே இந்த பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

போர்முனையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்திமேற்கொள்வது தொடர்பாக விசேடபடையினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இது ஒரு புறமிருக்க அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையே பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்வது குறித்து அண்மையில் றிச்சர்ட் ஆர்மிரேஜின் சிறிலங்காவுக்கான விஜயத்தின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஆக: சமாதான முனைப்புக்களுடன் போர்த்தயாரிப்புக்களையும் சிறிலங்கா அரசு தீவிரமாக மேற்கொள்வதாகவே தெரிகிறது. சிறிலங்கா பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன அண்மையில் படையினர் எதற்கும்தயாரான நிலையில் எப்போதும் இருக்க வேண்டும் எனச் சொன்னது இப்போது நினைவுக்கு வரவே செய்கிறது.

சமாதானத்தை வரவேற்று பாராட்டும் நாடுகளே சிறிலங்காவுக்கு யுத்தத் தயாரிப்பிலும் உதவுவது தான் முரண்பாடான விடயம். ○



சமாதான நகர்வுகளின் ஓரம் சமாதான

## மேயரின் ஆதங்கம்

புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்தான பின்னர் சிறிலங்காவின் ஆளும் ஐ.தே.முன்னணி அரசின் அமைச்சர்கள் வடபகுதிக்கு குறிப்பாக யாழ் குடாநாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்வதென்பது மிகவும் சர்வசாதாரண மாகிவிட்டது.

முன்னர்... அதாவது ஈழப்போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் இயல்பான அமைதிநிலை நிலவிய காலத்தில் கூட இந்த அளவுக்கு சிங்கள அரசின் அமைச்சர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்தது கிடையாது. ஒவ்வொரு அமைச்சரினதும் வடபகுதிக்கான விஜயம் என்பது எத்தனை எடுபிடிகளுடன் எவ்வளவு கெடுபிடிகளுடன் நடக்கும் என்பதை எவருக்கும் விளங்கப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. பல இலட்சங்களை விழுங்கிவிடும் சமாச்சாரம் இதுவாகும். அது மட்டுமல்ல எவ்வளவோ நேர விரயங்களும் இதனால் ஏற்படுகின்றன.

அமைச்சர்களது விஜயம் எதனைக் குறிக்கோளாகக் கொண்டதாக இருந்தாலும் கூட அதனால் ஏற்படும் பொருள் விரயமும் நேரவிரயமும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது.

எனினும் இதுபற்றி எவரும் அலட்டிக்கொள்வதும் கிடையாது அக்கறை கொள்வதும் கிடையாது.

அரசுப்பணம் தானே என நினைக்கும் பலரும் அதனை மக்களின் வரிப்பணம் தான் என எண்ணத் துணிவதில்லை.

அண்மையில் மாத்தளை சமாதானக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் யாழ் மாநகர பிதா கந்தையா கூறிய சில வார்த்தைகளை நினைவில் கொள்வது இந்தச் சமயத்தில் நல்லது.

'அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதற்கு ஏற்படும் செலவுத் தொகையையும் ஏனைய அதனுடன் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு செலவாகும் பணத்தையும் மாநகரசபைக்குத் தந்தால் மக்களின் தேவைகளை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்ய முடியும்' என அவர் தெரிவித்துள்ளார்.

மாநகர பிதா கந்தையன் பல விடயங்களை இதன்மூலம் நறுக்கென உரைக்கும்படி சொல்லியுள்ளார் என்றே கூற வேண்டும்.

யாழ் மாநகரசபைக்கு அதன் நிர்வாகத்திற்கு மாநகருக்கான அபிவிருத்திப் பணிகளுக்கென அரசு போதியளவு நிதியை ஒதுக்கீடு செய்யவில்லை என்ற செய்தியை அவர் இதன் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஏன் அவரின் அலுவலகப் பாவனைக்குக் கூட ஒரு வாகனம் கிடையாது அவஸ்தைப்பட்ட அவருக்கு அண்மையில் ஒரு நிறுவனம் 'ஓட்டோ வாகனம் ஒன்றை அன்பளிப்புச் செய்ததுள்ளதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன'

இந்த நிலையில் யாழ் மாநகரசபை நிர்வாகம் எந்த வகையில் அமைந்துள்ளது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தேர்தலுக்கு கோடிக்கணக்கில் செலவு செய்து தேர்வாகும் நிர்வாகத்திற்கு உரிய நிதி ஒதுக்கப்படாவிடில் அந்தச் சபையால் என்ன பயன்?

மேயர் கந்தையன் தனது மன ஆதங்கத்தை இதன் மூலம் வெளிக்காட்டியுள்ளார்.

அரசு ஏனைய மாநகர சபைகளை எவ்வாறு கவனிக்கிறது என்பதற்கு அந்த மாநகரங்களின் வளர்ச்சிகளே சான்றாகும். வடக்கு கிழக்கு நிர்வாக அலகுகள் எப்போதுமே மாநகரத்தையே பாதித்ததுடன் அரசால் பார்க்கப்பட்டு வருகின்றன.



'சிறிலங்கா அரசாங்கம்

## ஜே.வி.பி.யின் இன்றைய மூச்சு

விடுதலைப் புலிகளுக்கு எல்லா வகையிலும் பணிந்து விட்டுக் கொடுக்கிறது

'சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளின் கைப்பாவையாகி விட்டது. அவர்கள் சொல்படி எல்லாம் கேட்கிறது'

'விடுதலைப் புலிகளுடன் அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டதன் மூலம் சிங்கள பௌத்த மக்களுக்கு துரோகம் செய்து விட்டது'

'ரணில் பிரபாகரனுக்கு நாட்டை தாரை வார்த்துக் கொடுக்கப் போகிறார்'

இவையெல்லாம் இன்றைய ஜே.வி.பியின் சிங்கள மக்களுக்கான எச்சரிக்கையுடன் கூடிய அச்சுறுத்தல்களாகும்.

குறிப்பாக விமல் வீரமன்ச என்ற ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளரின் இன்றைய கோஷம் மேற்சொல்லப்பட்ட கருத்துக்களைக் கொண்டதாகவே அமைந்துள்ளது.

தென்னிலங்கையில் ஜே.வி.பியினரின் சந்தர்ப்பவாத சோசலி சித்தாந்த கோஷம் படுதோல்வி கண்டுவிடும் வேளையில் வேறு எந்த வகையில் மாற்றுக் கருத்தையும் முன்வைக்கத் தெளிவற்ற நிலையில் இனவாதத்தை கையில் எடுத்துள்ள 'வீரவன்ச விடுதலைப்புலிகளை எதிர்ப்பதன் மூலமும, சமாதான நடவடிக்கைகளை நிராகரிக்க முயல்வதன் மூலமும் ஒரு பரபரப்பு அரசியலை நடத்த முயல்கின்றார்.'

அநுராபண்டாரநாயக்கா ஜே.வி.பியுடன் அவர்களின் விடுதலைப் புலிகள் மற்றும் சமாதான எதிர்ப்பு போராட்டங்களில் இணைந்து நிற்பதுவும் வீரவன்சவின் உளறல்களுக்கு ஒத்தூதுவதும் தான் இன்றைய சிறிலங்கா அரசியலின் நகைச்சுவை காட்சிகளாகி வருகின்றன.

'நீல' நிற பொதுசன ஐக்கிய முன்னணியும், சிவப்பு நிற ஜே.வி.பி.யும் தமது இணைந்த செயற்பாடுகளின் மூலம் தத்தம் சுயத்தன்மையை இழந்து போயுள்ளதுடன் 'யாரால் யார் கெட்டார் எனப் புலம்பும் நிலை நோக்கி நகர்வதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எதுவானாலும் இன்றைய ஜே.வி.பியின் உயிர்வாழ்தலுக்கும் விடுதலைப்புலிகள் பற்றிய அவர்களின் பேச்சுத்தான் மூச்சாக உள்ளது... ○



## தாய்லாந்தினை குவிமையப்படுத்த முனையும் சிறுபான்மைத் தலைமைகள்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையே தாய்லாந்தில் நடைபெறப் போகும் பேச்சுவார்த்தை தொடர்பாக பலரும் பலவிதமான கருத்துக்களை கொண்டு இயங்க முற்படுபவர்களாகவே உள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கும் இதனைப் பயன்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள நினைக்கிறது ரவூப் ஹக்கீம் இது விடயத்தில் முன்னுக்குப்பின் முரணாகவும், அரசுக்கு சார்பாகவும், சில வேளைகளில் அரசுக்கு எதிராகவும் கருத்துக்களை முன்வைத்து, இன்றைய அரசியல் நெருக்கடிக்குள் அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார்.

இதேவேளை மலையக மக்களின் பிரச்சினைகளையும் இந்த பேச்சு வார்த்தை வட்டத்திற்குள் கொண்டு வந்து தனது அரசியல் இருப்பை உறுதி செய்யும் போக்கில் இப்போது பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் இறங்கியுள்ளார்.

தாய்லாந்து பேச்சுவார்த்தையைத் தவறவிட்டால் மலையக மக்களின் உரிமைகளை வெல்வது என்பது சாத்தியமற்றதாகிவிடும் என்று மனோ கணேசன் தெரிவித்திருப்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஒரு காலத்தில் மலையகம் ஆங்கிலேயருக்கு அடிமையாக இருந்தது. இப்போது சிங்களவருக்கும் ,மலையகத் தலைமைகளுக்கும் அடிமையாகவுள்ளது. இந்த நிலை மாறவேண்டும். இதற்கு நாம் தொடர்ந்து போராட வேண்டும். இடையறாது போராடியதால்தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இன்று தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடைபெறப்போகின்றது எனத் தெரிவித்துள்ள மனோ கணேசன் இந்த பேச்சுவார்த்தைகளில் மலையக மக்களின் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றுள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் அனைத்து சிறுபான்மை இனத்தவரின் அபிலாசைகளையும் ஒன்றிணைக்கும் சக்தியாக உருவெடுத்துள்ளதையே இது காட்டுகிறது. முஸ்லிம்கள் வேறு மலையகத்தவர் வேறு என பிரிவு காட்டி நின்ற தலைமைகள் தாய் லாந்து பேச்சுவார்த்தையை தங்களது பிரச்சினைகளையும் முன்வைக்கும் களமாக தாய்லாந்து பேச்சுவார்த்தையைப் பயன்படுத்த நினைப்பது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு கிடைத்த மற்றொரு மகாத்தான வெற்றியென்றே கூறவேண்டும். ○



## மாகாண மட்டப் போட்டியும் கிளி. மாவட்ட உதைபந்தாட்ட அணியும்

உலகில் அண்மைய காலங்களில் அதிகபட்சமான விளையாட்டு ரசிகர்களை தன்னகத்தே ஈர்த்தெடுத்து தனித்துவம் பெற்று விளங்குவது உதைபந்தாட்டம்.

போர்ச்சூழல் காரணமாக பல ஆண்டுகளாக வெளிமாவட்ட உதைபந்தாட்ட அணிகள் போட்டிகள் எதிலும் கலந்து கொள்ள முடியாது போக தற்போது அந்நிலைமை மாறி மாகாணமட்ட போட்டிகளில் குதிக்கும் நிலையை அணிகளுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில் இவ்வணிகள் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை தவிர்க்க முடியாது எழுகின்றது.

அண்மையில் மாகாணமட்ட போட்டிகளில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அணிகளின் வரிசையில் எதிர்கொள்ள முடியாமல் சமகால திறண் நுட்பங்களை கையாள பூரண பயிற்சி பெற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட அணி களத்தில் குதித்தது.

தனித்துவமான பல திறமைவாய்ந்த வீரர்களை தன்னகத்தே கொண்டுள்ள கிளிமாவட்ட அணி ஒருங்கிணைந்த பயிற்சி அறவே பெறாமலும் வீரர்களுக்குள் எந்தவொரு ஒருங்கிசைவு இல்லாமலும் தனிப்போக்கில் விளையாடியதை அவதானிக்க முடிந்தது.

முதலாவது போட்டியிலேயே அம்பாறை அணியை எதிர்கொண்டு 4-2 என்ற பேற்றின் அடிப்படையில் தோல்வி அடைந்தது. இப் போட்டியை கிளிமாவட்ட அணி உண்மையில் சவாலாக எடுத்துக்கொள்ள வேண்டும். கடுமயான பயிற்சியும் நுட்பங்களும் தன்னகத்தே கைவரப் பெற்றுக்கொள்ள இளம் துடிப்புடைய அணிவீரர்கள் உணரவேண்டும். ஒவ்வொரு வீரனும் தோல்வியின் காரணத்தை தனிமையில் அமர்ந்து சிந்திக்க வேண்டும். வேறுமாவட்ட அணிகள் கையாளும் நுட்பங்கள், இன்று உலகளாவிய ரீதியில் அணிகளுக்குள் புகுத்தப்பட்ட விளையாட்டு நுட்பங்கள் இந் நுட்பங்கள் எமது அணிக்குள் எவ்வாறு புகுத்தப்பட வேண்டும். இவ்வாறு இந் நுட்பங்களை நாம் புகுத்த எடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் இத் திட்டங்களை நிறைவேற்ற நாம் யாரை அணுக வேண்டும் யாருடைய உதவிகள் தேவை. இதற்கு எமக்கு தேவைப்படும் கால அவகாசம் என்பவற்றை ஒவ்வொருவரும் உள்ளார்ந்த ரீதியில் ஊசிமருந்தாக ஏற்ற வேண்டும்.

அத்தோடு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை சார்ந்தோரும் இதை தங்களது பணியாகவும் முடியும் என்ற சவாலுடனும் ஏற்று பலமுடைய எதிர்கொள்ள கூடிய சக்திவாய்ந்த அணியை உருவாக்க மன்முவந்து முன்வர வேண்டும்.

இன்றும் பயிற்சிபெறும் எமது அணிகள்

(15ம் பக்கம் பார்க்க)

வருவது எதுவாயினும் அது கடந்து போயே தீரும் -யெல்லா வீலர் வில்காக்ஸ்

## வரிவிளம்பரம்

### பல்கட்டுதல்

பல்கட்டுதல், பல்கிளிப் போடுதல் நல்ல முறையில் நியாயமான விலையில் செய்து கொள்ளலாம். ஒளிச்சுடர் பல்கட்டுமிடம், மொறாயல், புதுக்குடியிருப்பு. (2102)

### மூக்கு கண்ணாடி

தரமான மூக்கு கண்ணாடிகளை காலதாமதமின்றி கொழும்பு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஒளிச்சுடர் மூக்கு கண்ணாடி அகம் (மொறாயல்), புதுக்குடியிருப்பு. (2101)

### பெற்றுக்கொள்ளவும்

வீரகேசரி, தினக்குரல், சுடரொளி பத்திரிகைகள் அடித்த விலைக்கே அனைத்து அறிவமுது பொத்தக சாலையிலும் கிடைக்கும். (சி.7329)

## பொதுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட பல்கலைக் கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிறு (01.09.2002) காலை 9.30 மணிக்கு கிளி/மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம் பெற உள்ளது. ஆகவே 2001ம், 2002ம் ஆண்டுகளில் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியை பெறத்தகுதியுள்ள அனைவரும் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அத்துடன் 2001ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்று பல்கலைக்கழகங்களில் பதிவுகளை மேற்கொண்டவர்களில் பதிவுகளை ரத்துச் செய்ய விரும்புவோர் உடனடியாக ரத்துசெய்து ஏனைய மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## அவசர கலந்துரையாடல்

யாழ் பல்கலைக்கழக 2ம் வருட முகாமைத்துவ (99/2000- 2000/ 2001) மாணவர்களிற்கான கல்வி சுற்றுலா சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று 03-09-2002 அன்று (செவ்வாய்க்கிழமை) காலை 10:00 மணிக்கு MHஉ மண்டபத்தில் இடம்பெற உள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

(2357) 2ம் வருட முகாமைத்துவ பிரதிநிதி

## 5ம் ஆண்டு நினைவில்



தோற்றம் 15 - 12 - 1973

வீரச்சாவு 26 - 06 - 1997

### கப்டன் கோகிலா

(ராஜேந்திரம் மைதிலி)

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட நேரடிமோதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

என்றும் நீங்காத நினைவுடன்
அன்புத் தம்பி

(2125)

## வவுனியா ஒப்டிகல்
## Vavuniya Optical



கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



30 (Bus Stand Complex) Vavuniya.

வவுனியா ஒப்டிகல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா.

உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.

(சி.7323)

## பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் புதிய கணனி வகுப்பு ஆரம்பம்

இந் நிறுவனத்தில் 01.09.2002 ஞாயிற்றுக்கிழமை அன்று கணனி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. எனவே இந்நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்கள், பணியாளர்கள் 31.08.2002 சனிக்கிழமை காலை 10.00மணிக்கு கிளிநொச்சியிலுள்ள பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தினர்,
கிளிநொச்சி.

சி-7337

## வாடகைக்கார் உரிமையாளர் கழகம்- வன்னி

## பொதுக்கூட்டம்

வாடகைக்கார் உரிமையாளர் கழகத்தில் உறுப்புரிமை பெற்ற ஊர்தி உரிமையாளர்களுக்கான பொதுக்கூட்டம் வரும் 01-09-2002 ஆம் நாள் ஞாயிறு மாலை 04.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மண்டபத்தில் தலைவர் திரு.வீ.சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெறும். அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

'நன்றி'

அன்ரனி பேசி சேவியர்,
துணைச்செயலாளர்,
வாடகைக்கார் உரிமையாளர்கழகம்,
வன்னி.

(சி-7040)

## கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடாத்தும்

## 80வதுசர்வதேச கூட்டுறவாளர் தினம் - 2002

காலம்: 31.08.2002 சனிக்கிழமை
நேரம் : மு.ப 9.30 - பி.ப 4.30
இடம் கிளி/மத்திய கல்லூரி (டிப்போ சந்தி)

### நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- தேசியக்கொடியேற்றல்
- கூட்டுறவுக் கொடியேற்றல்
- அகவணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- கௌரவ விருந்தினர் உரை
- கூட்டுறவாளர் உரை
- கூட்டுறவுப்பணியாளர் உரை
- நன்றியுரை

மதிய இடைவேளை

- கலை நிகழ்வுகள்
- நடனம்
- வில்லுப்பாட்டு
- பட்டிமன்றம்
- நாடகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

க.சிவகுமார்
விழாக்குழு செயலாளர்

(சி.7336)

## கரைதுறைப் பற்று ப.நோ.கூ. சங்கத்தின் சகல கிளைகளினதும் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம், செப்ரெம்பர் — 2002

கரைதுறைப்பற்று ப.நோ.கூ சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவு, பேராளர் தெரிவுகளுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் 01.09.2002ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பின்வரும் விபரப்படி நடைபெறும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். அன்றைய தினம் சகல கிளைகளினதும் அங்கத்தவர்களும் தவறாது தங்களின் கிளைப் பொதுச் சபைக்கூட்டத்தில் கலந்துகொண்டு மேற்படிதெரிவுகளை நடாத்தி உதவுமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

| கிளையின் பெயர் | கிளை இலக்கம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| சிலாவத்தை | 01 | கிளை நிலையம் |
| முல்லை வடக்கு | 02 | முல்லைத்தீவு ம.வி |
| முல்லை தெற்கு | 03 | கல்விப்பாடு அ.த.க.பாடசாலை |
| முள்ளியவளை கிழக்கு | 04 | கிளை நிலையம் |
| முள்ளியவளை மேற்கு | 05 | கிளை நிலையம் |
| தண்ணீரூற்று | 06 | தண்ணீரூற்று,கிளைநிலையம் |
| கணுக்கேணி | 07 | கணுக்கேணி கிராம மு.சங்கம் |
| முள்ளிவாய்க்கால் | 08 | முள்ளிவாய்க்கால் கிளைநிலையம் |
| மாத்தளன் | 09 | மாத்தளன் கிளைநிலையம் |
| வற்றாப்பளை | 10 | வற்றாப்பளை கிளை நிலையம் |
| கேப்பாப்பிலவு | 11 | கிளை நிலையம் |
| அளம்பில் | 12 | கிளை நிலையம் |
| செம்மலை | 13 | கிளை நிலையம் |
| குமுளமுனை மேற்கு | 14 | குமுளமுனை ம.வி மண்டபம்-I |
| குமுளமுனை கிழக்கு | 15 | கு/ம.வி மண்டபம் - II |
| கொக்குத்தொடுவாய் | 16 | கொக்குத்தொடுவாய் பாடசாலை |
| கொக்கிளாய் | 17 | தண்ணீரூற்று றோ.க.பாடசாலை |
| நீராவிப்பிட்டி | 18 | கொக்குத்தொடுவாய் பாடசாலை |

அ.மரியாம்பிள்ளை
தேர்தல் உத்தியோகத்தர்

(சி7038)

## மீன் பிடித்தொழிலாளருக்கான நற்செய்தி

மீன்பிடி. தொழிலை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மறைன் மல்ரிசேவிசஸ் நிறுவனத்தின் அடுத்த உற்பத்தியான

### "28' நீளமுடைய கண்ணாடி இழைபடகு" (வள்ளம்)

வெகுவிரைவில் வெளிவருகின்றது. தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

எமது பிற உற்பத்திகள்
$17^1/_2$'கிளிங்கர் வகைப்படகுகள்
18'தட்டை அடிப்பாக படகுகள்

இவற்றுடன் பழைய படகு உரிமையாளர்களின் நன்மைகருதி $17^1/_2$'கிளிங்கர் வகை படகுகளிற்கான

### புளோர் கண்வோல் (ஒட்டம்)

என்பனவும் ஓடருக்கு உற்பத்தி செய்யப்படுகின்றது.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
மறைன் மல்ரி சேவிசஸ்,
இரணைப்பாலை வீதி, இரணைப்பாலை.

(2127)

# பதிவும் பகிர்வும்

## சில மனிதர்களும் அரச பதவிகளும்



நாட்டில் பல அரச பதவிகள் இருக்கின்றன. அவை மக்களிற்காக சேவை செய்ய அதற்கான ஊதியத்தை மக்களின் வரிப்பணத்திலிருந்தோ அல்லது ஏதோ ஒரு வகையில் அரசு வழங்கி வருகின்றது. சில அரச பதவிகள் இருக்கின்றன. அவை கௌரவப் பதவிகளாகவும், மக்களின் நலன்கருதி சமூகத்தொண்டாக மக்களிற்கு சேவை செய்வதற்கு. இதற்கு சில அரச கொடுப்பனவுகள் உண்டு.

சமாதான நீதவான் ,மரணவிசாரணை என நீளும் இவர்களின் பணி ஏழை எளிய மக்களுக்கு அடிக்கடி தேவைப்படுவதுண்டு.

இவர்களிடம் மக்களொரு கையெழுத்திற்காகச் செல்ல வேண்டியுள்ளது. ஆனால் இவர்கள் அந்த ஏழை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யாது இழுத்தடிப்பதுண்டு.

பிறகு வாருங்கள்இப்போது நேரமில்லை. சில வேளைகளில் ஆளிருந்துகொண்டும் இல்லையென்பது பல சமாச்சாரங்கள்.

காரணம் இவர்கள் தாம் செய்யும் மக்கள் பணிக்கு பணம்எதிர்பார்ப்பதுதான். பணம்கொடுத்தால் காரியம் விரைவு என பலர் அங்கலாய்க்கின்றனர்.

எல்லோரும் அல்ல ஒரு சிலர்தான்.இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் எனக் கேள்வி.

## தேவை; புரிந்துணர்வு

பொருளாதாரத் தடையிருந்தபோது கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகள். பசனைளயில்லை, மருந்து இல்லை இதனால் போதிய விளைச்சலில்லை என அவர்களின் துன்பம் அதிகம்.

இப்பொழுது வயல் வெளிகளைப் பார்க்கும்போது சந்தோசமாக இருக்கின்றது. செழித்து வளர்ந்து பார்க்கும் இடமெல்லாம் பச்சைப் பசேலென்றுஇருக்கின்றது. காரணம் பசளை மருந்தின் வரவு.

அத்தோடு கூடவே ஒரு கதை ,சிலருக்கு வயல் எரிந்து போய்விட்டதாம். காரணம் அதிக பசளை மருந்தின் பாவனை.

ஏன் அதிக பணத்தை செலவழிப்பதோடு பயிர்களையும் நாசமாக்கி எதிர்பார்த்த விளைவையும் பெறமுடியாமல் திணறுவதோடு மண்ணின் வளத்தைப் பாழாக்குவான்.

செயற்கை உரங்கள் மண்ணிற்கு கேடு என்று எத்தனையோ தடவை விவசாயிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதும் புரிந்து கொள்ளவில்லை.

13ம் பக்க தொடர்ச்சி.....

**மாகாண.........**

20 ஆண்டுகளுக்கு முன் இருந்த விளையாட்டு முறைகளையே கையாண்டு பயிற்சி பெறுவதை காணமுடிகின்றது. இன்னொரு விடயம் வீரர்களுக்குள் காணப்படுகின்ற முரண்பாடுகள் தலைக்கனங்கள் இவை உண்மையில் தமது அணியை பின்னடைவுக்கு அழைத்துச் செல்லும் ஒரு பாலம் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். Praise in Public and Criticize in Pravate என்று சொல்வார்கள். அதாவது பகிரங்கமாக பாராட்டு தனிப்பட்ட முறையில் விமர்சி என்ற பண்பு ஒவ்வொரு வீரனுக்கும் வளர வேண்டும். களத்தில் தவறு செய்யும் வீரனைத் தட்டிக் கொடுக்க வேண்டும் தவிர திட்டித் தீர்க்கக் கூடாது. பிழைகளை ஒன்று கூடி தனிமையில் கதைக்க முயற்சிக்க வேண்டும்.

Right man for the Right Job என்பார்கள் அதாவது இது அவனால் முடியும் என்றால் அப்பொறுப்பை அவனிடம் கையளிக்கலாம். ஒரு அணியில் முகம் பார்த்தோ சலுகையிலோ இடமளிக்க முடியாது. இது அவ் அணியின் அழிவுக்கே வழிவகுக்கும் என்பதை பயிற்றுவிப்பாளர்களும், நடத்துநர், பொறுப்பாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மொத்தத்தில் எமது கிளி.மாவட்டம் உதைபந்தாட்டத்தில் தனக்கும் ஒரு இடம் உண்டு என தலைநிமிர்த்தி பிரகாசிக்க அனைத்து தரப்பினரும் பொறுப்புகளை தமதாக்கி செயற்படுவது இன்றியமையாத ஒன்றாகவுள்ளது.

இதற்கு எமது மாவட்டத்தில் பல்வேறு சுற்றுப் போட்டிகளை நடாத்த ஏற்பாடு செய்வதுடன் ஒவ்வொரு கழக அணி வீரர்களுக்கும் உதைபந்தாட்ட சட்ட விதிகள் அறியச் செய்யப்பட வேண்டும். எனவே இதில் சமூகத்தினர் கூடிய ஆர்வம் கொள்ள வேண்டும். அவர்களின் ஊக்குவிப்பில் பல அணிகள் பலம் பெற வேண்டும். இதன் ஊடாக முரண்பாடுகள் இன்றி முன்னணி பெற்று கிளிமாவட்ட அணி பிரகாசிக்க வேண்டும். ஏனைய மாவட்ட அணிகள் மூக்கில் விரல் வைக்க வேண்டும். கடும் பயிற்சி முயற்சி தரும், திறமை உயர்ச்சி தரும்.

## தேவை; எச்சரிக்கை உணர்வு



எவ்வளவு விழிப்புணர்வு வாரங்களை நடத்தினால் என்ன கருத்தூட்டல்களை வழங்கினால் என்ன? எச்சரிக்கைகளை விடுத்தால் என்ன? சிலருக்கு இவை செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்து வருகின்றது.

அண்மையில் விசுவமடு பகுதியில் அடுப்புக்கு அணையாக ஒரு எறிகணையை வைத்து சமைத்த போது அது வெடித்து ஒரு சிறுமி உடல்சிதறிப் பலியாகிப்போனார்.


அந்தச் சிறுமியோடு ஐந்தறிவு கொண்ட ஒரு நாய், ஒரு பூனை என எறிகணை வெடித்ததால் கொல்லப்பட்டுள்ளன.

உண்மையில் இப்பிரதேசம் இராணுவத்தினர் கைப்பற்றிய ஒரு பகுதியல்ல. யா.ரோ இராணுவப் பிரதேசத்திலிருந்து கொண்டு வந்து வைத்திருந்த இவ் எறிகணை வெடித்து அநியாயமாக அந்த உயிர்கள் பலியாகிப் போயின.

ஏன்?பரீட்ஸ்சயமற்ற பொருட்களை வீடுகளில் வைத்திருப்பான். ஏன் இராணுவ பிரதேசங்களிலிருந்து அவற்றைக் கொண்டு செல்வான். இவற்றைத்தவிர்ப்பதன் மூலம் அநியாய உயிரிழப்புக்களை தவிர்த்துக்கொள்ளலாம் அல்லவா?

எப்போதுதான் புரிந்துகொள்ளப் போகின்றார்களோ?

## தென்னிலங்கை ஊடகவியலாளருக்கு ஒரு பகிரங்க கடிதம்



ஹிட்லரின் காலத்தில் ஜேர்மனியர்கள் யூதர்களைக் கொன்று குவித்தனர். அப்போது அவர்களின் மனச்சாட்சி அவர்களுக்கு – தாம் செய்வது தவறு என்று கூறவில்லை. காரணம் மனச்சாட்சி அந்தளவுக்கு அவர்கள் செய்வதைப் புரிந்து கொள்ளாத வகையில் இருந்தது. அல்லது அந்தளவுக்கு அவர்களின் மனச்சாட்சி தவறாகப் பக்குவப்படுத்தப்பட்டிருந்தது. ஹிட்லரின் காலத்தில் சினிமாப் படங்கள் வெளிவரத் தொடங்கியிருந்ததுடன் ஓரளவுக்கு நவீனப்படுத்தப்பட்டிருந்தன. அப்போது அதற்கு மக்களிடம் இருந்த செல்வாக்கைப் புரிந்து கொண்ட ஹிட்லர் அதனை தன்னுடைய யூத எதிர்ப்புக் கொள்கைக்குப் பயன்படுத்தினான். அப்போது வெளிவந்த 99 வீதமான திரைப்படங்களிலும் யூதர்கள் கொடுமையானவர்கள். அதிக வட்டி வசூலிப்பவர்கள். ஜேர்மனியர்களைச் சுரண்டித் தமது செல்வத்தைப் பெருக்கிக் கொண்டவர்கள் என்ற தொனியில் திரைப்படங்கள் வெளியிடப்பட்டன.

திரைப்படங்களின் நிலை இவ்வாறெனில்... பத்திரிகை, வானொலி போன்றவற்றைச் சொல்லத் தேவையில்லை. அவை ஒருபடி மேலே சென்று யூத எதிர்ப்புக் கொள்கைகளைப் பரப்பி வந்தன.

இலட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டபோது, அதனை ஜேர்மனிய மக்கள் ஒரு பாவச் செயலாக நினைக்கவில்லை. மாறாக யூதர்களுக்குக் கிடைத்த தண்டனையாகத்தான் நினைத்தார்கள். இதற்கு முக்கிய காரணம் அப்போது ஜேர்மனியில் இருந்த ஊடகங்கள்தான். இன்று அதே யூதர்கள் பாலஸ்தீனியர் களின் பிரதேசத்தைக் கைப்பற்றி அங்கு பலவந்தமாகக் குடியேறி, ஆக்கிரமித்துள்ளனர். இப்போது யூத மக்கள் தாம் செய்வது சரி என்று நினைக்கின்றனர். தாம் இழந்த நாட்டை மீட்கப் போராடும் பாலஸ்தீனியர்களைப் பயங்கரவாதிகள் என்று வர்ணிக்கின்றனர். இதையே அமெரிக்கா போன்ற நாடுகளும் சொல்கின்றன.

அரசியல்வாதிகளுக்கும் புத்திஜீவிகளுக்கும் தாம் சொல்வது தவறு என்று தெரிந்தாலும், பொதுமக்களில் 85 வீதமானவர்கள் தாம் செய்வது, நினைப்பது சரி என்றே நினைக்கின்றனர். இதில் அமெரிக்கா, போன்ற நாடுகளில் உள்ள மக்கள் விதிவிலக்கல்ல. ஏன் கனேடியப் பத்திரிகைகள் கூட பாலஸ்தீனக் கைதிகளுக்கு யூதக் காவலர்களில் தண்ணீர் கொடுக்கும் காட்சிகள் மட்டுமே வெளியிடப்பட்டன. அந்தப் பாலஸ்தீனியர்களைக் கைது செய்யும் போது அகதி முகாமில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டவை வெளிவரவில்லை. அது குறித்து விசாரிக்கக்கூட இஸ்ரேல் ஐ.நா. சபையை அனுமதிக்கவில்லை. அதை ஒரு தவறாகச் சர்வதேச சமூகம் கணிக்கவுமில்லை. இதற்குக் காரணம் அமெரிக்காவால் உலகில் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும், அல்லது யூதர்களால் அமெரிக்காவில் தமது செல்வாக்கில், கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஊடகங்கள் என்றால் அது மிகையாகாது.

"அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்" என்பது பழமொழி. "அடிக்கொரு தரம் பிரசுரித்தால், பசுவும் பயங்கராவதியாகிவிடும்" என்பது இப்போது புதுமொழி. உண்மை வாசல் தாண்டுவதற்கு முன், பொய் ஊரைச் சுற்றிக்கொண்டு வந்து விடுகின்றது. அவ்வளவு தூரம் ஊடகங்கள் இன்று உலகைச் சிறுப்பித்துவிட்டன.

முன்னரெல்லாம் "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்றிருந்தது. இப்போது "ஊடகங்கள் எவ்வழி, ஊர் உலகம் அவ்வழி; என்று மாறிவிட்டது. இன்றைக்கு இலங்கையின் இனப்பிரச்சினையைச் சிங்கள மக்கள், உங்கள் ஊடகங்களின் வாயிலாகத்தான் பார்க்கின்றனர். வெள்ளை மனதோடு போராடும் தமிழர்களை, சிங்கள மக்கள் ஊடகங்கள் எனும் கலர் கண்ணாடி களினூடாகத்தான் பார்க்கின்றனர்.

போராளிகளை நீங்கள் பயங்கரவாதிகள் என்கிறீர்கள். அப்பாவிச் சிறார்கள் விமானக்குண்டில் இறந்தால் புலிப் பயங்கரவாதிகள் இறந்ததாகக் கூறுகின்றீர்கள். புத்தர் பிறப்பதற்கு முன்பே பௌத்த சமயம் இலங்கையில் இருந்தது என்று யாராவது தேரர் சொன்னால் அதனை வேதவாக்காக வெளியிடுகின்றீர்கள். வடக்கின் யுத்த கோரம், பொருளாதாரத் தடையின் பாதிப்பு என்பவற்றை நீங்கள் மறைத்து வெளியிடுவதால் சிங்கள மக்கள் அதன் உண்மை நிலையைப் புரியாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு அதைப் புரியவைப்பதற்காகவே தெற்கில் குண்டுத் தாக்குதல்களை நடத்திக் காட்ட முடியுமா?

அண்மையில் தம்மைச் சந்தித்த தென் இலங்கை ஊடகத்துறையினரிடம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் சொன்னதை மறக்கமுடியாது. அதையே அவர் மீளவும் தம்மைச் சந்தித்த ஊனமுற்ற படையினரிடமும் தெரிவித்தார். இலங்கையின் இனப்பிரச்சினை தீராது இழுபடுவதற்கும், யுத்தத்தின் கோரத்திற்கும், தென்னிலங்கை ஊடகங்களே காரணம் என்ற தொனிப்பட, அவர் தெரிவித்திருந்தார்.

இதில் பொதிந்துள்ள உண்மை அவரின் அடிமனதின் ஆழத்தில் இருந்து வந்ததாகும். இதில் உள்ள எச்சரிக்கை அவரின் தீர்க்க தரிசனத்தைக் காட்டுவதாகும். அதாவது, தற்போதைய சமாதான முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டால், அதற்கு முழுப்பொறுப்பும் ஊடகங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். தமிழ்ச் சிறார்கள் கொல்லப்பட்டபோதும், அனாதைகளாக்கப்பட்டபோதும், வீடுகளை விட்டு துரத்தியடிக்கப்பட்டபோதும் அவர்களின் கல்வி நிலையங்களில் படையினர் நிலைகொண்டிருந்த போதும், கவலைப்படாத நீங்கள் – சிங்கள ஊடகங்கள், சிறார்களை விடுதலைப்புலிகள் பலவந்தமாகப் பிடித்துச் செல்வதாகக் கவலைப்படுகின்றீர்கள். இதுவரை சிறிலங்கா அரசால் கைப்பற்றப்பட்ட ஒரு சிறுவனின் சடலத்தையாவது உங்கள் பத்திரிகையாளர்கள் பாத்திருக்கின்றார்களா?

இன்னமும் புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசு நிறைவேற்றாது இழுத்தடிக்கும் நிலையில் புலிகள் ஒப்பந்தத்தை மீறுவதாகப் பொய் கூறுகின்றீர்கள். ஒருவர் மீது ஒருவர் பரஸ்பரம் நல்லெண்ண சமிக்ஞையைக் காட்ட வேண்டிய இந்த நேரத்தில் – பாதிக்கப்பட்ட இரு பகுதியின் கைகளைப் பிடித்திழுத்து கைகுலுக்கச் செய்ய நோர்வே சிரப்படும் போது கைகுலுக்கச் சந்தனம் பூசிய கையைச் சகதி என்று கூக்குரல் இடுகின்றீர்கள். முரண்பாடுகளுக்கிடையில் சில ஒற்றுமையைக் கண்டு அவற்றை மட்டுமே கூறும் நோர்வேயின் கூற்றுக்களை மறைத்து, ஆடுகளை மோத விட்டு இரத்தத்தை குடிக்கக் காத்திருக்கும் வல்லரசுகளின் பொய் அறிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றீர்கள். உலகில் போதை வஸ்து இல்லாத, கள்ளர் பயமில்லாத, கள்ளச் சாராயமில்லாத ஆபாசப்படம் இல்லாத பிரதேசமென்றால் அது புலிகளின் பிரதேசம் என்றும், வடக்கு கிழக்கை மட்டுமல்ல, முழு இலங்கையையுமே புலிகளிடம் ஒப்படைத்தால் நல்லது என்று கூறிய – புலிகளால் விடுதலை செய்யப்பட்ட சிங்களப் படையினரின் நாக்குகளை நீங்கள் நறுக்கிவிட்டீர்கள்.

ஆனால் – உலகில் கட்டுப்பாட்டுக்கும் ஒழுக்கத்துக்கும் பெயர் பெற்ற புலிகள், சிறார்களின் மீது பாலியல் வன்முறையைப் பிரயோகிப்பதாக நாக்கூசாது அமெரிக்க அதிகாரிகள் பொய்யாகக் கூறுவதை நீங்கள் மறுபிரசுரம் செய்கிறீர்கள். அதைவிடுத்து புலிகளால் விடுதலை செய்யப்பட்டோர் சொல்வதை எழுதுங்கள். ஒன்றை மட்டும் மறந்து விடாதீர்கள்... நேற்றைய அழிவுகளுக்கு ஊடகங்கள் சாட்சிகளாக இருக்கலாம். ஆனால் நாளைய அழிவுகளுக்கு ஊடகங்களே காரணமாக இருக்கக் கூடாது.

நன்றி

இப்படிக்கு

வாசகன்


## பாராட்டுகிறோம்

மனிதவள அபிவிருத்தி கல்வி மற்றும் கலாச்சார அமைச்சு ஐ.டீ.ஏ நிறுவன ஆதரவில் பாடசாலை ஆசிரியர்களுக்கிடையே நடாத்திய நாடளாவிய கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் (தமிழ்மொழி மூலம்) முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட எமது தொலைக்கல்வி சிரேஸ்ட போதனாசிரியர்

திருமதி மீனலோசினி இதயசிவதாஸ் அவர்களை

கிளி.மாவட்ட தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்கள் சார்பில் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஆசிரிய மாணவர்கள்,
தொலைக்கல்வி மத்திய நிலையம்,
கிளிநொச்சி.

(2358)


நல்வாழ்வின் நிமிடங்கள் தங்கள் முடிவு நோக்கி, விரைந்து செல்கின்றன. • -வில்லியம் ஷேக்ஸ்பியர்

# நேர்நோக்கு

## மக்கள் ஆணையே முக்கியம்

விடுதலைப் புலிகள் மீதான சிறிலங்கா அரசின் தடையை நீக்குவது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் தென்பகுதி எதிர்க்கட்சிகள், இனவாத அமைப்புக்கள், பௌத்த சங்கங்களிடையே இப்பொழுது நடைபெற்று வருகின்றது. இந்த அமைப்புக்களும் கட்சிகளும் வழக்கம் போலவே இனவாதப் பிரச்சாரங்களில் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றன. சில அமைப்புக்கள் உறுதியாக தடை நீக்கப்படக்கூடாது என வாதிட்டு வரும் அதேவேளை வேறுசில பேச்சுவார்த்தைகள் நடைபெற்று ஓர் இணக்கப்பாடு காணப்படும் வரை தடை நீக்கம் கூடாது என தெரிவிக்கின்றன.

அதாவது ஒருதரப்பு பேச்சுவார்த்தை கூடாது என வாதிடுகையில் மறுதரப்பு இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப்புலிகள் மீது அழுத்தம் போடுவதற்கு புலிகள் மீதான தடையைப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறுகின்றன என்றே கூறலாம். ஆனால் அடிப்படையில் இவ்விருசாராரும் புலிகள் மீது இராணுவரீதியான அழுத்தத்தை அல்லது அரசியல் ரீதியான அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டுமென்ற விருப்புடையனவாக இருக்கின்றன என்பதே உண்மை.

இராணுவரீதியான அழுத்தங்களை விரும்புவோர் புலிகளை இராணுவரீதியாகப் பலவீனப்படுத்திவிட அல்லது அடித்துவிட வேண்டும் எனக் கருதுகின்றனர். இதில் ஜே.வி.பி, சிகல உறுமய போன்ற கட்சிகளும் சில சிங்கள இனவாத அமைப்புகளும் அடங்குகின்றன. ஆனால் இது சாத்தியப்பாடான ஒன்றல்ல என்பது கடந்த 20வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற யுத்தம் நிருபித்திருக்கிறது. தற்போது எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்றுள்ள பொதுசன ஐக்கிய முன்னணி தனது ஏழு வருட ஆட்சிக்காலத்தில் சுமார் 6வருடங்கள் இதற்காகவே முயன்றது.

பெருமளவான பணச்செலவு உயிரிழப்புகள், உடமையிழப்புகள், மத்தியில் தனது அரசியல் வாழ்க்கையைக் கூடப் பணயம் வைத்து சிறிலங்காவின் வளம் முழுவதையும் பயன்படுத்தி மேற்கொண்ட பாரிய யுத்தம் சிறிலங்காவை சகல வழிகளிலும் படுகுழியில் தள்ளவே வழிவகுத்தது. அதன் ஆட்சிக்காலத்தின் இறுதியில் இந்த யுத்தத்தை எந்த வழியில் முன்னெடுப்பது? என்று தெரியாத நிலையில் சிக்கிக்கொண்டது.

இந்த யுத்தத்தில் இணைந்துகொண்டு போராட சிங்கள இளைஞர்கள் தயாராக இல்லை. முன்னைய ஆட்சிக் காலத்திலும் புதிய ஆட்சியும் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் பயனைத் தரவில்லை.ஜே.வி.பி, சிகல உறுமய போன்றன கூட ஆட்சேர்ப்பை ஊக்குவித்த போதும் அது வெற்றி தரவில்லை.

இப்போது சிறிலங்கா அரசாங்கம் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டு அரச ஊழியர்களின் சம்பளப் பணத்தைக்கூட வழங்கமுடியாத நிலையில் உள்ளது.

இந்நிலையிலிருந்து மீட்சி பெற சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேணடும் என்பதே சிறிலங்காவில் பெரும்பாலானோரதும் உலக நாடுகளின் கருத்துமாகும்.

கடந்த காலத்தில் இராணுவ ரீதியாக நடவடிக்கைகளை சிறிலங்கா அரசாங்கங்கள் மேற்கொண்டு வருகையில் எவ்வாறாயினும் போராட்டத்தை நசுக்கிவிட காலத்துக்குகாலம் கொண்டுவரப்பட்ட சட்டங்களில் ஒன்றாகவே புலிகள் மீதான தடை அமைந்தது.

அதேபோல் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற பெயரின் 1979ஆம் ஆண்டு ஜூலை மதம் கொண்டு வரப்பட்ட சட்டமூலம் மக்கள் போராட்டத்திற்கு வழங்கிய ஆதரவை தடுக்க சட்டத்தைக் காட்டி மிரட்டும் ஒரு முயற்சியாகவே இருந்தது. அதாவது இந்தச் சட்டமூலம் போராட்டத்தில் ஈடுபடுவோரை கைது செய்து காலவரையறையின்றி சிறையில் வைக்கவும் ஆதரவாளர்களை மிரட்டவும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இந்தச் சட்டமூலம் விடுதலைப்போராட்டத்தின் வேகத்தை அதிகரிக்க உதவியதே தவிர குறைக்க எதுவிதத்திலும் பயன்படவில்லை.

இதன்பின்னர் 1983 ஆகஸ்டில் கொண்டுவரப்பட்ட 6ஆவது திருத்தச் சட்டமூலமும் பெயரளவிலான சட்டமூலமாக அல்லது பயனற்ற ஒன்றாகவே அமைந்தது.

இவ்வாறே விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து 20 வருடங்களுக்கு முன்னரே சட்டம் கொண்டுவரப்பட்ட போதிலும் அச்சட்டத்தால் விடுதலைப் புலிகள் நடத்திய ஆயுதப்போராட்டத்தை எதுவிதத்திலும் தடுத்துவிட முடியவில்லை. மாறாக அப்போராட்டம் வளர்ச்சி பெற்று இன்றைய உயர்நிலையை அடைந்துள்ளது.

தற்போது இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வுகாண்பதற்கான முயற்சிகள் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றன. சிறிலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே முதற் சுற்றுப் பேச்சுகள் நடைபெறுவதற்கான திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் புலிகள்மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முன்வந்துள்ளது.

அரசியல்ரீதியான பேச்சுக்களின்போது சட்டபூர்வமற்ற ஒரு நிலையில் இருந்துகொண்டு பேச்சுக்களில் பங்குபற்ற முடியாது என்பது புலிகளின் நிலைப்பாடாக இருக்கிறது.

இதற்கு அமைவாக புலிகள் மீதான தடைநீக்கம் குறித்த அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டதையடுத்து தென்பகுதியில் வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் எழுந்துள்ள இந்தக் கூக்குரல்களுக்குப் பின்னரும் அரசாங்கம் எவ்வாறான நடைவடிக்கையில் ஈடுபடப்போகிறது என்பதை சிலவாரங்களுக்குள் அறிந்துகொள்ள முடியும். முதலில் ஒருமாத காலத்துக்கு மட்டும் தடைநீக்கம் பின்னர் மாதம் மாதம் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்ததப் பொறுத்து நீடிப்பது என்றொரு திட்டத்தை அரசாங்கம் முன்வைக்கலாம் என்றொரு தகவல் வெளிவந்துள்ளது.

இவ்வாறு மாற்றுவழிகள் மூலம் இனவாதிகளைச் சமாதானப்படுத்த அரசாங்கம் முயலுமாயின், அது பேச்சுவார்த்தைகளுக்கு ஊக்கமளிக்கும் ஒன்றாக இராது.மாறாக மக்கள் , ஐக்கிய தேசிய முன்னணிக்கு வழங்கிய ஆணையின் அல்லது அனுமதியின் அடிப்படையில் அரசாங்கம் செயற்படுவதே பரஸ்பரம் இருதரப்பினருக்கும் இடையே நம்பிக்கை கட்டியெழுப்பப்படவும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெற்று தீர்க்கமான பெறுபேறுகளைப் பெறவும் வழிசமைப்பதாக இருக்கும்.

-வேலவன்

## பகிரங்க அறிவித்தல்

தமிழீழ மாவட்ட நீதிமன்று - மன்னார்

வழக்கிலக்கம்:-101/ 02
தன்மை:-மணநீக்கம்

திரு. செல்லையா கதிர்காமநாதன்,
நோயாளர் நலன்புரிச்சங்கம்,
முழங்காவில் (வழக்காளி)
-எதிர்-
திருமதி. கதிர்காமநாதன் யோகேஸ்வரி
மேற்பார்த்து கந்தையா மணி
கடற்கரையடி, 03ம் பிட்டி,மன்னார்.

மேற்படி எதிராளிக்கு,

இவ் வழக்கில் வழக்காளியானவர் 2002/07/25 அன்று எதிராளியான உமக்கு எதிராக தனக்கும் உமக்கும் இடையிலான திருமணப்பதிவை இரத்து செய்யுமாறு கோரி மணநீக்க வழக்கொன்றைத் தாக்கல் செய்தபோது அவ்வழக்கின் அழைப்பாணை வழக்கறிக்கை என்பவற்றை உமக்கு சேர்பிக்க மன்று நடவடிக்கை எடுத்து 16/08/2002 அன்று வழக்குக்கு கூப்பிடப்பட்டபோது எதிராளியான நீர். குறித்த முகவரியை விட்டு யாழ்ப்பாணம் சென்றுவிட்டதாக மன்றில் முறைநிறைவேற்றுனரின் அறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டதால் இவ்வழக்கின் தன்மை கருதி எதிராளியான நீர் மன்றில் சமுகம் கொடுக்க ஆவன செய்யும் வகையில் உமக்கு இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது. எனவே இவ்வழக்கில் உமக்கு ஆட்சேபனைகள் அல்லது கருத்துக்கள் இருப்பின் இம் மன்றில் நீர் நேரடியாகவோ அல்லது உமது நிலையில் சட்டப்படியான அக்கறையுடையோர் ஊடாகவோ மன்றில் தோன்றித் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றீர், தவறின் மன்று இவ்வழக்கை தொடர் சட்ட நடவடிக்கைக்கு எடுத்து ஒருமுக விளக்க நடவடிக்கையூடாக தீர்வு காணும் என்பதையும் உமக்கு இப்பகிரங்க அறிவித்தல் ஊடாகவே வெளிப்படுத்துகின்றோம்.


மன்றின் கட்டளைப்படி

வரைவு
...............
திரு. இரா சரவணபவானந்தன்
வழக்காளியின் சட்டத்தரணி
பூனகரி

பொ. சுப்பிரமணியம்,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
மன்னார்.

(2359)


## படமும் தகவலும்



தென்னாபிரிக்காவில் நடைபெற்ற அபிவிருத்திக்கான புவி உச்சி மாநாட்டின் பத்துநாள் நிகழ்வுகளின் ஆரம்ப நாளன்று நடைபெற்ற வரவேற்பு மற்றும் கலாச்சார நிகழ்வின்போது தென்னாபிரிக்க ஜனாதிபதி தாபூமிவேக்கி கையில் ஒரு பூகோள உருண்டையைத்தாங்கிய வண்ணம் ஒரு சிறுவனை அரவணைத்துள்ளதைப் படத்தில் காணலாம். இந்த மாநாட்டில் நூற்றுக்கு மதிகமான உலகத் தலைவர்களும், ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான தூதுக் குழுவினரும் கலந்து கொண்டனர். 25.08.2002ல் இந்த நிகழ்வு ஆரம்பமானது.



முன்னாள் பாகிஸ்தான் சனாதிபதி பெனாசிர் பூட்டோ லண்டனில் நடைபெற்ற பேரணி ஒன்றில் உரையாற்றும்போது குழுமியிருந்த மக்களுக்கு கையசைத்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். திருமதி பூட்டோ இந்த உரையின்போது பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளரான சனாதிபதி பர்வேஷ் முஷரப் அவர்களை மிகவும் கடுமையாகக் கண்டனம் செய்தார். பாகிஸ்தானில் அக்டோபரில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான தனது மக்கள் கட்சியின் பிரச்சார நடவடிக்கைகளை திருமதி பூட்டோ ஆரம்பித்துள்ளார்.



ஈராக்கின் புலனாய்வுப் பிரிவுத்தலைவர் தாகீர் ஜலீல் ஹாபுஸ் அண்மையில் ஈராக்கில் தன்னைத்தானே சுட்டுக் கொண்டதாகக் கூறப்படும் புகழ்பெற்ற இஸ்லாமிய தீவிரவாதியான அபூ நிதால்லின் புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களைக் காட்சிப்படுத்துகிறார்.



சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் டிரோன்பெர்ணான்டோ அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தபோது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவர்களைச் சந்தித்து உரையாடினார். அமெரிக்காவில் நடந்த சர்வதேச ஜனநாயகத்தின் ஒன்றியத்தின் (I.D.U) கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சித்தலைவரும் சிறிலங்காவின் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு ஆகஸ்ட மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.